தர்மசக்கரம்



சித்தார்த்தி ௵ ஆனி ௴ சக்கரம் 28 ஆரம் 6

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

தர்மசக்கர சந்தாதாரர்களின் விலாசங்களைத் தகரப் பிளேட்டுகளில் நிரந்தர மாகச் செதுக்கி வைத்துள்ளோம். அவ்விலாசங்களை ஒவ்வொரு மாதமும் தர்ம சக்கர இதழைச் சுற்றி அனுப்பும் மேல் கவரில் பதிவு செய்து, சரிபார்த்து, அனுப் பப்பட்டதற்கு ரிகார்டு செய்துகொண்டு பின்னர் இதழ்களைத் தபாலில் சேர்க் கிறோம். அவ்வளவு செய்தும் இதழ்கள் தங்களுக்கு வந்து சேராவிடில் அதற்கு மூன்று காரணங்கள் உள.

1. சரியான விலாசம் தாங்கள் தராதிருந்தால் கிடைக்காது. ஆதலால் தங்கள் விலாசத்தைச் சரிபார்த்துக் குறையிருப்பின் தெரிவியுங்கள். விலாச மாற்றம் இருக்குமாகில் உடனுக்குடன் தெரிவிக்கவேண்டும். இதழ்கள் முறை யாக விரைவில் தங்களுக்கு வந்து சேருதற்கு பின்கோடு எண் சரியாக இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கிறதா என்பதைக் கவனித்து மாறுதல் இருப்பின் தெரிவிக்கக் கோருகிறோம்.

2. தாங்கள் இல்லாதபொழுது மற்றவர்கள் பெற்றுத் தங்களிடம் தராது இருந்திருக்க வேண்டும். ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதி தங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்புகிறோம். தாங்கள் ஊரில் அவ்வமயம் இல்லாதிருக்க நேருகையில் இதழைப் பெற்றுத் தங்களிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்துகொள் ளுங்கள்.

3. தபாலில் வழிமாறிப் போயிருக்கலாம். தமிழ் மாதம் பத்து தேதிகளாகி யும் தங்களுக்குக் கிடைக்கவில்லையேல் எங்களுக்குத் தெரிவியுங்கள். இதழ் கிடைக்காத விவரத்தை அந்தந்த மாதம் பத்து தேதிக்குள் தெரிவிக்கவேண்டும்.

தர்மசக்கர இதழைச் சுற்றி அனுப்பும் அட்டையிலுள்ள விலாசத்தில் தங் கள் சந்தா எண் இருக்கிறது. அதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். தாங் கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர் கூப்பனிலும் தங்கள் சந்தா எண்ணைத் தவருது குறிப்பிட வேண்டுகிறோம்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் செய்தித் தாள்களில் உள்ளவை போன்று தாற்காலிகமானவைகளாக இல்லாமல் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சி யாக இருக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் திரும்பவும் வாசிக் கும் ஒரு நூலாக அமைகிறது. ஆதலால் ஒரு ஆண்டுக்கான பொருளடக் கத்தை அச்சாக்கி மார்கழி மாத இதழுடன் வைத்து அனுப்புகிறோம். தை முதல் மார்கழி முடிய பன்னிரண்டு மாத தர்ம சக்கர இதழ்களையும் அப்பொருளடக் கத்தை வைத்துப் பைண்டு செய்துகொண்டால் ஒரு நல்ல புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும் மற்றவர்களுக்குப் படிக்கத் தருதற்கும் வசதியாக இருக்கும்.

தங்களுக்கு வரும் தர்ம சக்கர இதழ்களைப் பலரும் படித்துப் பயனடை வதற்கு ஆவன செய்யக் கோருகிறோம்.

அறிவிப்பு

மேல்நிலைப்பள்ளி (Higher Secondary) நடத்துவதற்குக் கல்வி இலாகா தபோவனத்துக்கு அனுமதி தந்துள்ளது. எல்லா வசதிகளுடனும், உபகரணங்களுடனும், தேவையான முழுத் தகுதிபெற்ற ஆசிரியர்களுடனும் (Adequate and fully qualified Teachers) திருவேடகத்தில் குருகுல முறையில், விடுதிவசதியுடன் இவ்வகுப்புக்களை இவ்வாண்டு முதல் நடாத்தத் தபோவனம் ஏற்பாடு செய்துள்ளது. நல்ல சூழ்நிலையில், நல்ல கண்காணிப்பில் தங்களுடைய செல்வர்களுக்கு இம்மேல்நிலைக் கல்விதர விரும்பும் பெற்றோர்கள் இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்வார்களாக.

மேலும் விவரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

தலைமையாசிரியர்,
விவேகானந்த மேல்நிலைப்பள்ளி
திருவேடகம் மேற்கு P. O.
Pin. 624 217
மதுரை ஜில்லா

கன்னியாகுமரி ஜில்லா நாகர்கோவிலில் 1—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தேசிய விநாயகம்பிள்ளை உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: சுவாமி அசலானந்தர்

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 28	சித்தார்த்தி ஞூ ஆனி மீ	ஆரம் 6

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்மசக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்துச் செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்துச் செலுத்த இயலுகிற வர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

இலவச சந்தா: தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அன்பர்களின் உதவியால் அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் இனமாகத் தொடர்ந்து அனுப்பப்பெற்று வருகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-00. வெளிநாடு வருட சந்தா ரூ. 20-00

அந்தர்யோக விவரங்கள்

உசிலம்பட்டியில் 17—6—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

சேலம் ஜில்லா—ராசிபுரத்தில் 17—6—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : தெய்விக வாழ்க்கைச் சங்கம்
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

சென்னையில் 24—6—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : புரசவாக்கம் ஸர் M. CT. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 24—6—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ சாரதா சேவாச்ரமம்
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்
உணவு வசதி : நேரில் ரூ. 1-25 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ண ஸமாஜத்தில் 24—6—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : பங்கஜம் காலனி, தினமணி நாளிதழ் ஆபீஸ் சமீபம்
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி : நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-50 செலுத்தி சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

தூத்துக்குடியில் 24—6—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சச்சிதானந்தசபை
நேரம் : காலை 9-30 மணிமுதல் மாலை 12-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

பாண்டிச்சேரியில் 1—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சொசியெத்தே ப்ரோக்ரேஸிஸ்த் உயர்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலத்தில் 8—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனை கொட்டகை
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி : நேரில் ரூ. 1-00 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

(அட்டை நான்காம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ தாயுமான சுவாமி கோயில் திருப்பணி



ஸ்ரீ தாயுமான சுவாமிகள் கோயில் திருப்பணிக்குத் தொகை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. மே மாதத்தில் வந்துள்ள நன்கொடைகளின் தொகை இப்பொழுது இவ்விதழில் வெளியிடப்படுகிறது.

சமாதிக் கோயிலுக்கு அருகில் கட்டப்பட்டுள்ள ஆச்ரமத்தின் சமையல் கட்டுப் பகுதி பூர்த்தியாகியுள்ளது. ஆச்ரமத்தின் முக்கிய கட்டடத்தின் மேல் தளம் இப்பொழுது வேலை ஆகிக்கொண்டுள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் ஆச்ரமப்பகுதி பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அது முடிந்ததும் சமாதிக் கோயில் வேலை துவக்கப்பெறும்.

1979 மே மாத நன்கொடை விவரம்

தேதி	விலாசம்		ரூபாய்
	ஏப்ரல் மாதம் முடிய நன்கொடை வசூல்		3 23 523
2-5-79	ஸ்ரீ R. அருணகிரிப்பிள்ளை	திருவண்ணாமலை	101
3-5-79	ஈப்போ சாலன்பெண்டகரா	29805 நீ கடைபொது, மலேசியா	211
	ஸ்ரீ உ. அ. நாகலிங்கம் செட்டியார் கம்பெனி	ஈப்போ ,,	105
	,, வீ. ராமன் செட்டியார் கம்பெனி	,, ,,	105
	,, T.S. சுப்பையா	பரமக்குடி, இராமநாதபுரம்	105
	,, அ. பெருமாள் செட்டியார்	,, ,,	105
	,, ஆ. செ. பால்சாமி செட்டியார்	,, ,,	105
7-5-79	ஸ்ரீ ம. அண்ணாமலை	நடுத்தெரு, பூவாளூர்	100
	ஸ்ரீமதி ம. பாக்யத்தம்மாள்	,, ,,	100
	,, A. சிவமணி	,, ,,	100
8-5-79	ஸ்ரீ அ. ஏகாம்பரம் பிள்ளை	லோக்கன்ராவ் அப்பாசந்து, தஞ்சை	105
	ஸ்ரீ M.V. ராஜமாணிக்கம்	பினங்கு, மலேசியா	100
11-5-79	ஸ்ரீ N. ராஜகோபாலன்	கைலாசபுரம், திருநெல்வேலி	500
	ஸ்ரீமதி A. நாகரத்தினம் அம்மாள்	செவ்வாய்பேட்டை, சேலம்	101
12-5-79	ஸ்ரீ K. வேணுகோபால ஐயர்	T. நகர், சென்னை	100
14-5-79	L.G.B. பப்ளிக் வெல்பேர் சொஸைட்டி	திருச்சிரோடு, கோவை	2 500
15-5-79	ஸ்ரீ பிர்னுமன்	சுங்கைபட்டாணி, மேற்கு மலேசியா	108

17–5–79	Dr. N. ராதாகிருஷ்ணன்	திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை	101
	சிவானந்த சாந்திவனம், ஜகதாலா,	அரவன்காடு, உதகை	101
18–5–79	ஸ்ரீமதி P. விசாலாக்ஷியம்மாள்	கூளையனூர், மதுரை	101
	,, K. மீனலோசனி	சொக்கப்பநாயக்கன் தெரு, ,,	100
	,, R.K. சுப்பம்மாள்	துவரங்குறிச்சி, திருச்சி	100
	,, தாயம்மாள்	ரங்கே கவுடர்வீதி, கோவை	100
19–5–79	அமரர் ஸ்ரீ K. குழந்தை சுவாமி	கிருஷ்ணகிரி	200
	ஸ்ரீ V. T. சங்கர்	மேட்டுப்பாளையம், கோவை	100
	ஸ்ரீ V. S. ராமசுவாமி	கூகலூர், ஈரோடு	100
22–5–79	ஸ்ரீ M. காசிசாமி நாடார்	அலங்கார் தியேடர், பொன்னமராவதி	104
23–5–79	ஸ்ரீ S. V. தங்கவேல் முதலியார்	குமாரசாமிபேட்டை, தருமபுரி	101
24–5–79	அன்னபூர்ணா டெக்ஸ்டைல் புராசெஸ்சார்ஸ்	சத்தி ரோடு, ஈரோடு	5 000
	ஸ்ரீ M. சின்னமுத்து உடையார்	அம்மாபேட்டை, சேலம்	425
29–5–79	ஸ்ரீ T. C. ஜெகந்நாத ரெட்டியார்	ஆலத்துடையான்பட்டி, திருச்சி	1 000
	ஸ்ரீ B. ராமசாமி கவுடர்	அணைப்பட்டி, காமயகவுண்டன்பட்டி	101
	ஸ்ரீ K. R. கோவிந்தராஜுலு நாயுடு	மேட்டுப்பாளையம், கோவை	100
	M/s. கந்தசாமி டெக்ஸ்டைல்ஸ்	செல்லூர், மதுரை	1 101
	M/s P. M. பொன்னுசாமி&பிரதர்ஸ்	அஹிம்ஸாபுரம், செல்லூர், மதுரை	1 101
	ஸ்ரீ T. மாரிமுத்து	,, ,, ,,	1 100
	M/s செல்வராஜ் டெக்ஸ்	,, ,, ,,	1 000
	ஸ்ரீ வே. தி. ஜோதிராஜா	பளையபாளையம், இராஜபாளையம்	101
	மாதர் சேவாசங்கம்	விருதுநகர்	350
	ஸ்ரீ A. ராமர்	மெயின் பஜார் ,,	100
	பாண்டியன் ஆடோமொபைல்ஸ்	மதுரை ரோடு ,,	100
	ஸ்ரீமதி T. பானுமதி	ராணி மேரி கல்லூரி, சென்னை	100
	ஸ்ரீமதி T. C. ருக்மணி	ஆலத்துடையான்பட்டி, திருச்சி	100
	ஸ்ரீ S. V. சுப்பிரமணியன்	செல்லூர், மதுரை	100
	ஸ்ரீ M. ராமமூர்த்தி	செல்லூர், மதுரை	100
	ஸ்ரீ A. P. ராமசாமி ராஜா	சோழவந்தான்	100
	ஸ்ரீ M. பரமசிவம்	வடக்கு மாசி வீதி, மதுரை	100
	ஸ்ரீ V. A. கணபதி நாடார்	லாயல் மில்ஸ் குவார்ட்டர்ஸ், கோவில்பட்டி	100
	ஸ்ரீ P. சின்னசாமி நாடார்	புதியம்புத்தூர்	100
	வாரவழிபாட்டுச் சங்கம்	துரிஞ்சாபுரம், வ. ஆ. மாவட்டம்	100
	ரூ. 100க்கு கீழ்வந்த நன்கொடைகள்		1 180
	ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் மூலம்		
		ரூ. 100க்கு கீழ்வந்த நன்கொடைகள்	193
		ஆகக் கூடுதல் ரூ.	3 43 234

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 28 | சித்தார்த்தி ௵ ஆனி ௴ | ஆரம் 6

பிரார்த்தனை

यो रुद्रो अग्नौ यो अप्सु य औषधीषु ।
यो रुद्रो विश्वा भुवनाविवेश तस्मै रुद्राय नमो अस्तु ॥

— यजुर्वेदम्

யோ ருத்ரோ அக்னௌ யோ அப்ஸு ய ஔஷதீஷு ।
யோ ருத்ரோ விஸ்வா புவனாவிவேச தஸ்மை ருத்ராய நமோ அஸ்து ॥

— யஜுர்வேதம்

நெருப்பு ஆகி, நீர் ஆகி, மூலிகைகள் ஆகி புவனத்தின்கண் பிரவேசித்துள்ள ருத்ரனைப் போற்றுவோம்.

கரவாடும் வன்நெஞ்சர்க்(கு) அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல்ஏந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

— திருநாவுக்கரசர்

அருள் விருந்து

ஏற்பவன் வறியன்; வழங்குபவன் வள்ளல்.

நகைச்சுவையற்றவன் வாழத்தகுதியற்றவனுகிருன்.

நெஞ்சத்தின் கனிவு அறிவு நுட்பத்திலும் மேலானது.

சினம் சினந்துகொண்டவனே முதலில் சீர் அழிக்கிறது.

பொய்வேஷம் அருள்தாகத்திற்கு ஆறுதல் அளிக்காது.

மணமும், அழகும் நிறைந்த மலருக்கு நிகர் ஆன்ருேர் வாக்கு.

ஆசையை அகற்று. அதைத் தொடர்ந்து அச்சம் தானே அகலுகிறது.

மனப்பான்மைக்கு ஏற்ப மனிதன் மேலோன் அல்லது கீழோன் ஆகிருன்.

பேர் இடைஞ்சல்களை அமைதியாக மீள்வது பெரியோர்கள் பாங்கு ஆகும்.

ஆசையை ஒழிப்பதற்கேற்ப வாழ்க்கைப் பிரச்னைகள் குறைந்துபட்டுப் போகின்றன.

யாரோடும் பகைமை வேண்டாமென்றிருப்பவன் யாருக்குமே ஆழ்ந்த நண்பன் ஆகான்.

முகக்கோணல் முதுமையில் மேலும் கோணுகிறது. மனக்கோணலோ யாண்டும் கொடூரக் காட்சி அளிக்கிறது.

தான் இவ்வுலகில் இல்லாத நாள் ஒன்று வரும் என்பதை மனிதன் யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பழுத்த பழத்தைத் தொடர்ந்து மற்றவைகள் பழுக்கின்றன. அங்ஙனம் பண்பட்டவனைப் பின்பற்றி மற்றவர்கள் பக்குவப்படுகின்றனர்.

கடலில் வாழுகிற மீன் எங்குச் சென்ருலும் நீரிலிருக்கிறது. அங்ஙனம் மானுடன் யாண்டும் தெய்வசாந்நித்தியத்திலேயே இருக்கிருன்.

கடலினின்று நீர் ஆவியாகக் கிளம்பி மேலே போகிறது. பிறகு நதியாக அது திரும்பி வந்து சேருகிறது. அங்ஙனம் பிரபஞ்சம் பரம்பொருளில் தோன்றி வந்து மீண்டும் பரம்பொருளில் ஒடுங்குகிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தர்களோடு பரமஹம்சதேவர் தொடர்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார்.

பரமஹம்சதேவர்: "பாரமார்த்திக விஷயங்களைப் பற்றி ஆத்ம சாதகன் ஒருவன் தக்கவர்களிடமிருந்து கேட்டு அறிந்து கொள்ளவேண்டும். சாதனத்தில் மேலே வர வரக் கேட்பதில் சுவை தானாகக் குன்றிப் போகிறது. அதற்குச் சிறந்த சான்றாக ஆஞ்சநேயன் இலங்குகின்றான். நாள், நட்சத்திரம், திதி ஆகியவைகளைப் பற்றி ஆஞ்சநேயனிடம் அன்பர்கள் சிலர் வினவினர். அதற்கு விடையாக அவன் "நாள், நட்சத்திரம், திதி ஆகியவைகளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ராமச்சிந்தனை ஒன்றே எனக்குப் போதும். அந்தச் சிந்தனை என்னைப் பரமானந்தத்தில் ஈடுபடுத்துகிறது."

"சாதகப்பறவை வானவெளியில் வசிக்கிறது. நிலத்துக்கு அது கீழே இறங்கி வருவதில்லை. தாகத்தால் தொண்டை உலர்ந்து போனாலும் அது மழை நீரை நோக்கியே மேலே பறக்கிறது. கங்கை, யமுனை முதலிய புண்ணிய நதிகள் ஏழும் நீர் நிரம்பியவைகளாக இருக்கின்றன. ஆயினும் நிலத்தில் படிந்த நீரை அப்பறவை நாடுவதில்லை. அதேபாங்கில் பக்தனொருவன் பரம்பொருளிடத்திருந்து வரும் பேரானந்தத்தையே நாடுகிறான். பிரபஞ்சம் நல்கும் இன்பத்தில் அவன் நாட்டம் வைப்பதில்லை.

"ராமனும், இலக்ஷ்மணனும் பம்பா சரசை எட்டினர். ஆங்குக் காக்கை ஒன்று நீர் அருந்த ஆவலுற்று இருப்பதை இலக்ஷ்மணன் பார்த்தான். குளத்திலுள்ள நீருக்குப் பக்கத்தில் அது போகிறது, ஆனால் நீர் அருந்துவதில்லை. அதற்குக் காரணம் யாது என்று இலக்ஷ்மணன் இராமனிடம் கேட்டான். மூத்தவன் கொடுத்த மறுமொழியாவது, 'தம்பீ, இக்காக்கை கடவுளிடம் பக்தி வாய்க்கப்பெற்றது. அல்லும் பகலும் அது இறைவன் நாமத்தையே ஓதிக் கொண்டிருக்கிறது. தாகத்தால் அதன் தொண்டை உலர்ந்து போயிருக்கிறது. ஆயினும் நீர் பருகுகிற வேளையில் பரமனுடைய நாமத்தை உச்சரிப்பது நின்று விடுமே என்று தயங்கிக்கொண்டு அது நீர் அருந்தாமல் இருக்கிறது." அதனுடைய அருள்தாகம் அவ்வளவு பெரியதாம். உயிர் வேட்கைக்கும் அது மேலானது.

"பௌர்ணமி இரவு. அன்று நான் ஹலதாரியிடம் அண்ணா! இது அமாவாசை இரவா? என்று வினவினேன்" எல்லாரும் நகைக்கின்றனர். (புன்னகை பூத்தவராக) ஆம், அது முற்றிலும் உண்மை. நிறைஞானியின் இலட்சணத்தைப் பற்றிய விளக்கம் ஒன்றை முன்பொரு தடவை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நிறைஞானி கால அதீதத்தில் இருக்கிறான். ஆதலால் அவன் பௌர்ணமி, அமாவாசை ஆகியவைகளைப் பாகுபடுத்துவதில்லை. ஆனால் இக்கோட்பாட்டை ஹலதாரி எங்ஙனம் அறிந்து கொள்வான். தன்னுடைய அறிவுக்கேற்ற விடையை அவன் கொடுத்தான். அவன் இயம்பியதாவது: 'இது இருள் சூழ்ந்த கலிகாலம். ஆதலால் மானுடன் ஒருவன் பௌர்ணமியையும், அமாவாசையையும் பாகுபடுத்த இயலாதவனாக இருக்கிறான். அத்தகையவனைச் சான்றோன் என்று உலகம் போற்றுகிறது. 'நிறைஞானி ஆத்மபோதத்தில் திளைத்திருக்கிறான். அன்னவனுக்கு இரவு, பகல் என்ற பாகுபாடு இல்லை. அவனுடைய மேலாம் பாங்கை உலகத்தவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்கள்."

மகிமசரண் இப்பொழுது அறையினுள் பிரவேசித்தார்.

பரமஹம்சதேவர்: (மரியாதையுடன்) "வாருங்கள் ஐயனே, வாருங்கள். தயை கூர்ந்து அமருங்கள்."

(விஜயரையும் மற்ற பக்தர்களையும் பார்த்து) "ஆனந்த பரவச நிலையில் மூழ்கியிருக்கிற வேளையில் தேதி முதலியன என் ஞாபகத்துக்கு வருவதில்லை. சில தினங்களுக்கு முன்பு பெனிபாலருடைய பூங்காவில் விழா ஒன்று கொண்டாடப் பெற்றது. ஆனால் அதன் தேதியை நான் மறந்துவிட்டேன். மாதம் ஒன்

றின் கடைசி நாள் என் ஞாபகத்துக்கு வருவதில்லை. சுபதினங்களில் என் மனது தானாக அதீதநிலைக்குப் போகிறது. எதை ஞாபகத்தில் வைப்பது எதைப் பொருள்படுத்தாது ஒதுக்குவது என்பன எனக்கு விளங்குவதில்லை."

சில நிமிஷங்கள் பரமஹம்சதேவர் ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

பரமஹம்சதேவர்: "ஆனால் அன்பர் யாராவது ஒருவர் என்னைக் காணவர முற்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தால் அதை நான் மறந்து போவதில்லை. கடவுள் சிந்தனையிலேயே ஆழ்ந்து மூழ்கியிருக்கும் ஆத்மசாதகன் ஒருவன் நாட்களை நினைவில் வைப்பதில்லை. சீதை இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆஞ்சநேயன் இலங்கைக்குச் சென்றிருந்தான். அவன் திரும்பிவந்தபொழுது இராமன் அவனிடம் கேட்டதாவது: 'சீதையை நீ கண்டாயா? அவள் எத்தகைய பாங்குடன் இருக்கிறாள் என்பதை இயம்பு.' ஆஞ்சனேயன் விடுத்த பதிலாவது: 'ஓ ராமா! சீதையின் மேனிமட்டும் ஆங்கு கிடக்கிறது. ஆனால் அவளுடைய உள்ளமும், உயிரும் ஆங்கு இல்லை. அவளுடைய சொரூபம்முழுவதும் உன்னுடைய தாமரைத் திருவடிகளையே ஆழ்ந்து பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. ஆதலால் இலங்கையில் அவளுடைய மேனியை மட்டும் கண்டேன். மேலும் யமதர்மராஜன் ஆங்கு உலவிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஆனால் அவன்பாடும் திண்டாட்டமே. அந்த மாதரசியின் மேனி மட்டும் ஆங்கு இருந்தது; அந்த மேனியில் உள்ளமும், உயிரும் இல்லை.'

"இலட்சியம் ஒன்றில் ஆழ்ந்த கருத்தைச் செலுத்தினால் இத்தகைய இயல்பு ஆத்ம சாதகனுக்கு வருகிறது. அல்லும் பகலும் ஒருவன் கடவுள் சிந்தனையிலேயே மூழ்கியிருப்பானாகில் கடவுள் விபூதிகள் யாவும் அவனுக்கு வந்து வாய்க்கின்றன. கடலின் ஆழம் எவ்வளவு என்பதை அளந்து பார்க்க உப்புப் பொம்மை ஒன்று சென்றது. அது கடலோடு கரைந்து ஒன்றுபட்டுப் போயிற்று. புஸ்தகப் படிப்பும், சாஸ்திர ஆராய்ச்சியும் அளிக்கும் பயன் யாது? கடவுளை அடைவது வாழ்க்கையின் குறிக்கோள். சாது மகாத்மா ஒருவர் புஸ்தகம் ஒன்றை வைத்திருந்தார். அவரைக் காணச் சென்ற மானுடன் ஒருவன் அவர் வைத்திருந்த புத்தகத்தைத் திறந்து பார்த்தான். ஒவ்வொரு பக்கத்திலும் 'ராமா' என்னும் பதம் மட்டும் எழுதப்பட்டிருந்தது. வேறு வார்த்தை ஏதும் அப்புஸ்தகத்தில் தென்படவில்லை.

"பக்தன் ஒருவனுக்குக் கடவுள் ஞாபகத்தை ஊட்டுகிற காட்சி அல்லது நிகழ்ச்சி சிறிதளவு இருந்தால் போதுமானது. அக்கணமே தெய்விக உணர்ச்சி அவனிடத்து ஊற்றெடுத்து முன்னணிக்கு வருகிறது. இறைவனுடைய நாம உச்சாரணையில் அவன் பரமானந்தம் அடைகின்றான். மேகத்தைப் பார்த்ததும் மயிலுக்கு உற்சாகம் கிளம்புகிறது. அது தன் தோகையை விரித்துக்கொண்டு நடனம் ஆடுகிறது. ஸ்ரீமதி ராதையிடம் தெய்விக உணர்வு பெருமிதமாக அமைந்திருந்தது. கிருஷ்ணனைப் பற்றிய ஞாபகம் ஊட்டுகிற சொல் ஒன்று அவள் காதில் வீழ்ந்தால் போதுமானது. கிருஷ்ணனைப் பற்றிய ஞாபகம் ஊட்டுகின்ற காட்சி ஒன்று கண்ணில் பட்டால் போதுமானது. அக்கணமே அவளுக்கு ஆனந்த பரவசம் பொங்கித் ததும்பிக்கொண்டு கிளம்பும். பிரபஞ்ச ஞாபகம் அனைத்தும் மாயமாய்ப் பறந்தோடிவிடும். கண்ணனைப் பற்றிய கருத்தே நிலைத்திருக்கும்.

"சைதன்ய தேவர் ஒரு கிராமத்தின் அருகில் போய்க் கொண்டிருந்தார். அக்கிராமத்திலிருந்துதான் கோல் என்னும் மத்தளத்துக்குத் தேவையாயிருந்த களிமண் எடுக்கப்பட்டது." என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். அச்செய்தி தம் காதில் வீழ்ந்ததும் அவர் ஆனந்த பரவசமடைந்தார். ஏனென்றால் கோல் என்னும் மத்தளம் பஜனை பாடுவதிலும் ஆனந்தமாக நர்த்தனம் ஆடுவதிலும் பயன்படுத்தப்பட்டது.

"இத்தகைய தெய்விக உணர்ச்சிகள் யாருக்கு உண்டாகின்றன என்பது கேள்வி. உலகப் பற்றுதல்களையெல்லாம் புறக்கணித்து விட்டு பரநாட்டத்திலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிற பக்தர்களிடத்திலும், பக்திமதிகளிடத்திலும் தெய்விக உணர்ச்சி மேலோங்கி வருகிறது. எந்த ஆத்மசாதகன் ஒருவனிடம் உலகப்பற்றுதல்களெல்லாம் அறவே ஒதுக்கப்பட்டிருக்கின்றனவோ அத்தகையவன் உள்ளத்தில் தெய்விகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

அதைத் தூண்டுதற்கான சம்பவமோ சொல்லோ வாய்க்குமிடத்து அன்னவனிடம் பேரானந்தம் தோற்றத்திற்கு வருகிறது. அதன் அறிகுறிகள் மற்றவர்கள் காட்சிக்கும் புலப்படுகின்றன. நவித்துப் போன தீக்குச்சியை எத்தனை தடவை கிழித்தாலும் அது தீப்பற்றுவதில்லை. உலர்ந்த தீக்குச்சியோ உரைத்தமாத்திரத்தில் உடனே தீப்பிடிக்கிறது. பக்தர்கள் உலர்ந்த தீக்குச்சி போன்றவர்கள். தெய்விக எண்ணத்தை ஒரு சிறிதளவு அவர்களுக்கு ஊட்டினால் போதுமானது. உடனே பக்தியின் வேகத்தால் ஆனந்தபரவசம் அவர்களுக்கு உண்டாகிறது."

"உலக சம்பந்தமான இன்பதுன்பங்கள் உடலைச் சார்ந்தவைகளாம். பக்தனொருவனை அவைகள் பாதிக்கமாட்டா. ஈஸ்வர அனுபூதியை அடையப்பெற்றிருக்கின்ற பக்தனொருவன் தன்னுடைய உடலையும், உள்ளத்தையும், உயிரையும் தெய்வத்துக்கே ஒப்படைத்தவனாகிறான். தெய்வத்தைத் தவிர வேறு எந்த உடைமையையும் அவன் அறிந்தவனல்லன். யான், எனது என்னும் செருக்கு இம்மியளவாவது பக்தனுடைய உள்ளத்தில் இடம் பெறுவதில்லை. ராமனும், இலக்ஷ்மணனும் பம்பா சரசிலே நீராடச் சென்றார்கள். அப்பொழுது தங்களுடைய வில்களை அவர்கள் தரையில் குத்தி வைத்தார்கள். நீராடி விட்டு வந்து இலக்ஷ்மணன் தன்னுடைய வில்லைத் தரையினின்று பெயர்த்தெடுத்தான். அப்பொழுது அதன் நுனியில் சிறிது ரத்தம் படிந்திருந்ததைப் பார்த்தான். அவ்வேளையில் இராமன் இயம்பியதாவது : 'தம்பீ, அதோ பார். வில்லில் ரத்தம் ஒட்டியிருக்கிறது. ஏதோ ஜந்துவை நாம் காயப்படுத்தியிருக்கிறோம் என்று தோன்றுகிறது!' இலக்ஷ்மணன் தரையிலிருந்த மண்ணைக் கிளறினான். கீழே பெரிய தவளை ஒன்றைப் பார்த்தான். அது சாகும் தறுவாயில் இருந்தது. சிறிது துயரத்துடன் ராமன் இயம்பியதாவது : 'நாங்கள் வில்லைத் தரையில் நாட்டியபொழுது நீ ஏன் ஓலமிடவில்லை? அப்படிச் செய்திருந்தால் உன்னை நாங்கள் காப்பாற்றியிருப்போம். பாம்பின் வாயில் அகப்பட்டுக் கொள்ளுகிறபொழுது நீ உரக்கக் கத்துகின்றாய்!' தவளை விடுத்த விடையாவது : 'பிரபோ! பாம்பு என்னைத் தாக்குகிறபொழுது ஓ ராமா என்னைக் காப்பாற்றுவாயாக, ஓ ராமா என்னைக் காப்பாற்றுவாயாக என்று ஓலமிடுகிறேன். ஆனால் இப்பொழுதோ ராமன் தானே என்னைக் கொல்லுகிறான் என்பதைக் காணலுற்றேன். ஆதலால் நான் மௌனமுற்றிருக்கிறேன்."

பரமஹம்சதேவர் பக்தர்களைப் பார்த்த வண்ணமாகச் சிறிது நேரம் பேச்சற்று மௌனமாக இருந்தார். மகிமசரண் குரு ஒருவரைப் பின்பற்ற வேண்டியது அவசியமில்லை என்னும் கொள்கை உடையவராயிருந்தார் என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். சம்பாஷணையை அவர் மீண்டும் துவக்குவாராயினர்.

பரமஹம்சதேவர்: "மானுடனொருவன் தன்னுடைய குருவின் வாக்கில் விசுவாசம் வைத்திருக்கவேண்டும். தன்னுடைய குருவின் பாங்கு எத்தகையது என்பதை அவன் ஆராயவேண்டியது அவசியமில்லை. 'என் குரு கள்ளுக்கடைக்குப் போகிறார் எனினும் அவர் நித்தியானந்தத்தின் சொரூபம்' என்பது கோட்பாடு. அத்தகைய மனப்பான்மை சிஷ்யன் ஒருவனுக்கு இருக்கவேண்டும்.

"தேவிமாகாத்மியம், பாகவதம் ஆகியவைகளை வெவ்வேறு இடங்களில் சம்பளத்துக்காகப் பாராயணம் பண்ணுகின்ற மானுடன் ஒருவன் இயம்பியதாவது, துடைப்பக்கட்டை ஒன்று தன்னளவில் தூயதன்று. ஆயினும் அசுத்தமான இடங்களை அது சுத்தப்படுத்துகிறது."

மகிமசரண் வேதாந்த விசாரம் பண்ணிக் கொண்டிருந்தார். பிரம்ம ஞானம் அடைவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பது அவர் கொள்கை. ஞான மார்க்கத்தை அவர் பின்பற்றினார். எப்பொழுதும் விசாரித்துப் பார்ப்பது அவருடைய போக்காயிருந்தது.

பரமஹம்சதேவர் : (மகிமசரணைப் பார்த்து) "தன் ஆத்ம சொரூபத்தை அறிந்துகொள்ளுவது ஞானி ஒருவனுடைய நோக்கமாகிறது. பரப்பிரம்மமே மனிதனிடத்து ஆத்ம சொரூபமாக இலங்குகிறது. ஜீவாத்மாவாகிய நான் பரப்பிரம்ம சொரூபம். மாயையின் ஆதிக்கத்தால் இந்த ஞானம் மறைந்துபட்டிருக்கிறது.

ஹரீஷனிடம் நான் இயம்பியதாவது : தங்கத்தை மண் மறைத்துக் கொண்டிருக்கிறது. மண்ணை ஒதுக்கித்தள்ளுவது முறை.

மலைவளர் காதலி

(தாயுமானவர் இயற்றியது)

பூதமுத லாகவே நாதபரி யந்தமும்
பொய்யென் றெனைக்காட்டி என்
போதத்தின் நடுவாகி அடியீறும் இல்லாத
போதபூ ரணவெளிக்குள்
ஏதுமற நில்லென் றுபாயமா வைத்துநினை
எல்லாஞ்செய் வல்லசித்தாம்
இன்பவுரு வைத்தந்த அன்னையே நின்னையே
எளியேன் மறந்துய்வனோ
வேதமுத லானநல் லாகமத் தன்மையை
விளக்கும்உள் கண்இல்லார்க்கும்
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்
விறுவா தம்புகலும்வாய்
வாதநோ யாளர்க்கும் எட்டாத முக்கனுடை
யாமருந்துக் கமிர்தமே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண்உமையே.

இந்திரியங்களுக்கிடையில் நான் மனதா யிருக்கிறேன் என்று கிருஷ்ண பரமாத்மா தமது விபூதியைப் பற்றி விளக்குகிறார். மனதின் பாங்கு பொருளை உள்ளபடி யூகித்து அறிதலாம். யூகிக்கும் திறமை மனதுக்கு இல்லாது போகும் ஆகில் இது பெரும் குறை. மனம் பண்பாடு இல்லாத மனிதன் ஜடத்துக்கு நிகராகிறான். மனம் எதைச் சாருகிறதோ அதன் பாங்கை அது எடுத்துக்கொள்ளுகிறது. அடுப்புக்கரியோடு அதை ஒப்பிடலாம். கன்னங்கரேலென்று அடுப்புக்கரி ஜடப்பொருளா யிருக்கிறது. ஆனால் தீயோடு தொடர்பு கொள்ளுமானால் அது சுடர் விட்டு ஒளிர்கிறது. அதே விதத்தில் மனது பிரபஞ்சத்தைச் சாருங்கால் அது ஜடநிலை எய்துகிறது. ஆத்மசொருபத்தைச் சாருங்கால் அதனிடத்து ஆத்மப் பிரகாசம் வருகிறது. அத்தகைய மனதே அம்பிகையின் மகிமையைக் கிரஹிக்க வல்லதாகிறது. வேதங்கள் நான்கு உள. அவை முறையே ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என இயம்பப் பெறுகின்றன. இயற்கையின் தெய்விகப் பாங்கை அவைகள் இனிது விளக்குகின்றன. இந்த நான்கு வேதங்கள் மிகப் பழையவைகள். எப்பொழுது அவைகள் உருவெடுத்தன என யாருமே அறுதியிட்டுக் கூற முடியாது. பின்பு அவைகளைத் தொடர்ந்து ஆகமங்கள் பல அமைந்துள்ளன. அவைகள் சைவ ஆகமம், வைஷ்ணவ ஆகமம், சாக்த ஆகமம் இப்படியெல்லாம் விரிவடைகின்றன. கடவுள் வழிபாட்டை இன்னின்ன முறைகளில் நடாத்தவேண்டும் என அவைகள் தெளிவுறுத்துகின்றன. எனவே ஆத்மசாதனங்கள் புரிய விரும்புகிறவர்களுக்கு வேதங்களும் ஆகமங்களும் நன்கு பயன்படுகின்றன. அப்படியிருந்தும் அவைகளைச் சரியாக அறிந்து கொள்ளுதற்கான அகக்கண் இல்லாதவர்கள் பலர் இருக்கின்றனர். ஒலிபெருக்கி ஓலமிடுகிறது. ஆனால் உட்பொருளை அது அறியவல்லதன்று. ஒலிபெருக்கிக்கு நிகராக வேதம் ஓதுகிறவர்களும் ஆகமப் பிரமாணம் கூறுகிறவர்களும் பலர் உளர். ஆயினும் அம்மேலாம் நூல்களின் சாரத்தை அன்னவர்கள் அறியமாட்டார்கள். அகக்கண் இருந்தும் அகக்கண் இல்லாத அந்தகர்கள் போன்றவர்கள் அவர்கள். நல்லவைகளும், கெட்டவைகளுமாகிய ஏதேதோ செய்திகள் காதில் வந்து வீழ்ந்துகொண்டிருக்கின்றன. கண்ணை மூடுவது போன்று காதை மூட முடியாது. மூட முடிந்தால் அது பெரிதும் பிரதிகூலமாகப் போகும். வீட்டுக்குள் தூங்குகிறவனை வெளியில் இருந்து ஓலமிட்டு எழுப்ப முடியாது. இதுபோன்ற இடையூறுகள் பல உள. அவைகளைத் தவிர்த்தல் பொருட்டு காது யாண்டும் திறந்தபடி இருப்பது முற்றிலும் அவசியம். ஆனால் திறந்த காதுகளை வைத்துக் கொண்டு சிலர் பொருந்தாத செய்திகளைப் பிரியத்துடன் கேட்கின்றனர். பொருந்திய மேலாம் செய்திகளிடத்துப் பராமுகமாக இருந்துவிடுகின்றனர். அப்படி இருப்பது முறையன்று. அம்பிகையைப் பற்றிய மகிமைகளை ஆர்வத்துடன் கேட்க விரும்புகிறவர்களே காது படைத்தவர்களாகிறார்கள். அதில் ஊக்கம் படையாதவர்கள் செவிடர்களுக்கு ஒப்பாவார்கள். பொருந்தாத சொற்கள் காதில் பட்டாலும் கருத்தில் வாங்காதிருந்து பழகவேண்டும். பொருந்திய பொருள் புதைந்த சொற்களை ஆர்வத்துடன் கேட்டு அவைகளை ஆழ்ந்து சிந்தனை

செய்யவேண்டும். அப்படிச் செய்கிறவர்களுக்கே செவிகள் தெய்விகம் வாய்க்கப்பெற்றவைகள் ஆகின்றன. பின்பு கேள்வியில் முயலுகின்றபொழுது அம்பிகையின் அருள் செல்வம் ஓங்கி அவர்களிடத்தில் வளருகிறது. பேசுதற்காக வாயும், அதில் நாவும் அமைந்திருக்கின்றன. பேசும் திறமை மனிதனுக்கு அமைந்திருப்பது பாராட்டத்தக்கது. பேச்சின் மூலம் ஆத்ம சாதனத்தை வளர்க்கலாம். பேச்சின் மூலம் தன்னுடைய பேச்சுத் திறமையை நிலைநாட்டுதற்கும், தான் பேச்சாளன் என்னும் செருக்கைப் பெருக்குதற்கும் அதைப் பயன்படுத்தலாம். இங்ஙனம் கண், காது, வாய் ஆகிய கரணங்களைப் பக்தியைப் பெருக்குதற்குப் பயன்படுத்தலாம் அல்லது பொருளற்ற பிரபஞ்ச வாழ்விலேயே பிறவிப் பெருங்கடல் பெருக்குதற்கும் பயன்படுத்தலாம். நல்ல ஆத்ம சாதகர்கள் இக்கருவி கரணங்களை அம்பிகையின் வழிபாட்டுக்கென்றே பயன்படுத்துவார்களாகில் அவர்கள் பாக்கியவான்கள். மானுட ஜன்மத்தை அவர்கள் நல்வழியில் பயன்படுத்துகிறார்கள்.

அன்னை பராசக்தி பிரபஞ்ச சொரூபமாகவும் அதற்கு அப்பாலிருக்கின்ற பரவஸ்துவாகவும் இலங்குகின்றாள் என்னும் கோட்பாட்டை முக்கண் உடை மாமருந்துக்கமிர்தமே என்னும் சொல்லடுக்கு விளக்குகிறது. பிரபஞ்ச வாழ்வை முறையாக நடாத்துவதற்குத் துணையாயிருப்பவள் மாமருந்து எனப் போற்றப்படுகிறாள். நோயை அகற்றுவதற்கு மருந்து பயன்படுகிறது. உலக வாழ்வு எனும் நோயில் வருந்தாதிருப்பதற்குத் துணையாயிருப்பதால் அவள் மாமருந்து ஆகிறாள். அத்தகையவள் பரசொரூபமாக இருப்பதால் அமிர்தம் எனப் போற்றப்படுகிறாள்.

ஹிமவான் வரைராஜன் எனப்போற்றப்பெறுகிறான். அத்தகைய பெருமகனுக்கு இரண்டு கண்மணிகளாக அவனுடைய செல்வி உமாதேவி இலங்குகின்றாள். அன்னவளுடைய அனுக்ரஹம் வாய்க்குமானால் அதன் விளைவாக வரும் பாரமார்த்திகப் பெரும்பேறு இதுவாம்.

ஐம்பூதங்கள் மயமாகப் பிரபஞ்சம் இருக்கிறது. அத்தகைய பிரபஞ்சத்தின் இயக்கம் நாதம் அல்லது ஓசையாக வடிவெடுக்கிறது. உலகும் அது உண்டுபண்ணுகிற ஓசையும் தோன்றி இருந்து ஒடுங்குவதால் அவை பொய்யெனப் பகரப்பெறுகின்றன. எது ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலத்தில் இல்லாது மறைந்துபட்டுப் போகிறதோ அது மெய்ப்பொருள் ஆகாது. அது பொய்யெனப் புறக்கணிக்கப்படுகிறது. உலகினுடைய தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் சாட்சியாக ஜீவாத்மா இருப்பதால் ஜீவாத்மாவாகிய நான் நிலைபேறு உடையவனாக இருக்கிறேன். அத்தகைய என்னிடத்துப் பொருள்களின் போக்கையும் வரவையும் காண்கின்ற தகைமை எனக்குண்டு. ஆதலால் என்னிடத்தில் போதம் அல்லது காணும் திறன் இருக்கிறது. ஆயினும் என்னிடத்துள்ள காணும் தன்மைக்கு வரையறை உண்டு. சூரியப் பிரகாசம் முகம் பார்க்கும் கண்ணாடியில் உள்ளபடி ஒளிர்கிறது. அப்படி ஒளிர்வது பிரதிபிம்பிக்கும் சூரியனாகிறது. அதற்கு ஆதி அந்தம் உண்டு. அதற்கு நிகராயுள்ள ஜீவபோதம் அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்துக் கொண்டிருப்பதால் ஜீவபோதத்துக்கும் துவக்கமும் முடிவும் உண்டு. அந்தக்கரணத்தோடு இணைக்கப் பெறாத மூலபோதமே மெய்ப்பொருள். பூரணம் என்று பகரப் பெறுவதும் அதுவே. அது எல்லைகாணாத பரவெளியாகும். ஆகவே அறிவுப் பரவெளியே ஜீவாத்மனுடைய நிறைநிலை. பிரபஞ்சத்தின் கூறுகளனைத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சிதாகாசமாகிய மூலநிலையில் உறுதி பெற்று நிற்பதே வீடுபேறாகும். அந்த நிஜநிலையின் தோற்றங்களாகவே ஜீவபோதமும் ஜடப்பொருள்களும் வந்துள்ளனவாம். மூலப் பொருளையும் அதனிடத்திருந்து வருவிக்கப்பட்டுள்ள பிரபஞ்சப் பொருள்களையும் தோற்றுவிக்க வல்ல தாயே உன்னை நான் புறக்கணித்து உய்வடைவது எங்ஙனம்? யாண்டும் இருந்தபடி இருப்பவள் நீயே. உன்னை நீயே உள்ளபடி உணருகின்றாய். ஆதலால் நீ சித் சொரூபம். உன்னில் நீ திருப்தியடைந்தவளாயிருக்கின்றாய். ஆதலால் நீ ஆனந்த சொரூபம். சச்சித் ஆனந்த சொரூபமாகிய உன்னைச் சார்ந்திருப்பதே எனக்கு உய்வு ஆகும். தாயே, இப்பெருநிலையில் என்னை யாண்டும் வைத்திருப்பாயாக என்பது இப்பாடலின் உட்கருத்தாம்.

அருள் நெறி

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யரான சுவாமி அபேதானந்தரின் போதனை)

உள்ளத்திலுள்ள சூட்சுமமான ஆசைகள் வாசனைகள் என்னும் பெயர் பெறுகின்றன. அவ்வாசனைகள் முற்றும் அழியாத வரையில் நமக்குப் பிறப்பு வந்து கொண்டே இருக்கும். ராமப்பிரசாதர் பாடல் வருமாறு :

"வாசனைகளைப் பொசுக்கித் தள்ளுங்கள். அவைகளினுடைய சக்திகளெல்லாம் அழிக்கப் படட்டும். மனதைத் தூய்மை ஆக்குங்கள். அப்பொழுது உங்களுக்குள்ள துன்பங்கள் எல்லாம் தொலைந்துவிடும். மனதிலுள்ள அழுக்கு நீங்கவேண்டும்."

பிறப்பும் மரணமும் உயிர்களுக்கு மாறி மாறி அமைகின்றன. அவை உயிர்களை உலகத்தோடு கட்டிவைக்கின்றன. ஒரு ஜீவன் தன்வினைப்பயனைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பிறப்பு எடுக்கின்றான். வினைப்பயன் தீர்ந்ததும் அவன் உலகத்தை விட்டு மறைகின்றான். எல்லா ஜீவர்களும் வினைப்பயனைத் தீர்த்துக் கொள்வதற்காக இவ்வுலகத்துக்கு வந்திருக்கிறார்கள் என்று அறிந்து நடந்து கொள்ளவேண்டும். அப்பொழுது அவர்கள் மாயை வசப்பட்டுப் புலம்ப வேண்டியதில்லை. தெய்வத்தை முற்றும் நம்புங்கள். தெய்வத்திடம் உங்களை ஒப்படைத்துவிடுங்கள். உங்களுக்கு அமைந்துள்ள கடமையைப் பயன் கருதாது செய்யுங்கள். இதுதான் வினைப்பயனை ஒழிப்பதற்கு முறையாகும். இதைத் தவிர வினைப்பயனை ஒழிப்பதற்கு வேறு வழி இல்லை.

வாழ்வு என்பது பெரிய புயல்காற்றோடு போராடுவதற்கு நிகராகும். வாழ்வில் சுயநலத்தையும் தனக்கு வேண்டிய வசதிகளையும் தேடி அலைபவன் கோழை ஆகின்றான். நீ கோழையாக நடந்துகொள்ளாதே. கோழை வாழ்க்கையில் வெற்றிபெற முடியாது. சரீரத்துக்கு வரும் கஷ்டங்களைப் பொறுத்துப் பழகு. உள்ளத்துக்கு வரும் துன்பங்களை ஏற்றுப் பழகு. மனத்தளர்ச்சி அடையாதே. மனத்தளர்ச்சி விழ்ச்சியை உண்டாக்கும். வாழ்வு என்னும் படகு மூழ்கிப் போய்விட்டால் அதில் பிரயாணம் செய்யும் நீயும் ஒழிந்து போவாய். வாழ்க்கையிலிருந்து விலகிக்கொள்ள விரும்பித் தற்கொலை செய்துகொள்வாயானால் அதுவும் கோழைத்தனமாகும். தற்கொலை செய்துகொள்வதன் மூலம் துன்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று சிலர் நினைக்கின்றனர். அக்கருத்து தவறானது. தற்கொலை செய்து கொள்வது துன்பத்தினின்று மீளுவதற்கு உபாயமாகாது. நல் வாழ்வில் ஊறியிருந்து நல்லதையே செய்து வா. எல்லாருடனும் அன்புடன் பழகி வா.

வாழ்க்கையில் சோதனைகள் வந்து அமையும். அச்சோதனைகளின் வாயிலாகக் கடவுள் நம் உள்ளத்தைப் பண்படுத்துகின்றார். இதை நீ அறிந்துகொள்ள வேண்டும். கடவுளை உறுதியாகப் பிடித்துக்கொள். எத்தகைய சோதனைகள் வந்தாலும் அவை உன்னைவிட்டு விலகிப் போய்விடும். உன் உள்ளத்தில் அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கை உருவாகி வரவேண்டும். இது ஒரு நாளில் ஆகக்கூடிய காரியமன்று. இத்தகைய மன உறுதி வருவதற்குக் காலத்தைக் கருத்தில் வாங்காது பயிற்சி பெற வேண்டும்.

கடவுள் யாண்டும் உன்னுடன் இருந்து வருகிறார் என்பதில் உறுதியான எண்ணம் கொண்டிரு. உன்னுடைய சக்தி முழுவதையும் பயன்படுத்திக் கடமைகளைச் செய்து வா. உனக்கு அமைந்துள்ள கடமைகளை ஈசனுடைய காரியங்கள் என்று எண்ணிச் செய். இசை ஒருமுக்கிய இடம் பெறுகிறது. இசை கற்றுக்கொள்வது குற்றமன்று. கடவுளுடைய புகழை இசையோடு பாடும்பொழுது உன் மனம் ஒருமுகப் படுகிறது. உருக்கத்தோடு கடவுளுடைய பெருமையைப் பாடும்பொழுது நீ உன்னை மறந்துவிடுவாய். உன்னை மறந்து கடவுளுடைய நினைவில் உன் உள்ளம் ஈடுபட்டிருப்பது நல்ல சாதனையாகும். ஆகையால் இசையோடு இறைவனுடைய புகழைப் பாடுவதும் யோக சாதனை என்பதை அறிந்துகொள்.

குருபக்தி சாதகனுக்கு அவசியம். குருபக்தியின் மூலம் கடவுள் காட்சி பெறலாம். குருவின் அருள் பூரணமாக இருக்கிறது என்று நீ நம்புவாயானால் நீ சாதனையில் முன்னேற்றம் அடை

வாய். கடவுளிடமும், குருவிடமும் தூயபக்தி கொண்டிருப்பவனுக்கு வாழ்க்கையைப் பற்றிய இரகசியங்களெல்லாம் விளங்குகின்றன.

உபவாசமிருப்பது நல்லது. ஆனல் உபவாசத்தின் மூலம் உன் உடலைத் துன்புறுத்தக் கூடாது. உபவாசத்தின் மூலம் சரீரம் பல ஹீனம் அடைந்து போகவிடக் கூடாது. சரீரத்தை நன்ருகப் போஷிக்காவிடில் அது நோய்க்கு ஆளாகிவிடும். சரீரம் நல்ல நிலையில் இல்லாவிட்டால் நீ சாதனைகளை ஒழுங்காகச் செய்யமுடியாது.

தெய்வத்தின் அனுக்கிரஹமும், குருவின் அனுக்கிரஹமும் உனக்கு முழுமையாக வாய்த்திருக்கலாம். ஆனல் அவற்ருேடு மனதின் அனுக்கிரஹமும் அமையவேண்டும். மனம் யாண்டும் சந்தோஷமாகவும், மாசற்றதாகவும் இருந்தால்தான் சாதனை தீவிரமாக நிகழும். மனம் அமைதியற்று அலைந்து திரியுமானல் அது சாதனைக்குப் பயன்படாது. அமைதியோடுகூடிய தூய மனது அமையவேண்டுமென்று கடவுளிடம் பிரார்த்தனை செய்துகொள். ஈசா, அருள்தாகம்கொண்டு உன்னையே நாடி இருக்கும் ஆர்வமுடைய மனதை எனக்குக் கொடு என்று கசிந்துருகிப் பிரார்த்தனை செய். பக்தியோடு வழிபாடு செய்துவா. வழிபாடு உணர்வோடுகூடியதாக இருக்கட்டும். சடங்குகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டியதில்லை. சாதனையை இடைவிடாது செய்துகொண்டே இருக்கலாம். கங்கா தீர்த்தம் மிகப் புனிதமானது. கங்காதீர்த்தம் உன் மேனியில் படுமானல் உன் மேனி தூயதாகிறது. இறைவனுடைய மந்திரத்தை நீ ஜபிக்கும்பொழுது உன் வாக்கு தூய்மை ஆகிறது. இறைவனைக் குறித்துத் தியானம் பண்ணும்பொழுது உன் மனம் தூய்மையாகிறது. இங்ஙனம் தூய்மையாக்கிய திரிகரணங்களையும் இறைவனுடைய திருவடிகளில் சமர்ப்பித்துவிடு. ஈசா, உனக்காக என்னிடம் அமைந்துள்ள முக்கரணங்களையும் ஒப்படைக்கிறேன் என்று நீ முழு மனதோடு கூறுவாயானல் அது சிறந்த பூஜை ஆகிறது. தூயதாக்கப்பட்ட முக்கரணங்களையும் ஈசுவர வழிபாட்டுக்கென்று பயன்படுத்து. அப்பொழுது நீ ஈசனுடைய அருளைப் பெறுவாய்.

இப்பிரபஞ்சத்தில் நீ செய்து முடிக்க வேண்டிய கடமைகள் இருக்கின்றன. அக்கடமைகளைச் செய்வதற்கிடையில் நான் எனது என்கின்ற அஹங்கார மமகாரங்களை அகற்றிவிடு. அஹங்காரம் மமகாரம் அகலும் அளவு உனக்கு அமைதியும் ஆனந்தமும் கிடைக்கின்றன. நீ உன்னுடைய குழந்தைகள் என்று சிலரை நினைக்கின்ருய். அவர்களும் தங்களுடைய வினைப்பயன்களைத் தீர்ப்பதற்காக இவ்வுலகத்துக்கு வந்திருக்கிருர்கள். உண்மையில் அவர்கள் உன்னுடைய குழந்தைகள் அல்லர். அவர்கள் ஈசனுடைய குழந்தைகளாவார்கள். குழந்தைகளைக் காப்பாற்றுவது பெற்ருேர்களுடைய பொறுப்பாகும். குழந்தைகளுக்கு நலன் எது என்பதைப் பெற்ருேர்கள் நன்கு அறிவார்கள். நம்முடைய அம்மை அப்பனுக இருப்பவர் கடவுள் ஆவார். நமக்கு நலன் எதுவோ அதை அவர் நன்கு அறிவார். நம்மை முழுவதும் அவரிடத்தில் ஒப்படைத்துவிட்டால் நம் மூலம் அவருடைய இச்சை செயல்படுகிறது. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் உண்மையை உணர்ந்து உன்னை அவரிடம் ஒப்படைத்துவிடு. அப்பொழுது நீ அமைதியையும் ஆனந்தத்தையும் பெறுவாய்.

பொறி புலன்களுக்கு விஷயமாகின்ற பொருள்களை நம் மனது ஏற்றுக்கொள்கிறது. அவைகளிடத்து நம் மனது நம்பிக்கையும் வைக்கின்றது. கடவுள் பொறி புலன்களுக்கு அப்பாற்பட்டவர். எனவே சாதாரண மனம் அவரிடம் நம்பிக்கை கொள்வதில்லை. மனம் தூய்மை அடைகின்ற பொழுதுதான் அது அற்ப ஆசைகளிலிருந்து விடுபடுகிறது. அற்ப ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதில் தூய மனம் நாட்டம் கொள்வதில்லை. உலக ஆசைகள் துறக்கப்படுமளவு மனதுக்குப் பெரிய பொருளிடத்து நாட்டம் உண்டாகிறது. தேனீ தேனைமட்டும் அருந்துகிறது. அதுபோன்று தூய மனம் முற்றும் தெய்வத்தையே நாடி இருக்கிறது. துச்சத்தின்பால் மனத்தை விடாது தூய பொருளாகிய இறைவனிடத்தே அதை வைத்துப் பழகுவது சிறந்த சாதனை ஆகிறது. மனதைத் தெய்வத்திடத்து வைப்பதில் நீ கண்ணும் கருத்துமாக இருந்து வர வேண்டும்.

அம்பிகையின் மகிமை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் சக்திபூஜை அந்தர் யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[*174* ஆம் பக்கத் தொடர்ச்சி]

மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களை நாம் உடைத்திருக்கிறோம். முக்கரணங்களுள் ஸ்தூலமாக இருப்பது உடல். உடலை விட சூட்சுமமாக இருப்பது உரை அல்லது சொல். சொல்லைக்காட்டிலும் சூட்சுமமாக இருப்பது உள்ளம். முக்கரணங்களையும் தூய்மைப்படுத்துகின்றளவு ஆத்ம சொருபத்தைக் கிரஹிக்கின்ற பரிபாகம் நமக்கு உண்டாகிறது. உடலைப் பண்படுத்துகின்ற பாங்கை ஆராய்ந்து விட்டோம். அகிலாண்டமும் அம்பிகைக்கு உடலாக இருக்கிறது. திரிபுரசுந்தரி என்பது அம்பிகைக்கு ஒரு பெயர். அம்பிகை முப்புரங்களைச் செம்மையாகவைத்திருந்துஅவற்றில் தன்னுடைய அழகை விளக்குவதால் அவள் திரிபுர சுந்தரி என்று அழைக்கப்படுகின்றாள். நம்முடைய சரீரத்தை அம்பிகையின் ஆலயமாகக் கருத வேண்டும். சரீரத்தை அதற்கேற்றபாங்கில் தூயதாக வைத்திருக்க வேண்டும். நம் உடலையும் பரத்துக்குரிய ஆலயமாகத் திருத்தி அமைப்பதில் நமக்குச் சிரமம் இல்லை.

அதி சூட்சுமமாக இருக்கின்ற மனதுக்கும், ஸ்தூலமாக இருக்கின்ற உடலுக்கும் இடையில் வாக்கு அமைந்திருக்கிறது. வாக்கை எப்படிப் பயன்படுத்தலாம் என்ற பகுதியை ஆராய்வோம். அம்பிகைக்கு அமைந்துள்ள பெயர்களுள் நாதரூபா என்பது ஒரு பெயர். நாதரூபிணி என்றும் அம்பிகை அழைக்கப்படுகிறாள். பரவஸ்துவுக்கு அமைந்துள்ள பெயர்களுள் நாதபிரம்மம் என்பது ஒன்றாகும். நாத அதீதத்திலிருப்பதை விளக்க முடியாது. அதீதத்திலிருக்கின்ற பொருள் நாதம் என்கின்ற நிலைக்குக் கீழ் இறங்கி வருகிறது. அப்பொழுது ஓசை வடிவெடுக்கிறது. ஓசையைப் புலப்படுத்துவதற்காகக் கரணம் நம்மிடத்தில் இருக்கிறது. காது அதற்குப் பயன்படுகிறது.ஓசையிலிருந்து அகிலாண்டத்திலுள்ள பொருள்களெல்லாம் வடிவெடுத்து வந்துள்ளன. அமாத்ரப்பிரணவமாயிருப்பது ஓசையைத் தாண்டிய அதீதநிலையாகும். மாத்ரப்பிரணவமாக ஓம் என்னும் ஓசை முதலில் உண்டாகிறது. அதன் பிரிவுகளாகப் பிரபஞ்சமெங்குமுள்ள ஓசைகள் அமைகின்றன. நாதம் விந்துவாக இருக்கின்றது. ஆகையினால் அதைப் பீஜ மந்திரம் என்று சொல்லுகிறோம். ஓசை திருந்தி அமைவதற்கு ஏற்ப அதன் ஸ்தூலமாக இருக்கின்ற உயிர்களும் திருந்தி அமைகின்றன. நாத பிரம்மமே பிரபஞ்சமாக இருக்கிறது. கிறிஸ்துவ நூலில் "In the beginning was Word, Word was with God, Word was God" என்று இருக்கிறது. Word என்பது என்ன என்று கிறிஸ்தவர்களுக்குத் தெரியாது. அதனுடைய விளக்கம் வேதாந்தத்தில் இருக்கிறது.

சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்து வருகின்றன. அப்பொழுது அவைகள் ஓசையைக் கேட்கவும், ஓசையை உண்டுபண்ணவும் செய்கின்றன. நீருக்குள்ளே ஓசையை உண்டுபண்ணுவது சாத்தியமாகாது. ஆனால் மீன்களும் ஓசையை உண்டுபண்ணக்கூடிய நிலையில் இருக்கின்றன என்று விபுலானந்த சுவாமிகள் கண்டுபிடித்தார்கள். மீன்கள் நீருக்கு மேலே குதித்துவந்து ஒருவித ஓசையை உண்டுபண்ணிவிட்டு நீருக்குக் கீழே போகின்றன. அப்படி அவைகள் உண்டுபண்ணுகின்ற ஓசை இசையாக அமைகின்றது. விபுலானந்த சுவாமிகள் அதைக் கவனித்து யாழ் ஆராய்ச்சி செய்து ஒரு பெரிய புஸ்தகம் எழுதியுள்ளார். சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிக்கின்ற பொழுது ஏதேனும் ஒருவிதத்தில் அவைகள் ஓசையை உண்டுபண்ணுகின்றன. அவைகள் ஓசையின் வாயிலாகத் தங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. ஓந்தி என்னும் பிராணி வெவ்வேறு நிறங்கள் எடுத்துத் தன்னுடைய பான்மையை ஓரளவு விளக்குகிறது. நம்முள்ளத்தில் இருப்பதை முகக் குறிப்பின் மூலமாக ஓரளவு விளக்குகின்றோம். ஓசையின் மூலமாகவும் உள்ளத்தில் இருப்பதை விளக்குகின்றோம். பறவைகளும் விலங்குகளும் ஓசையின் மூலமாக உணர்ச்சியை வெளிப்படுத்து

கின்றனவென்பது ஆராய்ச்சி செய்து பார்த்தால் விளங்கும். ஓசையின் மூலமாக நம்மை நாம் விளக்குகின்றோம். ஓசையின் மூலமாக அம்பிகையும் தன் மஹிமையை விளக்கிக் கொண்டிருக்கின்றாள்.

அம்பிகைக்குப் பாஷாரூபா என்பது ஒரு பெயர். மொழி வடிவினளாக அம்பிகை இருக்கின்றாள் என்பது அதற்குப் பொருள். ஓசை பண்பட்ட பெரிய நிலைக்கு வருகிறபொழுது மொழியாக வடிவெடுக்கிறது. பிறந்தகுழந்தை அழுகையின் மூலம் தன் தேவையை விளக்குகின்றது. சிரிப்பதன் மூலம் அது தன்னிடத்துள்ள திருப்தியை வெளிப்படுத்துகிறது. குழந்தைக்கு யாரும் அதைப் புகட்டவில்லை. குழந்தையினிடத்து அது இயல்பாக அமைந்திருக்கிறது. சிற்றுயிர்கள் ஓசையை உண்டு பண்ணுகின்றன. அவ்வோசையை ஆராய்ந்து பார்த்தால் அந்தந்த நிலையில் அதற்கேற்ற குறுகிய மொழியாக ஓசை வடிவெடுப்பது விளங்கும். காகம் உணவு இருக்கிறது என்ற செய்தியைக் கரைதல் மூலம் மற்ற காக்கைகளுக்கு உணர்த்துகின்றது. அவ்வோசையைக் கேட்டதும் மற்ற காக்கைகள் பறந்தோடி வருகின்றன. காக்கை ஒன்று ஆபத்துக்குள்ளாகி இறந்துபோய்விட்டால் அந்தச் செய்தியைக் கரைதல் மூலம் ஒருகாக்கை மற்ற காக்கைகளுக்குத் தெரிவிக்கிறது. துக்கத்துக்கேதுவான அக்கரைதலைக் கேட்டதும் மற்ற காக்கைகள் துணைபுரிய அல்லது துக்கம் விசாரிக்க வருகின்றன. தாய்க்கோழி இரையுண்ண குஞ்சுகளை அழைக்கும்பொழுது ஒருவிதமான ஓசையை வெளிப்படுத்துகிறது. அவ்வோசையைக் கேட்டதும் இரையுண்ணக் குஞ்சுகள் ஓடி வருகின்றன. ஆபத்து நேரிடும் பொழுது தாய்க்கோழி ஒருவித ஓசையை வெளிப்படுத்துகிறது. அவ்வோசையைக் கேட்டதும் குஞ்சுகள் ஓடிவந்து தாய்ப் பறவையின் இறக்கைகளுக்குள் பதுங்கிக்கொள்கின்றன. எல்லா இனங்களுக்கிடையிலும் இப்படி ஓசையைக்கொண்டு உணர்ச்சியை வெளிப்படுத்துகின்ற நிலை ஒரு போக்கில் அமைந்திருக்கின்றது. பறவைகள் உண்டுபண்ணுகின்ற ஓசை காதுக்கு மிக இனிமையாக இருக்கிறது. குயில் இனிய ஓசையை வெளிப்படுத்துகிறது. அதற்கு நிகரான ஓசையை மற்றவுயிர்களிடத்துக் காண முடியாது.

உள்ளத்திலிருக்கும் உணர்ச்சியை அல்லது கருத்தை வெளிப்படுத்துவதற்கு ஓசை உதவுகின்றது. ஓசையின் பண்பட்ட நிலை பாஷை அல்லது மொழியாக வடிவெடுக்கிறது. ‘அகர முதல எழுத்தெல்லாம்’ என்பதில் அகரம் ஓசையைக் குறிக்கிறது; எழுத்து மொழியைக் குறிக்கிறது. நாதம் என்பதற்குப் பிரணவம் என்பது ஒரு பொருள். அம்பிகை பிரணவ சொரூபமாக இருக்கின்றாள். பிரணவத்தில் அகர உகர மகர என்னும் மூன்று அக்ஷரங்கள் சேர்ந்துள்ளன. இவை மூன்றும் சேர்ந்து ஏகாக்ஷரம் உண்டாகின்றது. ‘அ’ என்கின்ற பொழுது தோற்றத்துக்கு வருகிறது. ‘உ’ என்பது நிலைபெறச் செய்கிறது. ‘ம’ என்பது ஒடுக்குகிறது. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்னும் முத்தொழில்களும் ‘ஓம்’ என்னும் ஏகாக்ஷரத்தில் அடங்கி இருக்கின்றன. சிவனுருக்கு ஓங்காரமூர்த்தி என்று பெயர். கணபதிக்கும் ஓங்காரமூர்த்தி என்று பெயர். விஷ்ணுவும் பிரணவமூர்த்தி எனப்படுகிறார். அம்பிகையும் ஓங்கார சொரூபிணியாகின்றாள். இங்ஙனம் சொல்லுமிடத்துப் பரவஸ்து ஓங்கார சொரூபமாக இருக்கிறது என்பது வெளியாகிறது. ஓசையைச் சரியாக அறிகின்றளவு அதைப் பயன்படுத்துகின்றளவு பரவஸ்துவை அறிவதற்கும் அதனோடு தொடர்புவைப்பதற்கும் நமக்குச் சாத்தியம் ஆகின்றது. தத்துவத்தைச் சரியாக ஆராய்ந்தவர்கள் அகிலாண்டமும் ஓசை சொரூபமாக இருப்பதை அறிந்தார்கள். அதற்குப் பதார்த்தம் என்னும் பொருத்தமான சொல் அமைத்தார்கள். பதம் என்றால் ஓசை அல்லது சொல். அர்த்தம் என்றால் விளக்கம். ஓசையும் ஓசைக்கு விளக்கமும் சேர்ந்து பதார்த்தமாகிறது. ஒவ்வொரு பொருளும் ஓசையின் ஒரு வடிவம். பொருள் ஜடமாகஇருந்தாலும் அதற்கேற்ற ஓசை இருக்கிறது. பொருள் சேதனமாக இருந்தாலும் அதற்கேற்ற ஓசை இருக்கிறது. ஓசையைக் கையாளுதல் கலை ஞானம் ஆகின்றது. ஓசையைக் கையாளுவதன் மூலம் மொழி உரு வெடுக்கிறது. பூர்வீக மக்கள் இன்றைக்கும் மலைப் பகுதிகளில் வசித்து வருகிறார்கள்.

அவர்களுடைய மொழி குறுகியதாக இருக்கின்றது. அவர்கள் மொழியைக் கொண்டு சில கருத்துக்களைத்தான் விளக்க முடியும். எல்லாக் கருத்துக்களையும் விளக்க முடியாது. பண்பட்ட மனிதர்களுக்கும் விலங்குகள் பறவைகளுக்கும் இடையில் அவர்களுடைய மொழி இருக்கிறது. குரங்குகளும் யானைகளும் ஓரளவு மொழிக்குநிகரான ஓசையை உண்டு பண்ணுகின்றன. அவ்வோசை மொழி உருவாவதற்கு ஒருபடி கீழே இருக்கிறது. மொழியில் மனிதன் எவ்வளவு தூரம் மேலே போய் இருக்கிறானோ அது அவனுடைய மனபரிபாகத்துக்கு விளக்கமாகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய முகத்தை நேசிக்கிறார்கள். தங்களுடைய முகங்களைக் கண்ணாடியில் பார்த்து ரசிக்கிறார்கள். அது அவைகள் மீதுள்ள அபிமானத்தைக் காட்டுகிறது. முகத்தில் பற்றுதல் வைத்திருப்பது போன்று மொழியிலும் பற்றுதல் வைத்திருக்கிறார்கள். தங்கள் முகத்தை ரசிப்பதற்கு அனுமதி இருப்பது போன்று மொழியைச் சிலாகித்துச் சொல்வதற்கும் அனுமதியுண்டு. ஆனால் குறுகிய மனப்பான்மை படைத்தவர்கள் தங்கள் மொழிக்கு நிகரான மொழி உலகத்தில் இல்லை என்கிறார்கள். அப்படிக் கூறுவதில்தான் உபத்திரவம் உண்டாகின்றது. உலகில் பண்பட்ட மொழிகள் பல இருக்கின்றன. ஒரு மொழி எந்தத்துறையில் கையாளப்படுகிறதோ அந்தத்துறையில் அம்மொழி பண்பாடு அடைந்திருக்கிறது. அராபிய மொழியில் ஒட்டகம் சம்பந்தமாக அறுநூற்று ஐம்பது சொற்கள் இருக்கின்றனவாம். ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கையில் ஒட்டகம் மிகவும் சம்பந்தப்பட்டிருக்கிறது. மேல்நாட்டிலுள்ள லத்தீன் மொழியும் இந்தியாவிலுள்ள சமஸ்கிருதமும் பண்பட்ட இரண்டு மொழிகளாகும். தத்துவ ஆராய்ச்சிக்குச் சமஸ்கிருத மொழி மிகவும்பயன்படுகிறது. தத்துவத்தை விளக்குவதற்குச் சமஸ்கிருதத்திலுள்ள அளவுக்கு உலகத்தில் வேறு எந்த மொழியிலும் பதங்கள் இல்லை. லலிதா சஹஸ்ரநாமம் அம்பிகையின் மஹிமையை விளக்குவதற்காக வந்துள்ளது. விஷ்ணு சஹஸ்ர நாமங்களும், சிவ சஹஸ்ர நாமங்களும், கணேச சஹஸ்ர நாமங்களும், சுப்ரமண்ய சஹஸ்ர நாமங்களும் அந்தந்தத் தெய்வங்களைப் பற்றிய உண்மைகளை எல்லாம் விளக்குகின்றன. கங்கைக்குப் பிரம்மவாரி என்பது ஒரு பெயர். கங்கையின் மஹிமையை விளக்குவதற்குக் கங்கா சஹஸ்ர நாமங்கள் அமைத்திருக்கிறார்கள். இனி லத்தீன் மொழியில் உடல் கூறு சம்பந்தமானவற்றை விளக்குவதற்கு இரண்டாயிரம் சொற்களுக்கு மேல் இருக்கின்றன. டாக்டர்களுக்குப் படிக்கின்றவர்கள் லத்தீன் மொழியிலுள்ள சொற்களைப் படித்தாக வேண்டும். ஸ்தாவர நூல்கள் படிக்கின்றவர்களும் லத்தீன் மொழியைக் கற்றாக வேண்டும். ஏனென்றால் ஸ்தாவர சம்பந்தமான அநேக சொற்கள் லத்தீன் மொழியில் இருக்கின்றன. சமஸ்கிருதத்தைப் பற்றிய ஒரு கருத்தை நாம் அறிந்திருப்பது அவசியம். ஓசையும் ஓசையின் நேர்விளக்கமாக இருப்பதும் பதார்த்தம். ஓசையை நேர்காதில் கேட்டு அந்த ஓசைக்கேற்றபிரகாரம் ரிஷிகள் பெயர் வைத்தார்கள். அது இயற்கையாக அமைந்த சொல்லாகிறது. உலகம் முழுதும் உள்ள மொழிகளில் தாய் என்பதை விளக்குவதற்கு மகாரம் வந்துசேர்வதைப் பார்க்கிறோம். மாதா, மதர், மாத்ரு, அம்மா என்பனவற்றிற்கெல்லாம் பீஜம் மகாரமாக இருக்கின்றது. தந்தையைக் குறிப்பதற்கான சொற்களில் ‘ப’ அடிப்படையாக இருக்கும். பிதா, அப்பா, பப்பா, பாதர் என்ற சொற்களெல்லாம் தகப்பனாரைக் குறிக்கின்றன. அச் சொற்கள் ‘ப’ வை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. சில ஓசைகள் சில மொழிகளுக்கே பொதுவாக வந்துசேர்கின்றன. இயற்கை சில மந்திரங்களை ஓயாது உச்சரித்துக்கொண்டே இருக்கிறது. அவைகளைக் காதால் கேட்ட ரிஷிகள் அந்த ஓசைகளை இணைத்து வைத்து வேதங்களை உண்டு பண்ணினார்கள். அவ்வேதங்களில் அக்னிக்குரிய மந்திரமுண்டு. அம்மந்திரத்தை உச்சரித்தால் தீ பற்றிக்கொள்ளும். வேதங்களிலுள்ள வருணனுக்குரிய மந்திரத்தை உச்சரித்தால் மழை கொட்டும். ஓசைக்கு அவ்வளவு சக்தி இருப்பதை ரிஷிகள் அறிந்திருந்தார்கள். அந்த மஹிமை சமஸ்கிருத மொழியில் மிக உயர்ந்த நிலையில் அமைந்திருக்கிறது. அதை முன்னிட்டுச் சமஸ்கிருத மொழியைப் புறக்கணிக்கமுடியாது. எங்ஙனம் ஸ்தாவரம், உடற்கூறு சம்பந்த

மாக ஆராய்ச்சி செய்கிறவர்கள் லத்தீன்மொழியைப் புறக்கணிக்க முடியாதோ அங்ஙனம் தத்துவ ஆராய்ச்சி செய்கின்றவர்கள் சமஸ்கிருத மொழியைப் புறக்கணிக்க முடியாது.

நாம் நம்மொழியை நல்ல முறையாகக் கற்று வருவது ஒருவித நல்ல ஆத்ம சாதனமாகிறது. சொற்களை எல்லாம் கடந்து அதீத நிலைக்குப் போவதுதான் குறிக்கோள். பிரபஞ்ச வாழ்க்கையில் இருக்கும் பொழுது சொற்களைக் கையாண்டாக வேண்டும். பண்டம் வாங்குவதற்குப் பணம் உதவுவது போன்று கருத்தை ஏற்பதற்கும் வழங்குவதற்கும் மொழி உதவுகிறது. மக்களுக்கிடையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு மொழி துணையாக இருக்கிறது. சமீபகாலத்தில் காலமான ஹெலன் ஹெல்லர் செவிடாகப் பிறந்தார். எனவே அவர் ஊமையாக இருந்தார். பிறந்த பின் கொஞ்ச நாளில் கண் பார்வையும் போய்விட்டது. புறவுலகத்தோடு மோப்பம் ஸ்பரிசம் ஆகிய இரண்டு இந்திரியங்கள் மூலமாகத் தொடர்வு வைத்தார். பயிற்சியின் மூலமாக அவ்வம்மையார் பேசிப்பழகினர். அவர் பேசுவது அவருக்கே கேட்காது. பிறர் பேசுவதை அவ்வம்மையாருடனிருந்த மாது ஒருத்தி தெரிவிக்க ஸ்பரிச உணர்வு மூலம் அவர் அறிந்துகொண்டார். நகைச்சுவை வருகிற விடத்து அவ்வம்மையார் சிரிப்பார். பண்பட்ட கருத்துக்களை ஏற்கவும் பேசவும் அவரால் முடிந்தது. டெல்லி பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது. அவருடைய வாழ்க்கை மொழி எவ்வளவு உபகாரம் செய்யவல்லது என்பதை விளக்குகிறது. அவருடைய வாழ்க்கை, மேலும் ஒரு செய்தியை நமக்குத் தருகிறது. ஒரு இந்திரியம் போய் விட்டால், என்ன பாபம் செய்தோமோ என்று தங்களைத் தாங்களே நொந்துகொள்வது மக்களுடைய போக்கு. மூன்று இந்திரியங்கள் இல்லாத விடத்து இரண்டு இந்திரியங்களைக் கொண்டு உலகத்தோடு தொடர்பு வைக்கலாம் என்பதை அவ்வம்மையார் தம் வாழ்க்கையின் மூலம் விளக்கிக் காட்டியுள்ளார். வாழ்க்கையில் எவ்வித இடையூறையும் மீளலாம் என்பதை அவர் விளக்கிக் காட்டி உள்ளார்.

மொழியைக் கையாளுகின்ற வாய்ப்பு நமக்கு இருக்கிறது. மொழியைச் சரியாகக் கையாண்டு பழகுவது ஆத்மசாதனமாகும். நம் உள்ளத்திலுள்ள கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பொருத்தமான மொழியின் மூலம் வெளியிடுவது மொழியைச் சரியாகக் கையாளுவதாகிறது. பிறரிடமுள்ள கருத்துக்களைச் சரியான பாங்கில் ஏற்றுக்கொள்வது மொழியின் மூலம் நிகழ்கிறது. நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் என்னும் ஆறு சாஸ்திரங்களுள் நியாயமும் வைசேஷிகமும் முறையாக நினைப்பதையும், நினைத்ததை முறையாகப் பேசுவதையும் புகட்டுகின்றன. முறையாக நினைக்கவும் பேசவும் கற்றுக்கொண்டு தத்துவ ஆராய்ச்சிக்கு வரவேண்டும். தராசை முதலில் பரிசோதனை செய்து பார்த்துவிட்டுப் பிறகு எடை போடப் பயன்படுத்த வேண்டும். உயிரோடு உயிர் இணக்கம் வைக்க முயலுவதற்கு முன் சரியாக நினைக்கவும் நினைத்ததைச் சரியாக எடுத்துச் சொல்லவும் தெரிந்து கொள்ள வேண்டும். செயல்களுக்கெல்லாம் மிகக் கஷ்டமானது சிந்தனை செய்வதாகும். சிந்தனைசெய்து பழகுவது ஒரு சிறந்த பயிற்சி ஆகிறது. நினைத்துப்பார்த்தால்தான் சந்தேகம் வரும். சிந்திப்பது இன்னும் ஆழ்ந்ததாகப் போனால் சந்தேகம் தெளிவாகும். நினைத்துப் பார்க்காத நிலை கீழ்நிலையாகும். எனவே சந்தேகம் வராத நிலை கீழ் நிலை. சந்தேகம் வருவது இடை நிலை. சந்தேகம் தெளிவது உயர்ந்த நிலை. சிலருக்குச் சந்தேகமே வருவதில்லை. ஏனென்றால் அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. நரேந்திரருக்குக் கடவுள் உண்டா என்ற சந்தேகம் வந்தது. அச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்குப் பல அறிஞர்களை அணுகினர். யாரும் அவருடைய சந்தேகத்தைத் தீர்க்க முடியவில்லை. கடைசியாக அவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் வந்த பொழுதுதான் அவருக்கு ஏற்பட்ட சந்தேகம் தெளிவாயிற்று. சரியாக எண்ணிப் பார்ப்பது, பிறகு எண்ணிப் பார்த்ததை எடுத்துச் சொல்வது நல்ல பயிற்சி ஆகும். சிலர் அரைமணி அல்லது ஒருமணிநேரம் பேசினலும் அவர்கள்பேசிய விஷயம் இன்னதென்று கேட்டவர்களுக்கு விளங்காது. சொல்லைப் பெருக்கிக் கொண்டு போவது விஷயத்தைக் கிரஹிக்கவில்லை என்ப

தைக் காட்டித்தருகிறது. சொற்களை அளந்தெடுத்துப் பேசுவது பண்பட்ட நிலையாகிறது. ரிஷிகள் சொற்களை மிகைபடக் கையாள மாட்டார்கள். சொல்லை எப்படி அளந்தெடுத்துக் கையாளுவது என்பதை இமயமலையிலுள்ள ஒரு பெரியவர் விளக்கிக் காட்டினர். அப்பெரியவருடைய வாயிலிருந்து அனவசியமான சொல் வராது. அவர் இமயமலையில் பனிப் பிரதேசத்தில் சரீரத்துக்கு மேலே துணி ஒன்றும் போடாது கௌபீனத்தோடிருந்தார். அது எப்படிச் சாத்தியம் என்று அவரை ஓர் அன்பர் கேட்டார். அவர் திருப்பி அவ்வன்பரை உன் முகத்துக்கு உடை போடுகின்ருயா ? என்ருர். அவ்வன்பர் இல்லை என்று சொன்னர். அப்படித்தான் என்று சொல்லி முடித்துவிட்டார். சொல்லை அங்ஙனம் அளவெடுத்துக்கையாண்டு பழகுவது அவசியம். சுருக்க வேண்டிய இடத்தில் சுருக்கி விரிக்க வேண்டிய இடத்தில் விரித்துப் பேசுவது ஓர் அலாதி கலை ஆகிறது. வால்மீகி ராமாயணத்தில் ஸ்ரீ ராமனும் லட்சுமணனும் சீதையை இழந்த துயரத்தோடு வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுக்ரீவனும் ஆஞ்சநேயனும் இன்னும் மூவரும் பார்த்தார்கள். அவர்களைப் பார்த்ததும் சுக்ரீவனும் மற்ற மூவரும் பயந்து ஓடிப்போய்விட்டார்கள். ஆஞ்சநேயன்மட்டும் அவர்களை உற்று நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆஞ்சநேயனும் இரண்டொரு வாக்கியங்கள் பேசியதில் ராமன் அவனை எத்தகையவன் என்று அளந்து எடுத்துவிட்டார். லட்சுமணு இவன் நல்லவன். இவனுடைய நட்பு நமக்குப் பயன் படும் என்று ராமன் லட்சுமணனிடம் கூறினர். ஆஞ்சநேயன் ராம லட்சுமணர்களைப் பார்த்துச் சுருக்கமான கேள்வி கேட்டான். ராமனும் அவனுக்குச் சுருக்கமான பதில் கொடுத்தார். இருவரும் கல்விமான்கள். எனவே அவர்கள் சொற்களைக் கையாளுகின்ற முறையில் கையாண்டார்கள். இங்ஙனம் சொற்களைச் சிறந்த முறையில் கையாளுவது அம்பிகையினுடைய மஹிமையைப் போற்றுவதாகிறது. சொல்மயமாய் இருப்பது அம்பிகையின்மஹிமையாகும். நாதரூபா என்று அம்பிகை போற்றப்படுகின்ருள்.

நாள்தோறும் உணவு உண்கின்ருேம். நாள் தோறும் கடவுள் வழிபாடு செய்கின்ருேம். நாள்தோறும் உடற்பயிற்சியும் செய்ய வேண்டும். நாள்தோறும் நாவிற்கும் பயிற்சி தர வேண்டும். சாது ஒருவர் ஆறு மாதகாலம் மௌனத்தில் இருந்தார். அதன்பின் அவரால் பேச முடியவில்லை. பேசுவதற்கு அவர் பயிற்சி பெற வேண்டியது இருந்தது. எனவே அடக்கமாகப் பேசிப் பழகுவது நாவைக் கையாள்வது ஆகின்றது. கலைமகள் நாவில் குடிகொண்டிருக்கின்ருள். அதனல் அவளுக்கு நாமகள் என்றும் பெயருண்டு. கலைகளுக்கு அதிஷ்டான தெய்வமாக நாமகள் இருக்கின்ருள். சரியாகச் சிந்திக்கவும், சிந்தித்ததைச் சரியான சொற்களில் எடுத்து வழங்கவும் கற்றுக்கொள்வது சிறந்த பயிற்சியாகிறது. ரஷ்யாவில் சில விளையாட்டு வீரர்களை அரசாங்கச் செலவில் ஆண்டு முழுவதும் விளையாடிக்கொண்டிருக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அவர்கள் எங்கு விளையாட்டுப் போட்டி நடக்கிறதோ அங்குச் செல்லவேண்டும். விளையாட்டுத்துறையில் நிபுணர்களை ஆயத்தம் செய்யும் பொருட்டு அவர்கள் அத்தகைய ஏற்பாடு செய்திருக்கிருர்கள். எல்லாவற்றிற்கும் முறையான பயிற்சி அவசியமாகிறது. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பது கோட்பாடு. மொழியைச் சரியாகக்கையாள்வதற்குப் பேசிப் பழகுவது அவசியமாகிறது. ஒரு கலையைக் கற்ருல் அதை முறையாகக் கையாண்டு கொண்டே இருந்தால்தான் அது நம்மிடத்து வளர்ந்துகொண்டே இருக்கும். அம்பிகை பாஷாரூபமாக இருக்கின்ருள். பாஷாரூபமாக இருந்து நமக்கு நல்ல கருத்தை ஏற்கவும் வழங்கவும் அருள்புரிந்து வருகின்ருள். அந்தக் கலையை நாள்தோறும் வளர்த்து வருவது நம் கடமையாகும்.

வாக்வாகினி என்பது அம்பிகைக்கு அமைந்துள்ள பெயர்களுள் ஒன்று. வாக் என்பது சொல். சொல்லை எந்த இடத்தில் எப்படிக் கையாள்வது என்பது சொற்கலையின் சிறந்த பகுதியாகிறது. ஒரு கருத்துக்கும் மற்ருெரு கருத்துக்கும் இடையில் நுண்ணிய வேற்றுமை இருக்கும். அதை அறிந்து பொருத்தமான சொல்லைப் பிரயோகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். (தொடரும்)

அனுமன் - 9

(சுவாமி ஆத்மானந்தர்)

அசோகவனத்தின் அழிவு

சீதையினிடம் விடைபெற்றுச் சென்ற அனுமன் அசோகவனத்தைக் கடக்குமுன் பலவாறு சிந்திக்கிருன். அவன் செய்த செயற்கரிய செயல்களெல்லாம் மிகவும் அற்பமான செயல்களாகவே அவனுக்குத் தோன்றுகின்றன. கடக்க முடியாத கடலைக் கடந்து சீதையைக் கண்டதையும், கணையாழியைக் கொடுத்துச் சீதையின் உயிரைக் காத்ததையும், இராமனுக்குக் காட்ட சூடாமணியைப் பெற்றதையும் மிகச் சிறிய செயல்களென்றே கருதுகிருன். இந்தச் சிறு செயல்களோடு திருப்தியுற்றுத் திரும்புதல் கூடாது என்று கருதுகிருன். சீதா பிராட்டியைச் சிறைமீட்டு எம்பெருமான் இராமனிடத்துச் சேர்த்தேனல்லேன். அவ்வாறு செய்தற்குச் சீதை இடந்தரவில்லை; அதனல் அதனை விட்டுவிட்டேன். இராவணனுடைய பத்துத்தலைகளையும், இருபதுகைகளையும் ஒருசேரப் பிணித்துச் சிறைவைத்தல் அல்லது அவனை வெல்லுதல் ஆகிய செயல்களையும் செய்திலேன். இவற்றை நான் செய்வது இராமன் வீரத்துக்கு இழுக்காகும் என்று விலக்கினேன். இராவணன் பட்டத்தரசி மண்டோதரியைச் சிறை வைத்துப் பழிக்குப்பழி வாங்கவும் செய்திலேன். அச்செயல் பிறன்மனை கவர்ந்த இராவணன் செயலைப் போன்றதாகிவிடும் எனக் கருதி விட்டு விட்டேன். ஆனல் எதிரிகளாகிய அரக்கர்களைப் போருக்கிழுத்துக் கொல்லுதல் பழிக்குரிய செயலன்று. அரக்க வீரர்களைப் போரில் அழிப்பதன் மூலம் எம்பிரான் இராமபிரான் துணைவல்லமை எத்தகையது என்பதை இராவணனுக்கு விளங்கச் செய்தவனவேன் என்று கருதுகிருன். அரக்க வீரர்களைப் போருக்கழைப்பதற்கு உபாயத்தைத் தேடுகிருன். இராவணனுக்கு மிகவும் பிடித்தமானது அசோகவனம். அதனை அழித்தால் அரக்கர் கூட்டம் போருக்கு வருவது நிச்சயம் எனக் கருதி அசோகவனத்தை அழிக்கத் தொடங்குகிருன். அனுமன் பேருருவம் கொண்டு அவ்வனத்திலுள்ள மரங்களையெல்லாம் கைகளால் ஒடித்தும், கால்களால் உதைத்தும் சின்னபின்னமாக்குகிருன். அசோகவனத்திலுள்ள மரங்கள் அனுமன் கைகளில் சிக்கிப் படாதபாடுபடுகின்றன. கற்பகப் பூஞ்சோலை போல் இருந்த அசோகவனத்தை உருத்தெரியாமல் அழித்துவிட்டான் அனுமன். அவ்வனத்திலிருந்த மிருகங்களும், பறவைகளும் பயத்தால் நடுங்கின. இங்குமங்கும் ஓடி விலங்கினம் மாண்டு விழுந்தன. பறவைகள் பறந்து சென்று கடலில் வீழ்ந்து மடிந்தன. அனுமன் ஆடிய ருத்ர தாண்டவத்தில் வனம் முழுதும் அழிந்தாலும் சீதாபிராட்டி தங்கியிருந்த மரம் மாத்திரம் அழியாமல் அப்படியே இருந்தது.

அசோகவனத்தை அழித்துவிட்டுத் தனித்து நின்ற அனுமன் பேருருக்கொண்ட காட்சி மூவுலகை ஈரடியால் அளந்த திரிவிக்ரமனையும், திருப்பாற்கடலைக் கடைய மத்தாக இருந்த மந்தரமலையையும், ஊழிக்காலத்து அனைத்தையும் அழித்தொழிக்கும் ருத்ரமூர்த்தியையும் ஒத்திருந்ததாம்.

> தாழ்இரும் பொழில்கள் எல்லாம் துடைத்து, ஒரு [தமியன் நின்ருன்
> ஏழ்நெடு ஏழுநாடும் அளந்தவன் எனலும் ஆனுன்;
> ஆழியின் நடுவண்நின்ற அரு வரைக்கு அரசும் [ஒத்தான்;
> ஊழியின் இறுதிக் காலத்து உருத்திரமூர்த்தி [ஒத்தான்.

உறங்கிக் கிடந்த அரக்கியர் அசோகவனத்தின் அழிவால் ஏற்பட்ட அதிர்ச்சியினல் விழிப்புற்றெழுந்தனர். சின்னபின்னமாகிக் கிடக்கும் அசோகவனத்தையும், அனுமன் பேருருவையும் கண்டு திகைப்புற்றனர். அச்சத்தோடு சீதையை அணுகி, ‘இந்த மாயவடிவம் யாதென அறிவாயோ?’ என வினவினர். ‘மாயம்வல்ல அரக்கியராகியநீங்கள்அறியீராயின், யாரறிவார்?’ என்ருள் சீதை. அரக்கியர் அனுமனைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி ஓடியொழிந்தனர். அனுமன் சுற்றுமுற்றும் பார்த்தான். அருகில் செயற்கையாகச் செய்யப்பட்ட ஒரு குன்றிருந்தது. அது இராவணன் ஏவலினல் பிரம்மதேவனல் செய்யப்பட்டது. பலவகையான ரத்தினக் கற்களால் இயற்றப்பெற்றது. சந்திர சூரியர்களுக்கும்

ஒளியைத் தரக்கூடியது. அந்த ஒளிமயமான செய்குன்றைத் தரையோடு பெயர்த்தெடுத்து மாடமாளிகைகள் நிறைந்த இலங்கைமீது வீசி யெறிந்தான். அனுமன் எடுத்து எறிந்த அச் செய்குன்று வீழ்ந்ததனுல் இலங்கையில் உள்ள மாடமாளிகைகள் பல தகர்ந்து பொடிகளாயின. அசோகவனத்தை அரக்க வீரர்கள் மட்டு மன்றித் தேவர்களும் காவல் புரிந்தனர். அனுமன் செயலைக்கண்டு அஞ்சி நடுங்கிய அத் தேவர்கள் தங்கள் கடமையைச் செய்யவேண்டு மென்ற எண்ணத்தோடு இராவணனை அணுகி, அசோகவனம் முழுதையும் ஒரு குரங்கு அழித் தொழித்தது என்றனர். அது கேட்ட இரா வணன் அத்தேவர்களை நோக்கி, ஒரு தனிப் பட்ட குரங்கு அசோகவனம் முழுதையும் அழித் தது என்கிறீர்கள்; நீங்கள் காத்துநின்ற இரத் தினச் செய்குன்றையும் பிடுங்கியெறிந்து சிதைத்தது என்கிறீர்கள். இது வியப்புக்குரிய விஷயம்தான். இதை யார் நம்புவார்? இப்படிப் பட்ட பேச்சை மூடரும் மொழியார் என்று கூறி நகைக்கலானுன். ஆனுல் அத்தேவர் களோ, இராவணனை நோக்கி, 'அந்தக் குரங்கு சாதாரணமானதன்று. அந்த வானரனை மும் மூர்த்திகளில் ஒருவன் எனலாம். அவன் வலிமையை நீயே நேரில்காணலாம்' என்றனர். அப்போது அனுமன் பூமி பிளக்கவும், தேவர் களும் திசையானைகளும் திகைத்தோடவும், அரக்கமாதர்களின் கர்ப்பங்கலங்கவும் ஆர வாரித்தான். அனுமன் செய்த ஆரவாரம் இடி இடித்தாற்போல் இராவணன் இருபது செவி களிலும் விழுந்தது. இடிவிழுந்த மலைகள் நடுங்குவதுபோல் அவன் முடிபுனைந்த பத்துத் தலைகளும் நடுங்கலாயின. அப்போது இராவ ணன்: 'இது அந்தக் குரங்கின் ஆர்ப்பரிப்பா! என் ஆர்ப்பரிப்புக்கும் மேம்பட்டதாக இருக் கிறதே!' என்று பொருமை கொள்ளலானுன். அருகில் இருந்த அரக்கவீரர்களை அழைத்து, 'இந்தக் குரங்கு எப்படியாயினும் தப்பிவிடாத படி அதைப் பிடித்துவாருங்கள். குரங்கைக் கொன்றுவிடாது உயிரோடு கொண்டுவாருங் கள்' என்று கட்டளையிட்டனுப்புகிருன்.

அரக்கவீரர்கள் சர்வாயுதபாணிகளாய், பேரிரைச்சலுடன் அனுமனைப் பிடிக்கச் செல்லு கின்றனர். விரைந்து சென்று அனுமனைச் சூழ்ந்துகொண்டனர். சரமாரியாக ஆயுதங்களை அனுமன்மீது பொழியத்தொடங்கினர். உடனே அனுமன் அருகிலிருந்த ஒரு மரத்தைப் பிடுங்கி அரக்கரின் மத்தியில் குதித்து அவர்களைத் தாக் கிச் சின்னுபின்னமாக்கினுன். அரக்கவீரர் களுடைய தலைகளையும் தோள்களையும் மரத்தால் தாக்கி அருவிகள் பெருகுவதுபோல் அவர்கள் உடம்பினின்றும் உதிரம் பெருகும்படி செய் கின்ருன். அனுமன் கால்பட்டு மடிந்தனர் பலர்; அவன் கைபட்டு மடிந்தனர் பலர்; அவன் எடுத்து வீசியெறிந்ததனுல் கடலிலும் மலையி லும் விழுந்து மடிந்தனர் பலர். காலால் உதைத் தும், கைகளால் அடித்தும், வாலால் சுழற்றியும் அரக்கரைக் கொன்ருன். அனுமனுல் அடிக்கப் பட்டும், பிடிக்கப்பட்டும், இடிக்கப்பட்டும், நெரிக்கப்பட்டும் பல்லாயிரவர் மாண்டனர். அச்சத்தாலேயே ஆயிரக்கணக்கானேர் மாண் டொழிந்தனர். அரக்கவீரர் அழிந்த செய்தி இராவணனுக்கு எட்டியது. அவன் அடங்காக் கோபம் கொண்டான். அருகிலிருந்த சேனுபதி யாகிய சம்புமாலியை நோக்கி, 'நீ சேனையோடு சென்று அந்தக் குரங்கைப் பிடித்துவா' என் ருன். அவன் நால்வகைச் சேனைகளுடன் பொன் மயமான தேரில் ஏறிப் பிரகாசிக்கும் கவசம் அணிந்து புறப்பட்டான். அசோகவனத்தின் தோரண வாசலின்மீது அமர்ந்திருந்த அனுமன் சம்புமாலியின் வரவைக்கண்டு ஆரவாரித்தான். அதுகேட்டு அரக்கசேனை திடுக்குற்றது. சம்பு மாலி வீராவேசம்கொண்டான். அரக்கசேனை சூழ்ந்து நின்று படைக்கலங்களை அனுமன்மீது சொரிந்தனர். ஆனுல் அனுமனே தன்மீது விழ வரும் படைக்கலங்களை யெல்லாம் ஒரு கையால் தடுத்தும், ஒடித்தும், அடித்தும் அப்புறப்படுத் தினுன். மற்றொரு கையால் அரக்கசேனையை அடித்துச் சின்னுபின்னமாக்கினுன். இரும்புத் துண்டுகொண்டு அடித்து நொறுக்கினுன். சம்பு மாலி தனித்து நின்ருன். கடுங்கோபம்கொண்டு அனுமனை எதிர்த்தான். அனுமன் அவனை நோக்கி 'உன்னுடன் வந்தவர்களில் ஒருவரை யும் காப்பாற்ருது போனுய். யாருடைய உதவி யும் இன்றி இப்பொழுது தனித்து நிற்கின்ருய். உன்னைக் கொல்லாது விடுகின்றேன்; திரும்பிப் போ' என்ருன். அதற்கு மறுமொழியாகச் சம்புமாலி, 'செத்துப்போனவர்களுள் ஒருவனுக

என்னை எண்ணினையோ! இதோ பார்' என்று கூறிக் கோபத்துடன் வில்லை வளைத்து ஒன்று பத்து நூறாயிரமாக அம்புகளை அனுமன்மீது பொழிந்தான். அனுமன் அவைகள் அனைத்தையும் இரும்புத்தடியினால் விலக்கினான். அதனை அரக்கன் அம்பினால் அறுத்தான். பூத்தமரம் போல் உடம்பெல்லாம் புண்களால் பொலிகின்ற அனுமன் சம்புமாலியின் தேரில் குதித்து அவன் வில்லைப் பிடுங்கிக் கழுத்தில் மாட்டி இழுத்தான். சம்புமாலி கழுத்தறுபட்டு வாய் பிளந்து விழுந்து மடிந்தான்.

சம்புமாலி இறந்த செய்தியை அசோகவனத்தைக் காக்கும் தேவர்கள் இராவணனிடம் சென்று தெரிவிக்கின்றனர். இராவணன் நெஞ்சம் பதைபதைத்தான். 'நானே சென்று அந்தக் குரங்கைப் பிடித்து வருகின்றேன்' என்கின்றான். ஆனால் அருகிருந்த பஞ்ச சேனாபதிகள் இராவணன் அடியில் வீழ்ந்து வணங்கி, "எங்களை அனுப்புங்கள், நாங்கள்போய் அந்தக் குரங்கினைப் பிடித்து வருகின்றோம்" என்றனர். இராவணனும் சரி என்று தலையசைத்தான்.

அந்தப் பஞ்சசேனாபதிகளும் பஞ்சபூதங்களைப் போன்று பலம் படைத்தவராவார்கள். அமரர்க்கும் முனிபுங்கவர்க்கும் ஐம்பொறிகளைப் போலத் துன்பம் விளைவிப்பவர்கள். இந்திரன் வஜ்ராயுதமும் எமன் தண்டாயுதமும் இம்மியளவும் வடுச்செய்ய மாட்டாத தோள் வலிவுடையவர்கள். இத்தகைய வல்லமை வாய்ந்த பஞ்சசேனாபதிகள் சதுரங்க சேனைகளுடனும் அனுமனைப் பிடிக்கப் புறப்பட்டனர். அனுமனைச் சூழ்ந்து நின்று அம்புமாரி பொழிந்தனர். ஆனால் அனுமனோ அந்த அம்புகளைப் பொருட்படுத்தவேயில்லை. தூங்குபவனைப் போன்று அனுமன் கண்மூடியிருந்தான். அது கண்டு சினம் மிகக்கொண்ட அரக்கவீரர் நெருங்கிச் சென்று தாக்க முற்பட்டனர். உடனே அனுமன் ஒரு இரும்புத்தடியை எடுத்து நெருங்கி வந்த அரக்க வீரரையும், எஞ்சிய நால்வகைப் படையினரையும் அடித்து நொறுக்கினான். நால்வகைச் சேனைகளையும் சின்னாபின்னப் படுத்தி நாசமாக்கினான். அரக்க வீரர் அனைவரும் அனுமனால் தாக்குண்டு செத்துப்போனார் களேயன்றி தப்பிப் போனார் யாருமில்லை.

சேனைகள் யாவும் செத்தொழிந்ததை அறிந்த சேனாபதிகள் சினம் மிகக்கொண்டு அனுமனை நெருங்கி அம்புமாரி பொழிந்தனர். அனுமன் அவைகளையெல்லாம் தன்னை நெருங்கவிடாது தடுத்தழித்தான். அத்துடன் இரும்புத்துண்டு கொண்டு ஐவருடைய தேரையும் வில்லையும் அழித்தொழித்தான். தேரும்வில்லும்இழந்த ஐவரும் அனுமனுடன்மல்யுத்தம்புரிய முற்பட்டனர். அவர்களுள் நால்வரைத் தோள்களைப் பிய்த்தும் கால்களை முறித்தும் ஒழித்துக் கட்டினான். கடைசி வரையில் தன்னை எதிர்த்த ஐந்தாவது சேனாபதியின் தோள்களைப் பிடித்து ஒரே அழுத்தில் நிலத்தில் அழுத்திக் கொன்றான். ஐந்து சேனாபதிகளும் அழிந்தொழிந்ததைப் பதுங்கியிருந்து பார்த்துக்கொண்டிருந்த காவல் தேவர்கள் இராவணனிடம் சென்று ஐவரும் மாண்டனர் என்று தெரிவித்தனர்.

பஞ்சசேனாபதிகளின் அழிவைக் கேட்ட இராவணன் சிங்கம்போன்று சீறியெழுந்தான். 'இனி யாரையும் அனுப்புவதில்லை. நானே சென்று அந்தக் குரங்கைப் பிடித்து வருகின்றேன்' என்று புறப்படத் தயாரானான். அப்பொழுது அவன் மகன் அட்சகுமாரன் அவன் கால்களில் விழுந்து வணங்கி 'ஐயனே, அந்தக் குரங்கைப் பிடித்துக் கொணர எனக்கு அனுமதி அளிக்கவேண்டும். இந்த அற்பக் குரங்கை எதிர்த்துப் போரிடுவது உன் தகுதிக்கு ஏற்றதன்று. இச் சிறிய காரியத்தைச் செய்து முடிக்க எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும். நீ போருக்குச் செல்லாது இங்கேயே அரண்மனையில் இரு. முன்பு இந்திரனைப் பிடித்து வர எனக்கு வாய்ப்பளிக்காது என் அண்ணனை ஏவினாய். அதனால் என் வீரத்தினைக் காட்டுதற்கு வாய்ப்பில்லாது போய்விட்டது. இப்போது அந்த வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது. அதனை எனக்கு நீ அளித்தல் வேண்டும். இலங்கை மாநகருக்கு அழிவை உண்டாக்க வந்திருக்கும் அந்தக் குரங்கினை ஒரு நொடிப் பொழுதினில் பிடித்து வருகின்றேன். அவ்வாறு செய்யத் தவறினால் என்னை நீ தண்டிக்கலாம். படைபலத்துடன் செல்ல அனுமதி கொடு' என்று வேண்டுகிறான். இராவணனும் மகனை மகிழ்ந்து நோக்கி 'சேனையோடு செல்லுக' என்று விடை கொடுத்தனுப்புகிறான்.

அட்சகுமாரனோடு சென்ற சேனை அளப்பரிய

தாக இருந்தது. கடல்போல் அளவற்றதாய் இருந்தது. நால்வகைப் படைகளுடனும் பல்லாயிரம் வீரர் புடைசூழவும் முரசங்கள் முழங்கவும் புறப்பட்டுப் போகிறான். அட்சகுமாரனைப் பார்த்து, அனுமன் இராவணனோ இந்திரசித்தோ என்று ஐயுறுகின்றான். பின்னர் இருவரும் அல்லர் என்ற முடிவுக்கு வருகிறான். அட்சன் அனுமனை நோக்கி, 'இந்தக் குரங்கா அரக்கர் கூட்டத்தை அழித்தது' என்று நகைக்கின்றான். ஆனால் அவனுடைய சாரதி, 'இதனை அலட்சியமாக எண்ணலாகாது. நம் மன்னனை (இராவணனை) வென்ற வாலி குரங்கன்றோ! இதனை அலட்சியப்படுத்தாது ஜாக்ரதையுடன் நின்று எதிர்ப்பாயாக' என்றான். அதற்கு அட்சகுமாரன், 'அசோகவனத்தை அழித்ததோடு அமையாமல், அளவற்ற அரக்க வீரர்களையும் அழித்து நம் மானத்தைப் போக்கிய இந்தக் குரங்கைக் கொல்லுவதுடன், உலகம் முழுதும் சென்று குரங்கு என்ற இனமே இல்லாமல் செய்து விடுகின்றேன். குரங்கு குலத்தைக் கருவறுத்து நிர்மூலமாக்கி விடுகின்றேன்' என்று வஞ்சினம் கூறுகின்றான்.

அட்சகுமாரன் நால்வகைச் சேனையுடன் அனுமனைச் சூழ்ந்து நின்று போர் செய்கின்றான். அரக்கவீரர் அனுமன்மீது அம்புகளைச் சரமாரியாய்ப் பொழிகின்றனர். ஆனால் அவைகளையெல்லாம் இரும்புத் துண்டு ஒன்றைக் கொண்டே சுழற்றிச் சுழற்றித் தன்மீது படாது தடுக்கின்றான் அனுமன். இதைக் கண்ட அட்சகுமாரன் அம்பொன்று எய்து அந்த இரும்புத் துண்டைத் தவிடுபொடியாக்கி விடுகின்றான். ஆயுதம் இன்றி இருந்த அனுமன் உடனே அட்சகுமாரன் தேரில் பாய்ந்து அதைப் பொடிப் பொடியாய்த் தூளாக்குகிறான். தேர்ப்பாகனையும், குதிரைகளையும் கையினாலேயே தாக்கி அழித்துவிடுகின்றான். அட்சகுமாரன் கையிலிருந்த வில்லையும் ஒடித்தெறிகின்றான். வில்லை இழந்த அட்சகுமாரன் உடைவாளை உருவி அனுமனை வெட்டப் போகின்றான். ஆனால் அனுமனே அந்த வாளைத் தாவிப் பிடித்து ஒடித்தெறிகின்றான். வாளையிழந்த அட்சகுமாரன் மல்யுத்தத்தில் ஈடுபடுகின்றான். அனுமன் அவனைத் தன் வாலினால் சுற்றிக் கீழே தள்ளி மார்பின்மீது உட்கார்ந்து கொண்டு வாயினின்று பற்கள் உதிரக் கன்னங்களில் குத்துகிறான். பின்னர் அவனைத் தரையோடு தரையாகத் தேய்த்து அரைத்து விடுகின்றான். அட்சகுமாரன் இறந்தபின்னரும் இறவாமல் எஞ்சியிருந்த அரக்கவீரர் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் ஓடி ஓடிஒளிந்து கொண்டனர். சிலர் ரத்த வெள்ளத்தில் மூழ்கியும், சிலர் பிணக் குவியல்களுக்கிடையிலும், சிலர் இங்குமங்கும் ஓடியும் மறைந்தனர். மீன்கள் உருக்கொண்டு சமுத்திரத்துக்குள் சென்று மறைந்தனர் சிலர். பசுக்கள் வடிவுகொண்டு புல்மேய்ந்தனர் சிலர். பறவைகள் உருக்கொண்டு மரங்களில் உட்கார்ந்தும், பறந்து சென்றும் தப்பினர் சிலர். மகளிர் உருக்கொண்டு கூந்தலை வகிர்ந்து நின்று தப்பினர் சிலர். மற்றுஞ் சிலர், 'ஐயனே! நாங்கள் உன் அடைக்கலம்' என்று உயிர்ப்பிச்சைகேட்டு ஓடினர். இன்னும் சிலர் 'நாங்கள் உன் பகைவரல்லர்; இதோ இங்கு நிற்பவரே உன் பகைவர்' என்றனர்.

மீன் ஆய், வேலையை உற்றார் சிலர்; சிலர்
பசுஆய் வழிதொறும் மேய்வுற்றார்;
ஊன்ஆர் பறவையின் வடிவு ஆனார் சிலர்;
சிலர் நான்மறையவர் உரு ஆனார்;
மான்ஆர் கண் இளமடவார் ஆயினர்
முன்னே, தன் குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர்; சிலர் 'ஐயா! நின் சரண்'
என்றார்; நின்றவர் 'அரி' என்றார்.

அட்சகுமாரன் இறந்த செய்தி ஊரெல்லாம் பரவுகின்றது. அரக்கமாதர்களின் புலம்புதல் இலங்கையெங்கும் பரவியது. அட்சகுமாரன் மாண்டதையறிந்த மண்டோதரி, இராவணன் காலில் விழுந்து வயிற்றில் அடித்துக்கொண்டு வாய்விட்டுக் கதறினாள். இராவணனும் பெருந்துயரத்துக்குள்ளானான். அட்சகுமாரன் அழிவையும், சேனைகளின் அழிவையும் தெரிவிக்க வந்த அசோகவனக் காவல் தேவர்கள், இராவணன் கடுந்துயர் கண்டு உள்ளத்தினுள்ளே உவகை கொண்டார்கள். அரக்கர் அழிவு அவர்களுக்கு ஆனந்தத்தையே தந்தது. ஆனால் அடக்க முடியாது வெளிப்பட்ட ஆனந்தக் கண்ணீரையே துக்கக் கண்ணீராகக் காட்டிக் கொண்டு அத்தேவர்களும் இராவணன் காலில் விழுந்து கதறியழுதார்களாம்.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

மனிதன் படும் எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் பற்றுதலே. பந்தபாசத்துக்கு ஏதுவான, பிறவித்தளையை உண்டாக்குகின்ற இப் பற்றுதல் மனிதனுக்கு எதனுல் ஏற்படுகிறது என்று வேதாந்தம் ஆராய்கிறது. மனிதன் உலகிலுள்ள மற்ற ஸ்தூலமான, பஞ்சபூதங்களினுல் ஏற்படுகிற இடையூறுகளைப் பற்றி ஆராய்ந்து, அவற்றின் அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து அவைகளை உபாயங்களால் நீக்குகிருன். இம்முறையில் அவன் கஷ்டங்களை வெல்லுகிருன். தன் சௌகரியங்களை, இன்பங்களைப் பெருக்கிக் கொள்கிருன். அதே போலத் தன்னுள்ளேயே இருக்கிற சூக்ஷ்மமான உலகப்பற்றுதல், சரீர அபிமானம், எப்படி உண்டாகிறது என்பதைக் கண்டுபிடித்தால் அவைகளினின்றும் நம்மை விடுவித்துக்கொள்வது எளிதாகும். அவிவேகத்தால் பற்றுதல் ஏற்படுகிறது. எப்படியெனில் ஜீவன் தேகத்திற்கு அன்னியமாக, வேருக இருந்தும் விவேகமின்மையால் நான் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கின்ற வர்ண பேதங்களும், நான் பிரம்மச்சாரி, கிரஹஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என்கின்ற ஆச்ரம பேதங்களும், நான் ஆண், பெண் என்கிற பால் வேற்றுமைகளும் ஆகிய இவை போன்ற அபிமானங்கள் ஏற்படுகின்றன. இந்த அபிமானங்களுக்கு அவிவேகம்தான் காரணம். வேறு காரணமில்லே. அபிமானத்துக்குச் சரீரம் காரணமாய் இருக்கமுடியாது. எல்லாருக்கும் சரீரம் இருக்கிறது. க்ஷத்திரியனுக்குத் தான் பிராம்மணன் என்ரே, பெண்ணுக்குத் தான் ஆண் என்ரே, பிரம்மச்சாரிக்குத் தான் கிரஹஸ்தன் என்ரே அபிமானம், உணர்வு ஏற்படுவதில்லே என்பது கண்கூடு. ஆகையால் சரீரத்தை மட்டும் காரணமாகக்கொண்டு அபிமானம் ஏற்படுவதில்லே. அவிவேகத்தால்தான் அபிமானம் ஏற்படுகிறது.

குடுமி, பூணூல் ஆகிய புறச்சின்னங்களைக் கொண்டு நான் பிராம்மணன் என்றும், காஷாயம், கமண்டலம் ஆகியவைகளைக் கொண்டு நான் சன்னியாசி என்றும் அபிமானம்வரலாமே என்று கேட்கலாம். அதுவும் சரியன்று. குடுமியும் பூணூலும் வைசியர், குயவர், ஆசாரி ஆகியவர்களுக்கும் உண்டு. அவர்கள் தங்களைப் பிராம்மணன் என்று நினைப்பதில்லே. வனத்தில் தங்கள் பத்தினிகளுடன் வாழ்ந்த ரிஷிபுங்கவர்கள் ஜலவசதிக்காகக் கமண்டலம் வைத்துக் கொண்டிருந்தார்கள். பிச்சைக்காரன் காவி உடுத்திக்கொண்டு திரிகிருன். நாடகத்தில் ஒருவன் கமண்டலமும் காஷாயமும் தரித்து சன்னியாசியாக நடிக்கிருன். ராவணன் சீதையை வஞ்சிப்பதற்காகக் காவி உடுத்தி கமண்டலதாரியாகப் பிரசன்னமானுன். அவர்கள் யாவரும் தங்களைச் சன்னியாசிகள் என்று நினைக்கவில்லே. ஆகையால் குறிப்பிட்ட அபிமானங்கள் புறச்சின்னங்களால் வருவதில்லே.

தான் ஸ்திரீ, புருஷன் என்கிற அபிமானம் அவயவ பேதத்தினுல் ஏற்படுகிறது. அதே போலக் குறிப்பிட்ட தாய் தகப்பன் இவர்களிடமிருந்து உண்டான அவயவ விசேஷத்தால், பிறப்பால் அபிமானம் உண்டாகிறது என்பதும் சரியன்று. பிறப்பினுல், பரம்பரையினுல் குறிப்பிட்ட நோய்கள், குணங்கள், சுபாவங்கள் உண்டாகலாம், தொடரலாம். பிராம்மணன் மென்மையான குணங்களும், சரீரமும் வாய்ந்தவன். க்ஷத்திரியன் மனத்திட்பமும், உடல் வலிவும் வாய்ந்தவன். ஆயினும் எல்லா இனத்திலும், எல்லாவிதமான தன்மைகளும், அழகு, பலம், பண்பாடு வகைகளும் இருப்பதைப்பார்க்கிருேம். ஆகையால் தன்மை வேறுபாட்டாலும் ஏற்றுக்கொண்ட தொழிலினுலும் பிராம்மண க்ஷத்திரிய பாவங்கள், அபிமானங்கள் உண்டாகின்றன என்று சொல்லமுடியாது. கசாப்புத் தொழிலேச் செய்த வியாதன் தபஸ்வியான பிராம்மணனுக்கு ஞானுேபதேசம் செய்தான். துரோணர் க்ஷத்திரியர்களுக்கு வில் வித்தைப் பயிற்சி அளித்தார். அது க்ஷத்திரியத் தொழில். இவர்களுக்குத்தாங்கள் பிராம்மணன், வியாதன் என்கிற உணர்வு தொழிலே முன்னிட்டதல்ல. பிறவியினுல் இந்த உணர்வுகள், அபிமானங்கள் ஏற்படுகின்றன என்று ஓரளவு சொல்லலாம். பிராம்மண ஜாதியில் பிறந்ததினுல் அவன்

தன்னை இயல்பாகவே பிராம்மணன் என்று கருதிக்கொள்கிறான். அரசகுலத்தில் பிறந்த வன் தன்னை ராஜகுமாரன் எனக்கருதிக்கொள் கிறான். ஆயினும் கீழ்க்குலத்தில் பிறந்திருந் தாலும், பாதகமான, கிழான சூழ்நிலையில் பிறந் திருந்தாலும் அவைகளை யெல்லாம் தாண்டி எவ்வளவு பக்தர்கள் தோன்றியிருக்கிறார்கள்! ஸ்ரீ ராமகிருஷ்ணர் தான் பிராம்மணன் என்றோ, ஏழை என்றோ, இந்து அல்லது இந்தியன் என்றோ, ஆங்கிலேயரின் அடிமை என்றோ, ஆண் என்றோ ஒருநாளும் கருதியதே இல்லை. இந்தச் சரீரத்தின், உலகின், லௌகிகத்தின், பேதங்கள் ஏதொன்றும் அவர் மனதைத் தொட்டதில்லை. ஆத்மா பேதமற்றது. அவர் யாண்டும் ஆத்மபோதத்தில் திளைத்திருந்தார். ஆகையால் அவர் உள்ளம் பேதங்களை யெல் லாம் கடந்து அபேதத்தில் நிலைத்து நின்றது.

நான் பிராம்மணன் என்பது போன்ற பற்று தல்கள், அபிமானங்கள் எதனால்தான் ஏற்படு கின்றன? உற்சவம், கல்யாணம், சபை, சேனை என்று அனேக வஸ்துக்களின் கூட்டத்துக்கு இப்படிஒவ்வொரு பெயர் கொடுத்து அந்தந்தப் பெயரைக்கொண்டு வியவகாரம் செய்கிறோம். அதேபோல மாயா மயமானதும் வாக்கினால் விளக்க முடியாததுமான தேகம், இந்திரியங் கள் ஆகியவைகளின் கூட்டத்தையே உலகில், பிராம்மணன், ஸ்திரீ, தமிழன், பண்டிதன், பாலன், கங்கையில் குளிப்பவன், சைவன், சேவகன், குரு, சிஷ்யன் என்கிற பதங்களால் பலவகைப்பட்டனவாகப் பேசுகிறோம். முக் காலத்திலும் ஆத்மாவுக்குப் பெயரும் உருவமும் கிடையாது, ஜாதி கிடையாது, இடம் கிடையாது, வயது கிடையாது, நோய் கிடை யாது, அது மரணமில்லாத பொருள், தோன்றா தது, அழியாதது, அதற்குத் துக்கமில்லை, அதுவே அனைத்தும் ஆகியிருக்கிறது, அது அமிர்த சொரூபம், ஆனந்த சொரூபம். இந்த உண்மைகள் பலருக்குத் தெரியாது; சிந்தித்துப் பார்ப்பதில்லை. இதுவே அவிவேகம் எனப்படு கிறது. இந்த விதமாகச் சிந்தித்துப் பார்த்தால் நாளடைவில் உண்மை தெளிவாகிக்கொண்டு வரும். பிறகு அந்த உண்மை மயமாகிவிடு கிற நிலைமை சித்திக்கும். எந்தப்பேதமும், துவந் துவமும் அற்ற ஆத்மாவின் பேரில் வர்ணம் ஆச்ரமம் ஆகிய பேதங்களை, பற்றுக்களை, அபி மானங்களைத் தோற்றுவிப்பது அவிவேகமே ஆகும்.

இந்த அவிவேகம் உண்டாவதற்கு அனாதி காலமாகத் தன்னுடைய வாஸ்தவமான ஞான சொரூபமான ஆத்ம வஸ்துவை மறைத் துக் கொண்டிருப்பதும், ஆத்ம ஞானத்தினால் மட்டும் போகக்கூடியதும் ஆன அக்ஞானம் தான் காரணம். இங்கு ஒரு ஐயம் எழுகிறது. ஞானம், விவேகம், அக்ஞானம், அவிவேகம் இவைகளுக்கிடையிலுள்ள வேற்றுமை என்ன? இவைகள் வேறு வேறானவையா? புத்தி, அறிவு, ஞானம், விக்ஞானம், விவேகம் எல் லாம் கிட்டத்தட்ட ஒரு பொருட் சொற்கள். குக்கிராமம், கிராமம், பட்டணம், நகரம், மாநக ரம் ஆகிய சொற்கள் மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வாழும் இடங்களைக் குறிப்பிட்டாலும் அவற்றின் அளவையில் உள்ளவித்தியாசத்தை அப்பதங்கள் விளக்கி விடுகின்றன. குடிசை, வீடு, மாளிகை, அரண்மனை, கோவில் எல்லாம் கிட்டத்தட்ட ஒரு பொருள் சொற்கள்தாம். ஆயினும் ஏழை குடியிருப்பது குடிசை, நடுத்தர மனிதன் வசிப்பது வீடு, பணக்காரன் வாழ்வது மாளிகை, அரசன் வாழுமிடம் அரண்மனை, இறைவன் எழுந்தருளியுள்ள இடம் கோவில். விளக்கத்திற்குத் தேவை இல்லாமல் இப்பதங் கள் தாமேஇக்கருத்துக்களைத்தொனிக்கின்றன. இங்ஙனம் ஒரு பொருளைத் தரும் சொற்களில் லேசான பாகுபாடு இருப்பது போல புத்தி வகை சொற்களிலும் உள்ளது. லௌகிகமான உலகப் பொருள்கள் சம்பந்தமானவைகள் அறிவு, புத்தி எனப்படுகின்றன. இறைவன் சம்பந்தமானவைகள் ஞானம், விக்ஞானம் எனப்படுகின்றன. Science புத்தகத்தை விக் ஞான புத்தகம் என்கிறோம். ஸ்தூலமாக, வெளிப்படையாக, எளிதாகத்தெரியாது, துருவி ஆராய்ந்தால் விளங்கும் என்கிற பொருளில் விக்ஞான பாடம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நமது சாஸ்திரங்களில் கடவுளைப்பற்றிய அறிவே விக்ஞானம் எனப்படுகிறது. இது நல்லது, இது கெட்டது, ஆத்மா, அனாத்மா என்று விஷயங்களைப் பாகுபடுத்தி அறிதல் விவேகம், விசாரம் எனப்படுகிறது. பச்சைக் குழந்தைக்கு முதலில் தன் தாயைக்கூடத் தெரி

யாது. பிறகு முதலில் தன் தாயை அறிகிறது. பிறகு மற்றவர்களை அறிகிறது. அதன் பிறகு படிப்படியாகத் தானே விஷயங்களை அறிந்து கொள்கிற சக்தி பெறுகிறது. பகல், இரவு, உற்றார், வேற்றார், ஆபத்து, பயமற்றது, நல்லது கெட்டது என அறிந்துகொள்கிறது. பெரியவர்களும் முதலில் ஞானமில்லாது இருந்துவிட்டாலும் அனுபவத்தால் படிப்படியாக ஞானமடைந்து பிறகு விசாரம் செய்து உலக விஷயங்களில் தெளிவு பெறுகிறார்கள். அது மேலும் தெளிவடைந்து ஆத்ம விஷயமாகப் பரிணமிக்கிறது. ஞானம் இருந்தால்தான் விவேகம், பகுத்தறிதல் சாத்தியம். முதிர்ந்த விவேகம் பூரண ஞானம், அனுபவ ஞானம் ஆகிறது. கடவுள் ஒருவரே மெய்ப்பொருள் என்று அறிவது ஞானம். இந்த முடிவுக்குவர உதவியது விவேகம், விசாரம். இந்த விசாரத்தைத் தூண்டியது ஆரம்ப ஞானம். ஆகையால் அவிவேகத்திற்குக் காரணம் அக்ஞானம் எனப்படுகிறது.

'என்னை நான் அறிந்து கொள்ளவில்லை' என்று சொல்வதில் அக்ஞானமே குறிப்பிடப்படுகிறது. உலகில் பயித்தியம் ஒருவனைத் தவிர தன்னை அறியாதவர்கள் யார் இருக்கிறார்கள் என்று கேட்கலாம். உலகில் உள்ளவர்கள் எல்லாரும் ஒருவிதத்தில் பயித்தியக்காரர்கள்தான். ஏனெனில் நான் பிராம்மணன், ஆண், தமிழன், பிரம்மச்சாரி என்று சொல்லிக்கொள்பவர்கள் பொய்யான இந்த உடலைத்தான் குறிப்பிடுகிறார்கள்; அறிகிறார்கள். சரீரத்துக்கு அன்னியமாக உள்ள ஆத்மாவிற்கு இந்தப் பேதங்கள் ஏதும் இல்லை என்பதை யார் உணர்கிறார்கள், அறிகிறார்கள் ? ஆகையால் இந்த ஞானம் இல்லாத எல்லாரையும், தேகாபிமானிகளை, விசாரம் இல்லாதவர்களை வேதாந்தம் பயித்தியக்காரர்கள் என்கிறது. ரமண மகரிஷியின் முன்பு ஒருவன் வீழ்ந்து வணங்கி எழுந்து அழுதான். தேம்பித் தேம்பி அழுதான். அவன் அழுது அமைதியுறச் சிறிதுநேரம் பிடித்தது. அதுவரை ரமணமகரிஷி அமைதியாக, சாந்தமாக அவனைப்பார்த்துக்கொண்டிருந்தார். அவன் அழுது ஓய்ந்ததும் மிகவும் சாந்தமாக 'பயித்தியக்காரன், அழுகிறான். அழுவதற்கு என்னகிடக்கிறது? சொரூபத்தில் இருப்பதை விட்டுஅழுகிறான்' என்று சொன்னார். உலக, சரீரலௌகிக சம்பந்தமானவற்றிற்காக அழுதல்பயித்தியக்காரத்தனம்தானே. 'நீங்கள் சதா சர்வகாலமும் கடவுளையே நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே! இது ஒருவிதப் பயித்தியம் அல்லவா?' என்று ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்டார். ஆம் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒத்துக்கொண்டார். பிறகு 'உலகில்உள்ள எல்லாரும் பயித்தியக்காரர்களே. ஒருவனுக்குப் பொருள்வேண்டும் என்று பயித்தியம். ஒருவனுக்குப் போகத்தில் பயித்தியம். இன்னொருவனுக்குப் பதவியில்பயித்தியம். இப்படி எல்லாரும் உலக விஷயங்களில் பயித்தியம் பிடித்துத் தான் உலகில் அலைந்து திரிகிறார்கள். இந்தப் பயித்தியங்கள் எல்லாவற்றிலும் கடவுள் பயித்தியம் நல்லது. அது ஜீவனைப் பந்தத்திலிருந்து விடுவிக்கிறது, கடவுளிடம் சேர்க்கிறது என்று சொன்னார். இவ்வுலகம் கனவு போன்றது. இந்தச் சரீரம் ஒருநாளைக்கு வீழ்ந்துவிடும். சரீர சம்பந்தமான இன்பங்கள் யாவும் நிலையற்றவை, பொருளற்றவை. இதை அறியாதவரை அக்ஞானத்தில் இருக்கிறோம். கடவுள் ஒருவரே மெய்ப்பொருள். அவரே இவ்வுலகாக, ஜீவர்களாக வடிவெடுத்திருக்கிறார் என்று அறிகிற போது இவ்வுலகமும் மானுட வாழ்வும் பொருளுடையவை, பெருமை மிக்கவை ஆகி விடுகின்றன. இறைவன் இறைவனோடு விளையாடிக்கொண்டிருக்கிறான். இவ்வுலகமே இறைவன் வாழும் வைகுண்டம், கைலாசம். இதுவே ஞானியின் காட்சியாகும். ஞானமடைதலே இம்மானுட ஜன்மத்தின் லக்ஷியமாகும்.

சூரியனை அடிப்படையாகக்கொண்டு தோன்றிய மேகம் சூரியனையே சிறிது நேரத்திற்கு மறைத்து வைக்கிறது. அதுபோன்று பேரறிவு அல்லது வாலறிவு மயமாக இருக்கின்ற ஆத்மாவை அடிப்படையாகக்கொண்டு தோன்றிய அக்ஞானம் என்னும் மயக்கம் கொஞ்ச காலத்திற்கு ஆத்மாவையே மறைத்து வைக்கிறது. மனம் உலக சுகபோகத்துக்கும் உடல் சுக போகத்துக்கும் வசப்பட்டுக் கிடக்கும்பொழுது அக்ஞானம் அதன்மீது ஆதிக்கம் செலுத்துகிறது. மனதை அம்மோகத்தினின்றும், சுகத்தினின்றும் விடுவித்துக் கொள்வதற்குத் தியாகம் அல்லது சந்நியாசம் என்று பெயர்.

சுவாமி துரியானந்தர் ஜீவிதம்

(181ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் வாழ்க்கை

சுவாமி துரியானந்தர் கங்கலில் தங்கியிருந்த பொழுது அன்பர் ஒருவர் சுவாமி துரியானந்தருடைய மேல்நாட்டு வாழ்க்கை அனுபவத்தைப் பற்றிக் கேட்டார். சுவாமிகள் பகர்ந்ததாவது: "மேனாட்டவர்கள் லௌகீக மனப்பான்மை படைத்தவர்கள். உலக சுகபோகத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்திலும் சில நன்மைகள் இருப்பதைக் கண்டேன். புஷ்டியான உணவு உட்கொள்கிறார்கள், ஒவ்வொரு செயலையும் விஞ்ஞான ரீதியில் செய்து வருகிறார்கள். உணவு சமைப்பதையும்கூட விஞ்ஞானரீதியில் செய்கிறார்கள். எல்லா இடங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்கிறார்கள். திடகாத்திரமான உடல் படைத்திருக்கிறார்கள். பெண்கள் சுதந்திரமுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நன்கு கல்வி கற்றிருக்கிறார்கள். செயலுக்கேற்ற விதம் உடை அணிந்து கொள்கிறார்கள். சில காரியங்களை மறைமுகமாகத்தான் செய்வார்கள். பேசும்பொழுது அடங்கிய குரலில் பேசுவார்கள். வேலைக்காரர்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்கள். எல்லாப் பணிகளையும் உயர்வான பணிகளாகக் கருதுகிறார்கள். எப்பணியையும் தாழ்வாகக் கருதுவதில்லை. எந்தப் பணியைச் செய்கின்ற மனிதனாக இருந்தாலும் அவன் மனிதனாகவே நடத்தப்படுகின்றான். யாவரும் சமுதாய சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடக்கிறார்கள். கீழ்ஜாதிகள் என்றோ தீண்டக் கூடாதவர்கள் என்றோ சொல்லப்படுபவர்கள் அங்கு யாரும் இல்லை."

ஒருமுறை கங்கலில் இருந்தபொழுது அவருடைய உடல் நோய்வாய்ப்பட்டது. காய்ச்சலும் பல் வலியும் ஏற்பட்டன. அப்பொழுது சுவாமி துரியானந்தர் பகர்ந்ததாவது: "அன்னை பராசக்தி பல் வலியைத் தந்திருக்கின்றாள். அதுவும் நன்மைக்கே ஆகும். அம்பிகையை முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும். அவளைத் தவிர வேறு ஒன்றையும் சார்ந்திருக்கக் கூடாது. உடல், பொருள், ஆவி அனைத்தையும் அம்பிகைக்கே தந்துவிட வேண்டும். அம்பிகையைத் தவிர வேறு யாரைத்தான் நாம் சார்ந்திருப்பது! அம்பிகையின் விருப்பப்படி எதைவேண்டுமானாலும் கொடுக்கட்டும் அல்லது எடுத்துக் கொள்ளட்டும். நம்மை அம்பிகையினிடம் ஒப்படைத்தான பிறகு, அம்பிகையினிடம் இருந்து நாம் ஒன்றையும் கேட்கக் கூடாது." இம் மனநிலை படைத்தவர்கள் பாக்கியவான்கள்.

சுவாமி துரியானந்தர் சில மாதங்கள் கங்கலில் தங்கியிருந்தார். 1910ஆம் ஆண்டு பிற்பகுதியில் பேலூர் மடம் சென்றார். அப்பொழுது பிரம்மச்சாரியாக இருந்த யதீஸ்வரானந்த சுவாமிகளுக்குச் சுரேஷ் என்று பெயர். அவர் சுவாமி துரியானந்தரை முதன் முதல் சந்தித்தபொழுது அவருடைய பொலிவில் மிகவும் கவரப்பட்டார். சுவாமி துரியானந்தர் தன்னம்பிக்கை உடையவராகவும் சுதந்திர இயல்பு படைத்தவராகவும் விளங்கினார். அவ்வியல்புகள் சுரேஷரை மிகவும் கவர்ந்தன. சுவாமி துரியானந்தருடன் இணக்கம்கொண்டு அவருக்குப் பணிவிடை செய்யவேண்டும் என்று விரும்பினார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது அவருக்குப் பணிவிடைசெய்ய யாருக்கும் அனுமதி தரமறுத்துவிட்டார். இளைஞர்கள் அவரிடம் வந்துவிட்டால் சுவாமி விவேகானந்தருடைய கருத்துக்களை அவர்களுக்கு எடுத்து விளக்குவார். "இளைஞர்களாகிய உங்களை விவேகானந்தர் மிகவும் நம்பியிருந்தார். அவருடைய லட்சியத்தைக் கொண்டு செலுத்துவதற்கு இளைஞர்கள் வேண்டும் என்று கூறினார். நீங்கள் துறவிகளாகி சுவாமி விவேகானந்தருடைய திட்டங்களைச் செயல்படுத்தும் வீரர்கள் ஆவீர்களாக" என்று கூறி அவர்களை ஆசீர்வதிப்பார்.

அல்மோரா இமயமலையில்உள்ள ஓர்அழகான இடமாகும். இயற்கை அழகு ஆங்கு நிறைந்துள்ளது. அது நல்ல ஆரோக்கிய ஸ்தலமுமாகும். சுவாமி துரியானந்தருக்கு நீரிழிவு நோய் இருந்தமையால் அவருடைய உடலுக்கு அல்மோரா வாசம் உகந்தது என்று தீர்மானம் செய்யப்பட்டது. எனவே சுவாமி துரியானந்தர் அல்மோராவுக்குச் சென்றார். அல்மோரா

கைலாசம் செல்லும் யாத்ரீகர்களுக்கு முக்கிய மான யாத்திரை ஸ்தலமாக இருந்தது. சுவாமி விவேகானந்தரும் ஆங்கு ஓர் ஆச்ரமம் அமைக்க வேண்டுமென்ற தம்கருத்தைச் சுவாமி துரியானந்தரிடம் தெரிவித்திருந்தார். எனவே ஆங்கு ஓர் ஆச்ரமம் துரியானந்த சுவாமிகள் 1915ஆம் ஆண்டு போயிருந்தபொழுது கட்ட ஆரம்பித்தார். 1916ஆம் ஆண்டு கட்டடவேலை பூர்த்தியாகி ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வழிபாட்டுடன் கட்டடத் திறப்பு விழா நடந்தேறியது. அதன் பிறகு அங்கிருந்து சுவாமி துரியானந்தர் காசிக்குச் சென்றார். காசியில் சுவாமி பிரேமானந்தரைச் சந்தித்தார். சுவாமி பிரேமானந்தரும், சுவாமி துரியானந்தரும் சகோதரர்கள் போன்று பழகுவார்கள். ஒருவருக்கு ஒருவர் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். சுவாமி துரியானந்தர் காசிக்கு வந்தபொழுது அவருடைய உடல் பல வியாதிகளுக்கு உட்பட்டு இருந்தது. அவருடைய உடல் நிலை அவ்வளவு நோய்க்கு உட்பட்டு இருந்தும் அவர் காலில் பாதரக்ஷை அணியாது இருந்தார். சுவாமி பிரேமானந்தர் தம்முடைய காலணிகளைச் சுவாமி துரியானந்தருக்கு அணிந்துகொள்ளும்படி தந்தார். பரதன் ராமருடைய பாதுகைகளைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டது போன்று, சுவாமி துரியானந்தர் அக்காலணிகளைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டார். ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் என்று பிரேமானந்த சுவாமிகள் கேட்டபொழுது உங்களுடைய காலணிகளுக்கு உரிய இடம் தலைதான் என்று பதிலளித்தார். இங்ஙனம் அவர்களுடைய உள்ளங்களில் பேரன்பும், பெருமதிப்பும் நிறைந்திருந்தன. சுவாமி துரியானந்தர் சுவாமி பிரேமானந்தரைச் சந்தித்ததும் அவருடைய பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தார். உடனே சுவாமி பிரேமானந்தர் சுவாமி துரியானந்தர் முன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தார். யாரும் பணிவில் உங்களை வெல்ல முடியாதுபோல் இருக்கிறது என்று சிரித்துக்கொண்டே சுவாமி துரியானந்தர் கூறினார்.

சுவாமி பூரியில் தங்கியிருந்தபொழுது தம்முடைய பக்தர்களுக்கு அனேக கடிதங்கள் எழுதியிருக்கிறார். அக்கடிதங்களில் கடவுள் விசுவாசமும், தியாகமும் வலியுறுத்தப்பட்டு இருக்கின்றன. அவர் எழுதிய கடிதங்களுள் மாதிரிக்கு ஈண்டு ஒரு கடிதத்தின் கருத்துக்கள் தரப்பட்டிருக்கின்றன. "ஆசையை ஒழிப்பது மிகவும் கஷ்டமானது. ஆனால் மனம் நன்கு விசாரம் பண்ணுமானால் ஆசையின் வேகம் தணிந்துபோகும். உறுதியான மனம் படைத்திருந்து விவேகத்தையும் நன்கு கையாண்டால் மனிதன் மயக்கத்துக்கு உள்ளாக வேண்டியது இல்லை. குற்றமற்ற சிறு ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். கடவுளை மறக்கடிக்கும் எந்த ஆசைக்கும் இடம்தரலாகாது. மனதைத் தெய்வச் சிந்தனையிலேயே ஈடுபடுத்த முயன்றால் ஆசை நம்மை அழிவுநிலைக்கு இழுத்துச் செல்லாது. கடவுளிடம் அடிக்கடி பிரார்த்தனை செய்துகொள். இறைவா! என்னுள்ளத்தைத் தூயதாக்கி பக்தியையும், ஞானத்தையும் கொடு என்று பிரார்த்தனை செய்துகொள்.

"யோகவாசிஷ்டத்தில் ஒரு கதையுண்டு. அக்கதை வருமாறு : 'ஒரு பிரம்மச்சாரி இருந்தார். அவர் துறவியாக இருந்தார். உடலை மறைப்பதற்கு ஆடையும், தியானத்துக்குரிய ஆசனமும், நீர்ப்பாத்திரம் ஒன்றும் உடைமைகளாக வைத்திருந்தார். அவர் தாம் எல்லாவற்றையும் துறந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தார். அவருடைய குரு நீ எதைத் துறந்துவிட்டாய்; நீ ஒன்றையும் துறக்கவில்லை என்றார். தாம் வைத்திருந்த உடைகளையும், ஆசனத்துக்குரிய விரிப்பையும், நீர்ப்பாத்திரத்தையும் துறந்துவிட வேண்டுமென்று குரு விரும்புகின்றார் என்று நினைத்தார். எனவே நெருப்பு மூட்டி, நெருப்பில் அவற்றைப் போட்டுப் பொசுக்கி விட்டார். அவற்றைப் பொசுக்கிய பின் இப்பொழுது நான் அனைத்தையும் துறந்து விட்டேன் என்றார். அதற்கு அவருடைய குரு பகர்ந்ததாவது : நீ அனைத்தையும் துறந்துவிட்டதாக நினைக்கின்றாய். ஆடை என்பது பருத்தியால் ஆனது. அதேபோல் மற்றபொருள்களும் ஜடப்பொருள்களால் ஆனவை. அவைகளைத் துறந்துவிட்டதால் நீ துறந்தவனாகி விடுவாயா? என்றார் குரு. சிஷ்யன் மீண்டும் சிந்தித்துப் பார்த்தார். சரீரம் தான் இப்பொழுது எனக்குரியதாக இருக்கிறது. இதைத்தான் குரு குறிப்பிடுகிறார் போலும். இதையும் நெருப்புக்கு இரையாக்கிவிடுகிறேன் என்று தீர்மானம் செய்தார்.

நெருப்பை மூட்டி. சரீரத்தை நெருப்புக்குள் போட முயன்றபொழுது குரு தடுத்து உம் செயலை நிறுத்தும். சிறிது சிந்தித்துப்பார். இந்த உடல் உனக்குரியதாகுமா? தாயும் தந்தையும் இந்த உடலுக்கு வடிவம் கொடுத்தார்கள். உணவு அதை வளரச் செய்தது. உனக்கு இந்த உடலில் என்ன உரிமை இருக்கிறது? என்ருர். இப்பொழுதுதான் சிஷ்யருடைய அகக் கண் திறந்தது. குருவினுடைய திருவருளால் துறக்க வேண்டியது அகங்காரம் என்பதைச் சிஷ்யர் அறிந்தார். அக்கதையில் கூறியது போன்று அந்தக் கரணத்தில் உள்ள வாசனைகளையெல்லாம் துறப்பதுதான் உண்மையான துறவு ஆகும். உலகப் பொருள்களைத் துறப்பதும், சரிரத்தை துறப்பதும் மெய்த்துறவாகா. மனதால் யாவற்றையும் துறந்துவிட்டுத் தெய்வத்திடம் மனதைக் கொடுப்பதுதான் உண்மையான துறவாகும். தைலதாரை போன்று இறைவனிடம் பக்தியும், இறைவனுடைய நாமத்தைச் சொல்வதில் சுவையும் உண்டாகும்படி பிரார்த்தனை செய்து கொள்ளவேண்டும்."

இத்தகைய அறிவுரைகள் சுவாமி துரியானந்தரின் உள்ளத்தில் இருந்துவரும். அவருக்கு ஏற்பட்ட ஆத்மீக அனுபவத்திலிருந்து அவர் எழுதவும் பேசவும் செய்வார். ஒரு தடவை பூரியில் இருந்தபொழுது அவருக்குக் கண்நோய் ஏற்பட்டிருந்தது. டாக்டர் கண்மருந்து எழுதிக் கொடுத்திருந்தார். ஒவ்வொரு நாளும் காலையிலும்மாலையிலும்அக்கண் மருந்தில் சிலதுளிகளை அவர் கண்ணில் ஊற்றவேண்டும். அப்பணியை ஒரு பிரம்மச்சாரி செய்து வந்தார். ஒரு நாள் காலை அவர் கண்ணில் மருந்து இட்டவுடன் சுவாமிகள் 'நீ ஏதோ தவருன திரவத்தைக் கண்ணில் ஊற்றிவிட்டாய்; நீ ஊற்றிய திரவம் என்ன என்று பார்' என்று கூறினர். திகில் அடைந்தவராகப் பிரம்மச்சாரிஅத்திரவம் யாது என்பதை கவனித்த பொழுது அது நீர் கலந்த நைட்ரிக் அமிலமாக இருந்தது. பயமும், வருத்தமும் மேலிட்டவராகப் பிரம்மச்சாரி நடுநடுக்கத்துடன் நின்ருர். உடனே மற்றவர் தலையிட்டுச் சுவாமியினுடைய கண்களைச் சுத்தமாகக் கழுவி விட்டார். சுவாமி துரியானந்தர் சற்றும் கோபம் அடையாதவராக இருந்தார். அப்பிரம்மச்சாரியின் அஜாக்கிரதைக்காக அவரைத் திரஸ்கரிக்கிற ஒரு வார்த்தை கூடப் பகரவில்லை. சிறிது நேரம் பொறுத்துச் சாது ஒருவர் தம்மை முற்றிலும் இறைவனிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்று கூறிப் பிரம்மச்சாரியிடம் அன்பான வார்த்தைகள் பேசினர். நீ திரவத்தை என் கண்ணில் ஊற்றியதும் என் உடல் முழுதும் எரிச்சலான உணர்ச்சி ஏற்பட்டது. 'தாயே, கண்ணைப் பிடுங்கி விடுவது உன்விருப்பமானல் நான் என்ன செய்ய முடியும்? உன் இச்சைப் படி நிகழட்டும்' என்று எண்ணினேன். கண்கள் எவ்வித ஆபத்துமின்றி காப்பாற்றப் பட்டன. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தன்னைக் கடவுளிடம் ஒப்படைத்துவிடுபவன் தான் சரீரப் பற்று நீங்கியவன் ஆகின்ருன். சுவாமி துரியானந்தரின் தேகநிலை அடிக்கடி மோசமான நிலையை அடைந்துவிடும். அவர் உயிர், உடலை விட்டுப் பிரிந்துவிடும் என்று முடிவு கட்டி விடுவார்கள். ஆனல் சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் கண் விழித்து இப்பொழுது என் உயிர் போகாது என்று சொல்லுவார்.

சுவாமி துரியானந்தர் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுதும் சாதனைகளை நிறுத்தாது செய்து வந்தார். அவர் பூரியில் இருந்தபொழுது ஜகந்நாதர் ஆலயத்திற்குத் தினசரி சென்று வருவார். சில சமயம் அதிகாலை இரண்டு மணிக்கு எழுந்து ஆலயத்திற்குப் போவார். ஆலயம் சென்று வழிபாடு செய்யும் சாதனையில் இருந்து ஒருநாளும் அவர் தவறமாட்டார். சுவாமி துரியானந்தர் ஆத்மீகத்துறையில் நல்ல முன்னேற்றம் அடைந்திருந்தார். அவர் ஆலயம் செல்ல வேண்டியது அவசியமில்லை. இருந்த பொழுதிலும் ஆலயம் செல்வதை முறையாகச் செய்து வந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த பொழுதும் நோயைப் பொருட்படுத்தாது ஆலயம் சென்று வழிபாடு செய்து வந்தார். தம்மை முற்றும் தெய்வத்திடம் ஒப்படைத்திருந்தமையால் தம் சரீரத்தில் எவ்விதப் பற்றும் இல்லாதிருந்தார். சரீரப்பற்றைக் கடந்து போவதற்கே சாதனை செய்கின்ருேம். சரீரப்பற்றைக் கடந்து போன பிறகும் சுவாமி துரியானந்தர் சாதனையை நிறுத்தாது செய்து வந்தார். உடல் உள்ளளவும் அதற்கு உணவு கொடுப்பது அவசியமானது போன்று மனம் உள்ளளவும் சாதனை செய்தாக வேண்டும். (தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-130

747. भक्तचित्तकेकिघनाघना பக்தசித்தகேகி கனுகனு – பக்தர்களுடைய உள்ளங்களாகிய மயில்களுக்கு உவகையைக் கொடுக்கும் கார் மேக வடிவமாய் இருப்பவள் என்பது இந்த நாமத்தினுடைய பொருள்.

கார்மேகத்தைக் கண்டமாத்திரத்தில் மயி லுக்கு மகிழ்வு மிக உண்டாகிறது. தோகையை விரித்துக்கொண்டு அது ஆனந்தத் தாண்டவ மாடுகிறது. அத்தகைய மயிலுக்கு நிகர் பக்தர் களுடைய மனம். அம்பிகையின் அருள்நிறைந்த மேலான செயல்கள் கார்மேகத்துக்கு நிகரான வைகள். கார்மேகத்தைப் பார்த்து மயில் மகிழ் வுறுவது போன்று அம்பிகையின் அதிசயச் செயல்களைக் கண்டு பக்தர்களின் உள்ளம் பர மானந்தத்தில் மூழ்கியிருக்கிறது. மயிலுக்கு ஆனந்த மூட்டுவது புறத்திலுள்ள காட்சி. பக்தனுக்கு ஆனந்தப் பரவசத்தை ஊட்டுவது அகத்திலுள்ள அம்பிகையின் மகிமைகளைப் பற்றிய எண்ணங்களாம்.

அம்பிகையின் விபூதிகளையும் அதிசயச் செயல்களையும் ஆராய்வதற்கேற்ப பக்தர்கள் ஆனந்தப்பரவசமடைகின்றனர். காலமெல்லாம் மனம் தெய்வத்தின் மகிமையில் மூழ்கிப் பரவச மடைந்திருப்பது தலைசிறந்த ஆத்மசாதன மாகிறது.

748. रोगपर्वतदम्भोलिः ரோகபர்வததம் போலி:— நோய் என்னும் மலைக்கு வஜ்ரா யுதமாய் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அசைக்க முடியாத வடிவு வாய்க்கப்பெற்றது மலை. அத்தகைய மலையை வஜ்ராயுதத்தைக் கொண்டு எளிதில் தகர்த்துவிடலாம். ஜீவாத் மனைப் பிடித்துள்ள பிறவிப்பிணி பர்வதத்துக்கு ஒப்பானது. அப்பிணி இருக்கும் பரியந்தம் அவன் ஜனன மரணமாகிய நோய்வாய்ப்பட்ட வன் ஆகிறான்.

கிருஷ்ணபரமாத்மா தம்முடைய மகிமைகளை எடுத்து மொழியும்பொழுது ஆயுதங்களுள் தாம் வஜ்ராயுதமாயிருப்பதாக இயம்புகிறார். அவ ருடைய சொரூபமயமாயிருக்கிற கதாயுதத் தையோ, சக்கராயுதத்தையோ அவர் எடுத்து இயம்பவில்லை. ஏனென்றால் அவைகள் நிர் மாணிக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் அல்ல. அவருடைய சொரூபத்துக்கு விளக்கமாக அமைந்துள்ள ஆயுதங்களாம். நிர்மாணிக் கப்பட்ட ஆயுதங்களுள் தலை சிறந்ததாயி ருப்பது வஜ்ராயுதம். பிறந்தது முதற் கொண்டு நைஷ்டிக பிரம்மச்சரியத்திலும், தவத் திலும் ஈடுபட்டிருந்த ததீசி மகரிஷியின் அஸ்தி களைக்கொண்டு தேவேந்திரன் வஜ்ராயுதத்தை அமைத்தான். வலிவு வாய்ந்த அந்த ஆயுதத் தைக் கொண்டு அவன் அசுரர்களை முறியடித் தான் என்பது ஐதிகம். வாழ்க்கையின் மேலாம் தத்துவம் ஈண்டு வஜ்ராயுதம் என உருவகப் படுத்தப்பட்டிருக்கிறது. பிறவிப்பிணி என் னும் மலையைச் சாதாரண மக்கள் அசைக்க முடி யாது. அத்தகைய மலையை வஜ்ராயுதம் துகள் துகளாக உடைத்துத் தள்ளுகிறது. மக்களுள் யார் ஒருவன் நைஷ்டிக பிரம்மச்சரியத்திலும் ஆழ்ந்த தவத்திலும் தன்னை ஈடுபடுத்துகிறானோ அத்தகையவனுக்குத் தெய்விக ஆற்றல் தானாக வடிவெடுக்கிறது. ஆகவே மரணம் என்னும் பெருநோயை அகற்றுதற்கு உற்ற உபாயமாய் அமைந்திருப்பது வஜ்ராயுதம். நைஷ்டிக பிரம் மச்சரியமும் தபசும் சேர்ந்து ஆத்ம சாதகனுக்கு உண்டுபண்ணுகிற தெய்விகப் பேராற்றல் ஆனது வஜ்ராயுதம் என உருவகப்படுத்தி ஈண்டு இயம்பப்பட்டுள்ளது. அத்தகைய பேராற்றல் வாய்க்கப் பெற்றவன் மலைக்கு நிக ரான பிறவிப்பிணியை அகற்ற வல்லவனாகிறான் என்பது இந்த நாமத்தின் உட்பொருள்.

749. मृत्युदारुकुठारिका ம்ருத்யு தாருகுடாரி கா — மரணம் என்னும் மரத்தை வெட்டுகிற கோடாலி போன்றவள் என்பது இந்த நாமத் தின் பொருள்.

ஓங்கி வளர்ந்திருக்கும் மரத்தை வெட்டிச் சாய்ப்பதற்குக் கோடாரி ஒன்றே உற்ற கருவி யாகிறது. மரணம் பலதரப்பட்ட துக்கங்க ளோடு கூடியிருக்கிறது. மரணம் அக்ஞானத் தின் விளைவு. ஆத்மாவை மரணம் அணுகாது. மரணத்தின் சகாக்களாகிய துக்கங்களும் ஆத்மாவை அணுகா. ஆனந்த சொரூபமாயும் அமிர்த சொரூபமாயும் உள்ள ஆத்மாவானது தன்னைத் தேகமாகக் கருதிக்கொள்வது

அஞ்ஞானம். இத்தகைய அஞ்ஞானமே துயரங்களனைத்துக்கும் மூல காரணமாகிறது. ஞானம் கோடாரிக்கு நிகரானது. கோடாரியைக் கொண்டு மரத்தை வெட்டுவது போன்று ஞானவாள்கொண்டு அஞ்ஞானப் புதரைக் களைதல் வேண்டும். அம்பிகையின் சொரூபத்தை உள்ளபடி அறிதல் ஞானமாகும். அம்பிகையை உள்ளபடி அறிந்துகொள்ளுகிற ஞானிக்கு மரணமும் இல்லை; அதைச் சார்ந்துள்ள துயரங்களுமில்லை. எந்தவிதமான பயமும் இல்லை. ஆதலால் முற்றிலும் அம்பிகையைச் சார்ந்திருந்து பரஞானம் அடையப்பெற்று மரணம் என்னும் மரத்தை அகற்றுதல் வேண்டும் என்பது இந்த நாமத்தின் பொருள்.

750. महेश्वरी மகேச்வரீ—பேர் இறைவி என்பது இந்த நாமத்தின் பொருள்.

குடும்பக் காரியங்களைச் சரியாகக் கவனித்து வருகின்ற பெண்பால் ஒருத்தி இல்லாள் என இயம்பப்பெறுகிறாள். இல்லத்தை உடையவள் என்றும், அதன் நடைமுறையைச் சரியாகக் கவனித்துக்கொள்ளுகிறவள் என்றும் பொருள் படுகிறது. அத்தகைய மாது ஒருத்தி அமையப்பெறாத குடும்பம் நல்ல குடும்பம் ஆகாது. அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாகிய அம்பிகையின் திட்டம் ஒரேபாங்குடையதாம். அண்டத்தின் அமைப்பையும் நடைமுறையையும் பிண்டமாகிய மானுட சரீரத்திலும் காண்கிறோம். பிறகு நுண்ணியதிலும் நுண்ணியதாகிய பரமாணுவிலும் அதே திட்டம் அமைந்திருக்கிறது. மக்களுடைய கண்ணுக்குப் பிரம்மாண்டம் முழுதும் தென்படாது. அது எங்கும் வியாபகமாயிருப்பதே காரணமாகும். பெரியதிலும் பெரியதாயிருப்பதைக் காண்பதற்கு மனிதன் படைத்துள்ள கண் உதவாது. அதே பாங்கில் அணுவைக் காண்பதற்கும் அது உதவாது. இடை நிலையில் உள்ள பிண்டம் அல்லது மானுட அமைப்பைக் காண அது நன்கு உதவுகிறது. ஒரு குடும்பத்தின் நிர்வாகத்தைச் சரியாக அறிந்துகொள்ளுகிறவன் பிரம்மாண்ட நிர்வாகத்தையும் யூகத்தால் அறியலாம், பிறகு ஞானக்கண்கொண்டு அறியலாம். அம்பிகையின் அகிலாண்ட ஆட்சிமுறை ஞானிகளுக்குத் தெற்றென விளங்குகிறது. பக்தி பூர்வமான யூகத்தைக்கொண்டு ஓரளவு நாம்அதை அறிந்துகொள்ளலாம். இம்மியளவும் நெறிபிறழாத பேரமைப்பாக அண்டங்கள் யாவும் அமைந்திருக்கின்றன. அவைகளின் ஆட்சி முறையை மகேச்வரீ ஆகிய அம்பிகை இனிது நடாத்துகிறாள்.

அம்பிகைக்கு இரண்டுவித இலக்ஷணங்கள் உண்டு. ஒன்று ஸ்வரூப இலக்ஷணம். ஸத் சித் ஆனந்தமாயிருப்பது அம்பிகையின் சொரூப இலக்ஷணம். மற்றது தடஸ்த இலக்ஷணம். எடுத்துக்கொண்ட செயலைத் திறம்படச் செய்வது ஒருவிதச் சிறப்பாகும். அத்தகைய செயலின் வாயிலாகத் தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்துவது தடஸ்த இலக்ஷணம். அண்டகோடிகளை அம்பிகை ஒழுங்காக ஆண்டுவருவது அவளுடைய தடஸ்த இலக்ஷணம் ஆகும். ஆட்சி முறையைப் பாராட்டுவது அவளுடைய வழிபாட்டுக்கு ஒப்பாகிறது. ஆட்சிமுறையின் ஒழுங்குப்பாட்டைச் சதா மனனம் பண்ணுவது நல்ல வழிபாடு ஆகிறது. அம்பிகையின் பக்தர்கள் அவளுடைய ஆட்சியைப் போற்றுவதன் வாயிலாக அவளுக்கு வந்தனை வழிபாடுகள் செலுத்துவார்களாக.

751. महाकाली மஹாகாலீ — அம்பிகை கால சொரூபிணியாயிருப்பதால் அவளுக்குக் காலீ என்னும் பெயர் வந்தது. அது தமிழில் காளீ எனத் திரிவுபட்டிருக்கிறது.

காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் என மூன்று கூறுகள் உடையதாயிருக்கிறது. இறந்தகாலம் அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. எதிர்காலமும் அதே விதத்தில் அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. நிகழ்காலத்துக்கோ முடிவு கிடையாது. இங்ஙனம் காலத்தின் பாங்கை ஆராய்ந்துபார்த்தால் அது கடவுளின் கூறு ஆக அமைகிறது. ஆதலால்தான் சிவனார் மகா காலன் எனவும் அம்பிகை மகா காலீ எனவும் போற்றப்பெறுகிறார்கள்.

காலம் முழுதையும் யாருமே காணமுடியாது. ஆதலால் கால சொரூபிணியாக இருக்கிற அம்பிகை கறுப்புநிறம் படைத்திருக்கிறாள். அத்தகையவள் திகம்பரீயாகவும் திகழ்கிறாள். அதாவது திக்குகளையே அவள் ஆடையாக அணிந்திருக்கிறாள். எங்கும் வியாபித்துள்ள

அவளை ஆடை அணிவித்து மூடமுடியாது. ஆத லால் அவள் திகம்பரியாக அமைந்துள்ளாள். முண்டமாலினி அவளுக்கு அமைந்துள்ள மற்றொருபெயர். மானுடத் தலைகளை மாலையாகக் கோர்த்துக்கழுத்தில்அணிந்திருக்கிருள். பிறந்த குழந்தையில் துவக்கி விருத்தனுடைய தலை ஈருக வயதில் எல்லாப் படித்தரங்களிலுமுள்ள மானுடத் தலைகள் இந்த மாலையில் இடம்பெறுகின்றன. பிறந்தவுடனே ஒரு ஜீவனை எடுத்து விழுங்குகிருள். சில வாரங்கள், மாதங்கள், வருஷங்களுக்குப் பிறகும் விழுங்குகிருள். வயதில் எல்லாப் படித்தரங்களிலுமுள்ள உயிர் வகைகளை அவள்யாண்டும் விழுங்கிக்கொண்டே இருக்கிருள். இதுவே காலத்தின் செயல் ஆத லால் அவள் காலீ என்னும் பெயர் பெற்றுள்ளாள்.

மகா காலியின் முகவிலாசத்தில் பயமுறுத்தும் பாங்கும், அனுக்ரஹம் செய்யும் பாங்கும் ஒன்று கூடுகின்றன. இவை இரண்டுக்குமிடையில் உண்மையில் முரண்பாடு இருக்கிறது. பயமுறுத்துகிறவள் அனுக்ரஹம் பண்ணுவதில்லை. அனுக்ரஹம் பண்ணுகிறவள் பயமுறுத்துவதில்லை. ஆனல் மகா காலியோ முரண்படுகிற இந்த இரண்டு செயல்களையும் தனக்குச் சொந்தமாக வைத்திருக்கிருள். ஒவ்வொரு ஜீவனுக்கும் காலவரையறை வகுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தை நன்கு பயன்படுத்துகிறவன் முறையாக அம்பிகை வழிபாடு செய்கிருன். காலத்தை நன்கு பயன்படுத்துவது கடவுள் வழிபாட்டுக்கு நிகர் என்பதை ஆத்ம சாதகர்கள் அறிந்திருக்கவேண்டும். அப்படிக் காலத்தை நல்வழியில் பயன்படுத்துகிறவர்களுக்கு அன்னை பராசக்தி அனுக்கிரஹமூர்த்தியாக இலங்குகின்ருள். பின்பு வீண்பொழுது போக்குகிறவர்கள் கவலைக்கு ஆளாகிருர்கள். இடையிடையே அச்சம் வந்து அவர்கள் உள்ளத்தைத் தாக்குகிறது. அப்படி வீண்பொழுது போக்குகிறவர்களை அன்னை பராசக்தி பயமுறுத்துகிருள், துன்பத்திற்கு ஆளாக்குகிருள். துன்பத்தின் வாயிலாகவும், பீதியின் வாயிலாகவும் முறைவழுவிப் போகிறவர்களுக்கு அவள் தண்டனை வழங்கி பாடம் புகட்டுகிருள். மகா காளியின் முகவிலாசத்தைப் பக்திபூர்வமாகவும்; நல்வாழ்வு மூலமாகவும் பார்க்கிறவர்களுக்கு அவள் அனுக்கிரஹத்தை வாரிக் கொட்டிக் கொண்டிருக்கிருள். அதே முகவிலாசம் அதே வேளையில் காலத்தை விரயம் பண்ணுகிறவர்களுக்கு அச்சத்தையும், நடுக்கத்தையும், விக்கினத்தையும் வழங்கிக்கொண்டிருக்கிறது. இப்படி முரண்படுகிற இரண்டு கூறுகள் மகா காளியின் முகவிலாசத்தில் மிளிருவது அவளுடைய மகிமையாம்.

திகம்பரியாகிய அம்பிகை இடுப்பில் மானுட கரங்களைக் கோர்த்துக் கட்டியிருக்கின்ருள். அனந்தங்கோடி ஜீவர்கள் மூலம் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள்யாவும் அம்பிகையின்செயல்களாம். நிகழ்ச்சிகளுள் நல்லவைகளும் உள; கெட்டவைகளும் உள. ஆனல் அவை யாவையும்தொகுத்து ஆராயுமிடத்து அண்டத்தின் நடைமுறையில் அவையாவும் பொருத்தமான இடம் பெற்றிருக்கின்றன. அகங்கரித்து வினையாற்றுபவனுக்கு வினையின் கொடுமை அதிகரிக்கிறது. தன் வாயிலாக நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் யாவும் அம்பிகையின் செயல்கள் எனக் கருதுகிறவன் இயல்பாகவே நல்வழிக்கு வருகிருன். அவனுடைய அகங்காரம் தேய்கிறது. அன்னையின் அனுக்கிரஹத்திற்கு அவன் அதிவிரைவில் பக்குவமாய்க்கொண்டு வருகிருன்.

மகா காலியானவள் நான்கு கரங்களை உடையவளாயிருக்கின்ருள். இடப்பக்கம் மேலே உள்ள கரத்தில் அவள் வாளை ஏந்திக்கொண்டிருக்கின்ருள். அந்த வாள் ரத்தம் படிந்திருக்கிறது. கீழே உள்ள கரத்தில் வெட்டிய தலையின் முடியைப் பிடித்துக்கொண்டிருக்கின்ருள். தொங்கிக்கொண்டிருக்கும் தலை ரத்தம் சொட்டிக்கொண்டிருக்கிறது. முறை தவறி நடப்பவர்களுக்கு அவளுடைய தண்டனை அப்போதைக்கப்போதே வந்து அமைகிறது என்னும் கோட்பாட்டை அவளுடைய இடக் கரங்களிரண்டும் விளக்கிக்கொண்டிருக்கின்றன. தவறுதல்கள் பண்ணித் தப்பித்துக்கொண்டிருப்பதாகப் பலர் இறுமாப்புக்கொள்ளுகின்றனர். தப்புச் செய்கின்ற பொழுதே பயம் உள்ளத்தை வந்து தாக்குகிறது. பிறகு உள்ளத்தில் சஞ்சலம் குடிபுகுகிறது. அப்பொழுதே உபத்திரவமும் துவங்கிவிட்டது என்பதை அறிவிலி அறிந்துகொள்வதில்லை. அசாந்தி அன்னவனுக்கு ஓயாத தண்டனையாகிறது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (202) பக்தியை வளர்ப்பதற்கும், நெடுநேரம் தியானத்தில் இருப்பதற்கும் என்ன உபாயம்?

'குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்பது பழமொழி. குழந்தை ஒன்றனோடு நாம் இணக்கம் கொள்ளுதற்கேற்ப அது நமக்குச் சொந்தமாகிறது. தாயன்பே அதற்குச் சான்றாகிறது. தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கம் சிரமப்படாது தானாக வந்து அமைகிறது. தெய்வ பக்தியை வளர்ப்பது அதைவிடச் சுலபமானது. பக்தி வலையில் படுவோன் காண்க என்பது ஆப்த வாக்கியம். பக்தியை வளர்க்க வளர்க்க ஆனந்தம் மேலிடுகிறது. கடவுளைப் பற்றிச் சிந்திப்பதற்கேற்ப அதில் சுவை உண்டாகிறது. உடலைப் பேணுதற்கு, உணவைச் சுவைத்து உண்பதற்கு நிகராக உள்ளத்திலே தெய்வ பக்தியை வளர்ப்பதற்கு, தெய்வ சிந்தனை உற்ற உபாயமாகிறது. தெய்வ சிந்தனை யாண்டும் தூயது. அதில் ஊறி இருப்பதற்கு ஏற்ப உள்ளத்தெளிவும் உறுதியும் உருவெடுக்கின்றன. அடுத்தபடியாகக் கடவுளைப் பற்றிய பேச்சையே வளர்க்க வேண்டும். பொருள் சேராத ஏனைய பேச்சுக்களை முற்றிலும் ஒதுக்குதல் வேண்டும். பொருள் சேராத வீண் பேச்சுக்கள் பக்தன் காதில் விழுகின்ற பொழுது அவன் அதை அமைதியாக நிராகரிக்கின்றான்; அல்லது அச்சூழ்நிலையினின்று விலகிக்கொள்கின்றான். அப்படிச் செய்யாவிட்டால் அவனிடத்து உருவெடுத்து வருகிற பக்திக்குப் பங்கம் உண்டாகிறது.

அடுத்தபடியாக அவரவர்க்குற்ற ஐதிகப்படி தெய்வ சாந்நித்தியத்தை அமைத்துக்கொண்டு ஆங்குக் குறிப்பிட்ட வேளைகளில் வீழ்ந்து நமஸ்கரிப்பது முற்றிலும் அவசியம். வீழ்ந்து வணங்குவதால் உடல் வாழ்க்கை நமக்குரியதன்று, அது தெய்வ வணக்கத்துக்கென்றே அமைந்திருக்கிறது என்னும் உறுதிப்பாடு பக்தனுக்கு வருகிறது.

இறைவனுடைய சாந்நித்தியத்தை அகத்தில் உணர்ந்து அந்த உணர்வில் ஊறியிருப்பது தியானமாகிறது. தியானம் பண்ணுவதற்குத் தரையின் மீது பொருத்தமான ஆசனத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். அதன் மீது காலையிலும் மாலையிலும் நிமிர்ந்து உட்கார வேண்டும். கருவி கரணங்களை உள்முகமாகத் திருப்பி உள்ளேயிருக்கிற தெய்வ சாந்நித்தியத்தின்கண் எண்ணத்தை நிலை நாட்டுதல் வேண்டும். ஆரம்ப தசையிலிருப்பவர்கள் இதை அதிக நேரம் செய்யலாகாது. துவக்கத்தில் ஐந்து நிமிஷ தியானம் போதுமானது. பிறகு அது தானாகவே படிப்படியாக அதிக நேரத்தை எடுத்துக்கொள்கிறது. பதினைந்து நிமிஷம் பண்ணுகிற தியானம் ஐந்து நிமிஷத்தில் பண்ணியது போன்று காலம் ஒடுங்குகிறது. அத்தகைய கால ஒடுக்கம் நல்ல தியானத்தின் அறிகுறியாகும். இம்முறைகளையெல்லாம் இனிது நிறைவேற்றுகின்றவர்கள் பக்திமார்க்கத்தில் நன்கு முன்னேறி வருவார்கள்.

கேள்வி: (203) சூதாட்டம் வேண்டாம் என்று பீஷ்மர் ஏன் தடுக்கவில்லை?

பீஷ்மர் ஒரு நிறைஞானி. தெய்விகப் பேராற்றல் மிக வாய்க்கப்பெற்றவர். யோக சாதனங்களின் உச்ச நிலையையெட்டியவர். அன்னவர் பீஷ்மாச்சாரியர் என்று பாராட்டப் பெறுகின்றார். அத்தகையவர் சூதாட்டத்தை மிக எளிதில் தடுத்திருக்கலாம். அது மட்டுமன்று. சூதாடியதன் விளைவாகப் பாண்டவர்களுக்கு வந்த அவமானத்தைத் தடுத்திருக்கலாம். அதற்கெல்லாம் மேலாக திரௌபதியின் மீது சுமத்தப்பட்டிருந்த மானபங்கத்தைத் தடுத்திருக்கலாம். மற்று அவரோ இத்தகைய பொருந்தாத நிகழ்ச்சிகளுக்கிடையில் ஒரு வேற்றார் போன்று உதாசீனர் போன்று இருந்துவிட்டார்.

குரு வம்சத்துக்குரிய சிம்மாசனத்தின் மீது பொருத்தமான மூர்த்தியை அமர்த்தும் வரையில் தம்முடைய குடும்பக் கடமைகளை அவர் புறக்கணிக்கலாகாதென்று அன்னை சத்தியவதி அவருக்கு ஆணையிட்டிருந்தாள். அந்த ஆணையின்படி அவர் ராஜகுமாரனாகிய யுதிஷ்டிரனை யுவராஜாவாக சிம்மாசனத்தின் மீது அமர்த்தினார். அதன் பொருட்டு அவர் துரோணாச்சாரியர், கிருபாச்சாரியர், விதுரர் முதலியவர்

களோடும் கலந்து பேசினர். அவர்கள் எல்லாரும் அதை முற்றிலும் பொருத்தமான செயல் எனப் பாராட்டினர். ஆனல் திருதராஷ்டிரனுக்கு மட்டும் அச்செயலில் திருப்தியுண்டாகவில்லே. நல்ல செயல் ஒன்றில் ஈடுபடும்பொழுது உலகத்தவர் எல்லாரையும் திருப்திபடுத்த முடியாது என்பது பீஷ்மருக்குத் தெரியும். அதன் பிறகு பீஷ்மர் குடும்பகாரியங்களில் தலேயிடவில்லே. அன்னேயின் ஆணையை நிறைவேற்றிவிட்டதாக அவர் தமக்குள் திருப்தியடைந்திருந்தார். ஒரு நிறைஞானியின் பாங்கில் உலக நிகழ்ச்சிகளுக்கு அவர் சாட்சி மாத்திரமாக இருந்தார். தாயாதிகளாகிய பாண்டவ இளேஞர்களும் கௌரவ இளேஞர்களும் அவரவர் மனபரிபாகத்திற்கேற்றபடியே வாழ்க்கையில் பிரவேசித்தனர். அவை யாவையும் பீஷ்மாச்சாரியர் சாக்ஷி மாத்திரமாயிருந்து கொண்டு பார்வையிட்டு வந்தார். திரௌபதிக்கு மானபங்கம் வந்தபொழுது அது தம் குடும்ப கௌரவத்துக்குப் பொருந்தாதது என அவர் பொருள்படுத்தவில்லே, அதில் தலேயிடவுமில்லே. வேற்ருன் போன்று அங்கிலேயில் அவர் நடந்து கொண்டார். அதற்கிடையில் ‘குரு வம்சத்துக்கு அழிவு வந்து விட்டது’ என்னும் ஒரு கருத்தை மட்டும் அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் அனேவர் காதில் விழும்படி தெரிவித்தார். தர்மத்தைக் கடைப்பிடிக்கிறவன் பல சோதனேகளுக்கிடையில் வெற்றியடைவான், அதர்மத்தில் ஈடுபடுகிறவன் ஆரம்ப தசையில் படாடோபத்தோடு மேல் நிலேக்கு வந்து பிறகு அறவே அழிந்து பட்டுப் போவான் என்னும் பேருண்மை பாரதப் போரின் மூலம் வெளியாயிற்று. பீஷ்மர் தம்முடைய ஆதிக்கத்தைப் பயன்படுத்தாதிருந்தது அவருடைய பெருமைக்குச் சான்ருகிறது. எவ்விதத்திலும் தீமை வெல்லாது; எவ்விதத்திலும் தர்மம் அழிந்து பட்டுப்போகாது என்பது இறைவனுடைய நியதி. குடும்பகாரியங்களில் சம்பந்தப்படாதவர் போன்றிருந்து இப்பேருண்மை வெளியாவதற்குப் பீஷ்மருடைய அமைதி உதவியது.

கேள்வி: (204) நம்மைத் தளர்வுறச் செய்யும் இடுக்கண்களேக் களேவது எப்படி?

சினம் பொல்லாதது. சினந்து கொண்டவன் பைத்தியக்காரன் போன்று நடந்து கொள்ளுகின்ருன். சினந்து கொள்ளுதற்கேற்ப அவனுடைய ஆற்றல்கள் விரயமாகின்றன. இக் கோட்பாடுகளே அமைதியுற்றிருக்கும்பொழுது ஆத்மசாதகனெருவன் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தானே சினந்துகொண்டபொழுது இச் சிறுமைகளுக்குத் தான் இலக்கு ஆனதை அவன் அமைதியாக விமரிசனம் பண்ணவேண்டும். ஆறுவது சினம் என்னும் நல்லியல்பை உறுதிப்படுத்தவேண்டும். அது உறுதி பெறுதற்கேற்ப சினம் தவிர்க்கப்படுகிறது.

பொருமை பொல்லாதது. மனிதனுடைய ஆற்றலே அது அழிக்கிறது. விவேகத்தை அது விரட்டியோட்டுகிறது. அதற்கு அடிமையாகிறவன் தன்னுடைய தகைமையையே பாழ்படுத்துகிருன். பொருமைக்குப் பதிலாகப் பிறரிடமுள்ள சிறப்பைப் பாராட்டுதற்கேற்ப இவனுடைய சொந்த சிறப்பு பன்மடங்கு அதிகரிக்கிறது. இங்ஙனம் பொருந்தாத மன எழுச்சிகள் தன்னேப் பலஹீனன் ஆக்குவதையும் பொருந்திய மனப்பான்மை தன்னேத் திண்ணியன் ஆக்குவதையும் மனிதன் அனுபவ பூர்வமாகக் கண்டுகொள்ளலாம்.

மனிதனுடைய ஆற்றலேத் தகர்த்துத் தளர்வுறச் செய்கின்ற மனநோய் விசனம் என்னும் பெயர் பெறுகிறது. வியாகூலப்பட்டுக்கொண்டிருப்பவன் வாழ்வுக்கு உதவமாட்டான். வருந்துதல் என்னும் வியாகூல நிலேக்கு இடம் கொடுக்கிறவன் மனது மெலிந்து போகிறது. திண்ணிய செயல் எதையும் சாதிக்க அவனல் இயலாது. நொந்து நொந்து அவன் நொடிந்து போகிருன். கண்ணெதிரே மற்றவர்கள் அடைந்துவரும் முன்னேற்றத்தைப் பார்க்கிருன். அத்தகைய வாய்ப்பு தனக்கு அமையவில்லே என்று வருத்தத்தை வளர்க்கிருன். அது தன்னுடைய தலேவிதி என்று தன்னேயே நொந்துகொள்ளுகிருன். இப்படி அறியாமையினல் மனிதன் தனக்குத்தானே சிருஷ்டி செய்துகொண்ட துக்கசாகரத்தில் மூழ்கி அல்லல்படுகிருன். நொடிப்பொழுதில் துயரத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டுப் பேர் ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் நல்ல கிருத்தியங்களில் ஈடுபடும் வாய்ப்பு அவன் கைவசத்தில் இருக்கிறது. அதை உணராதிருப்பது மடமையாகும்.

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

" ஓர் இல் நெய்தல் கறங்க ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூஅணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப்பண்பு இலாளன்
இன்னாது அம்ம இவ்உலகம்
இனிய காண்குஇதன் இயல்பு உணர்ந்தோரே "

— [புறநானூறு–194]

— ஓர் இல்லத்தில் இறந்த துயரச் செய்தியைத் தெரிவிக்கும் சாவுப்பறை ஒலிக்கிறது. இன்னொரு இல்லத்தில் மங்கலச் செய்தியை உணர்த்தும் திருமண மத்தளம் ஒலிக்கிறது. திருமணப்பெண் மலர்மாலே சூடி மகிழ்ச்சி அடைகிருள். கணவன் இறந்து விட்டதால், கணவனை இழந்த பெண்மணி கண்ணீர் வடித்து அழுகிருள்.

இவ்வாறு இன்பமும் துன்பமும் கலந்த தன்மை உடையதாக இவ்வுலகத்தைப் படைத்து விட்டான் படைப்புக் கடவுள் பிரம்ம தேவன். இவ் உலகத்தின் இயற்கை எவ்வளவு கொடியதாக இருக்கிறது! ஆகவே, இந்த உலகத்தின் நியதியாக அமைந்துள்ள இந்தத் தன்மையை நன்கு அறிந்து கொண்டவர்கள், மோட்சத்தைத் தரக்கூடிய நல்ல செயல்களையே அறிந்து செய்யவேண்டும் எனப் புறநானூறு என்னும் சங்க இலக்கிய நூல் கூறுகிறது.

இன்பமும் துன்பமும் கலந்ததாக இந்த உலகத்தைப் படைப்புக் கடவுள் படைத்து விட்டான் என்று இப்பாடல் கூறுவதில் இருந்து, இன்ப துன்பம் இரவு பகல் போல மானிடப் பிறவியில் மாறி மாறி வரும் என்பது புலனகிறது.

மோட்சம் என்னும் வீடுபேறு தரத்தக்க நல்ல செயல்களையே நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செய்தல் வேண்டும் எனவும் இப் பாடல் இயம்புகிறது.

இதிலிருந்து மோட்சம் என்ற ஒன்று உண்டு என்பதை அக்கால மக்கள் நம்பினர்கள் என்பது தெரிகிறது.

அந்த மோட்சத்தை அடைவதுதான் மானிட வாழ்வின் குறிக்கோள்; அந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நல்ல செயல்களையே செய்தல் வேண்டும் என்ற கருத்தும் தெரிய வருகிறது.

நல்ல செயல்களைச் செய்யாமல் போனலும் சரி; தீய செயல்களைச் செய்தாலும் சரி; மோட்சம் கிடைக்காது.

" செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் "

— செய்யத் தகாத செயல்களைச் செய்வதாலும், செய்யத் தகுந்தவற்றைச் செய்யாமல் விட்டு விடுவதாலும் தீமைகள் வந்து சேரும் என்பது வள்ளுவர் கூறுகின்ற பொது உண்மையாகும்.

இந்த உலகத்தில் உள்ள இன்பத்தை உண்மையான இன்பம் என்று எண்ணிவிடக் கூடாது; உண்மையில் இன்பம் போலத் தோன்றினலும் கூட, உண்மையான இன்பம் ஆகாது.

தவறுதலாக-அறியாமை காரணமாக-இந்தப் பொய்மையான இன்பத்தை உண்மையான இன்பம் என அறிந்து விரும்புகின்றவர்கள் துன்பத்தையே அடைவார்கள்.

இத்தகைய பொய்யான இன்பத்தைவிரும்பாமல், நமக்கு வரக்கூடிய துன்பம் எல்லாம் வருவது இயற்கைதான் என எண்ணக்கூடியவனுக்கு ஒரு நாளும் துன்பம் இல்லை.

"இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான்
துன்பம் உறுதல் இலன்"

என்பது குறள் காட்டும் நெறி.

மோட்சத்தை விரும்பி நல்ல செயல்களையே செய்யுங்கள் எனப் புறநானூறு கூறுகிறது. அப்படியானல், நல்ல செயல்களைச் செய்தால், அந்த நல்ல செயல்களின் காரணமாக விளைவது நல்ல விளைவு என்ற மோட்சம்.

எனவே, காரணத்தை அடிப்படையாகக் கொண்டே காரியம் தோன்றுகிறது. காரணத்திற்கும் காரியத்திற்கும் தொடர்பு உண்டு அல்லவா!

எந்தச் செயலுக்கும் ஒரு பயன் உண்டு என்பதும் வினைக்குப் பயன் உண்டு என்பதும் புறநானூறு உணர்த்துகின்ற கருத்து.

விதியை—ஊழ்வினையை—இந்த ஆசிரியர்,

"நல்ல செயல்களையே செய்யுங்கள்; மோட்சம் கிடைக்கும்" எனச் சொல்லுவதன் மூலம் குறிப்பாக உணர்த்துகிறார்.

தெரியாத ஒரு செய்தியாக இருந்தால், கேட்பவர்களுக்கு விளங்கும்படியாகத் தெளிவாக விளக்கிச் சொல்லுதல் வேண்டும்.

இங்கே இந்தப் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியரான பக்குடுக்கை நன்கணியார் என்ற புலவர், விதியை, ஊழ்வினையை இவ்வாறு ஏன் குறிப்பாக உணர்த்துகிறார்?

அக்காலத்தில் ஊழ்வினையைப் பற்றிய கருத்து மக்களுக்குப் பழக்கமாக இருந்தது. சொல்லக்கூடிய ஆசிரியருக்கும் தெரிந்திருந்தது. கேட்கக்கூடிய மக்களுக்கும் தெரிந்திருந்தது.

எனவே, தெரிந்த ஒன்றை மேலும் விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை அன்றோ! அம்முறையிலே இப்புலவர் குறிப்பாக உணர்த்துகிறார்.

"பண்பு இல்லாத அந்தப் படைக்கும் கடவுள் இவ்வாறு உலகத்தைப் படைத்து விட்டான்" என்கிறார் பாடற் புலவர்.

"உலகம் ஒருவனால் படைக்கப்பட்டது" என்ற புலவரின் எண்ணம் நமக்குப் புலனாகிறது.

உலகம் எவ்வாறு உண்டாயிற்று ?

உலகம் எவ்வாறு உண்டாயிற்று? இவ் வினவுக்கு விடையாகத்தான் புறநானூற்றுப் புலவர், "ஒருவன் உலகத்தைப் படைத்தான்" எனக் கூறினார்.

இதே வினவுக்கு இன்னும் சிலர் என்ன விடை கூறுகிறார்கள் என்பதையும் இவ்விடத்தில் நினைத்துப் பார்ப்பது பொருத்தம் ஆகும்.

உலகாயத மத [லோகாயதமத] வாதிகளின் எண்ணம்:

"கண்ணுக்குப் புலனாகின்ற நிலம், நீர், காற்று, தீ ஆகிய நான்கு பூதங்களும் வெவ்வேறு வகையில் ஒன்று சேர்கின்றன. அவ்வாறு ஒன்றுசேர்வதால் இந்த உலகமும், உலகத்தில் உள்ள ஏனைய பொருள்களும் தோற்றத்திற்கு வருகின்றன.

யாரோ ஒருவர் படைத்து வைத்ததைப் போல, ஒருவித ஒழுங்கும் நியதியும் இந்த உலகத்தில் காணப்படுகின்றனவே என்றால், அந்த ஒழுங்கும் நியதியும் தற்செயலாகவே ஏற்பட்டவை" — இவ்வாறு உலகம் தோன்றியதைப் பற்றி உலகாயதவாதிகள் கூறுகின்றனர்.

பூதங்கள் ஐந்து அல்லவா! ஆகாயம் என்னும் ஒரு பூதத்தை இவர்கள் சொல்லவில்லையே ! எனக் கேட்கலாம்.

உலகாயதவாதிகள் கண்ணால் பார்ப்பதையே நம்புவார்கள்; கண்ணுக்குத் தெரியாததை நம்பமாட்டார்கள். ஆகாயம் கண்ணுக்குத் தெரிவது இல்லை. எனவே இவர்கள் ஆகாயத்தை நம்பவில்லை; அதை ஒரு பூதமாகச் சொல்லவில்லை.

சமண மதக் கருத்து:

இந்தப் பிரபஞ்சத்தில், நமது புலன்களுக்குத் தெளிவாகக்கூடிய பௌதிகப் பொருள்கள் அனைத்திற்கும் 'புற்கலம்' என்று பெயர்.

பல பொருள்கள் இணைந்து ஒன்றாக ஆவதற்கும், சேர்ந்துள்ள பொருள்கள் பிரிந்து பல ஆவதற்கும் புற்கலம் என்று பெயர். இது புற்கலத்திற்குத் தரப்பட்டுள்ள விளக்கம் ஆகும்.

புற்கலத்திற்கு "ஸ்கந்தங்கள்" [கூட்டுப் பொருள்கள்] என்று பெயர்.

முருகனுக்கு ஸ்கந்தன் என்ற பெயர் உண்டு. சரவணப்பொய்கையில் உள்ள ஆறு குழந்தைகளையும் பார்வதிதேவி ஒன்று சேர்த்ததால் ஸ்கந்தன் என்ற பெயர் உண்டாயிற்று என்பது இவ்விடம் நினைக்கத்தக்கது.

உலகப் பொருள்கள் எல்லாம் ஸ்கந்தங்கள். எல்லா ஸ்கந்தங்களும் சேர்ந்த இந்த உலகம் மகா ஸ்கந்தம்.

இந்த ஸ்கந்தங்களும், மகா ஸ்கந்தம் என்ற உலகமும் எங்கே இருந்து தோன்றின ? என்றால், எங்கே இவை போய் இறுதியில் முடிகின்றன என்று பார்க்க வேண்டும்.

இவையெல்லாம் இறுதியில் உருமாறி, நிலைமாறி இதற்குமேல் அழிக்க முடியாது என்ற அணுக்களில் போய் முடியும்.

அப்படியானால் அத்தகைய அணுக்களில் இருந்துதான் இவையெல்லாம் [ஸ்கந்தங்களும், மகா ஸ்கந்தங்களும்] தோன்றியிருக்க முடியும்.

ஏன் என்றால் முடிவு எங்கே அமைகிறதோ அங்கேதான் தோற்றமும் அமையும் என உலகம் தோன்றியதைப் பற்றியும், உலகப் பொருள்கள் தோற்றத்திற்கு வந்ததைப் பற்றியும் சமண மதத்தவர்கள் [ஜைனர்கள்] கூறுகின்றனர்.

உலகத்தைக் கடவுள் படைத்தார் என்னும்

கொள்கையைச் சமணர்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

பௌத்தமதக் கருத்து :

பிரபஞ்சத்தின் தோற்றம்பற்றியோ, ஒடுக்கம் பற்றியோ, இந்த உலகத்திற்கான—உலகத் தோற்றத்திற்கான—மூலப்பொருள் எது என்பதைப்பற்றியோ பௌத்த மதம் எதுவும் கூறவில்லை.

கடவுள் ஒருவர் உள்ளார் என்னும் கருத்தைப் புத்த மதம் ஏற்றுக்கொள்ளுவது இல்லை.

சாங்கியமதக் கோட்பாடுகள் :

"இந்த உலகம் ஒரே ஒரு மூலப்பொருளில் இருந்துதான் தோன்றுகிறது. அந்த மூலப் பொருள் அறிவு சொரூபம் ஆனது"

என்ற உபநிடதக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு,

"மூலப்பொருள் இரண்டு. அந்த இரண்டில் ஒரு மூலப்பொருள் அறிவு சொரூபம் ஆனது. அது 'புருஷன்' எனப்படும்.

இன்னொரு மூலப்பொருள் அறிவு இல்லாதது. அதாவது அசேதனம். இதற்குப் 'பிரகிருதி' என்று பெயர். இந்தப் பிரகிருதியில் இருந்துதான் உலகம் தோன்றுகிறது; இறுதியில் உலகம் ஒடுங்குவதும் இந்தப் பிரகிருதியில்தான்."

—இவ்வாறு இந்த உலகம் தோன்றுவதைப் பற்றிச் சாங்கிய மதம் கூறுகிறது.

வைசேஷிகம், நியாயம், மீமாம்சம் ஆகிய மதங்களின் கொள்கைகள் :

"அணுக்களில் இருந்துதான் இந்த உலகம் தோன்றியது"

என உலகத் தோற்றம்பற்றி வைசேஷிக சமயத்தினர் கூறுகின்றனர்.

இதே கருத்தைத்தான் நையாயிகர் என்ற நியாய மதத்தினரும் சொல்லுகின்றனர்.

மீமாம்ச மதத்தினருக்கும் இக்கருத்தே உடன்பாடு.

வேதாந்தக்கொள்கை என்ன சொல்லுகிறது ?

"மெய்யான பிரம்மம் பொய்யான இவ் உலகத்தைத் தன்னிடத்தே தோற்றுவிக்கிறது"

என உலகத் தோற்றத்தைப்பற்றி வேதாந்தம் இயம்புகிறது.

சைவசித்தாந்தம் கூறுவது என்ன ?

"பேராற்றல் உடைய இறைவன் மாயை என்ற ஒன்றில்இருந்துதான் உலகைத் தோற்றுவிக்கிறன்"

எனச் சைவசித்தாந்திகள் கூறுகின்றனர்.

கிரேக்க அறிஞர்களின் கருத்துக்கள்:

"உலகத் தோற்றத்திற்கு மூலகாரணம் அணுக்கள்" என்று டெமொகரட்டீஸ், எபிகிரட்டீஸ் ஆகிய கிரேக்கத் தத்துவ ஞானிகள் இருவர் கூறுகின்றனர்.

அறிவியல் அறிஞர் கருத்துக்கள்:

"கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நட்சத்திரம் ஒன்று சூரியன் அருகில் வந்து கடந்து சென்றது. அப்பொழுது அதன் ஈர்ப்புச் சக்தியால் சூரியன் பாதிக்கப்பட்டது. சூரியனில் இருந்து வெப்பம் மிகுந்த வாயுப் பகுதி ஒன்று நீள் வடிவம் பெற்றுப் பிரிந்து சென்றது. பின்னர் அது சிறிதும் பெரிதும் ஆன பகுதிகளாகப் பிரிந்து, குளிர்ச்சியடைந்து இறுகி வெவ்வேறு கிரகங்கள் உண்டாயின."

— பூமியின் தோற்றத்தைப் பற்றிய அறிவியல் அறிஞர்களின் கருத்துக்களில் இது ஒன்று.

மற்றொரு கருத்து : "கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, விண்வெளியில் ஒரு பெரும் பரப்பில் தீப்பிழம்பான வாயுவும், துகள்களும் சுழன்றுகொண்டிருந்தன. ஓடும் வெள்ளத்தில் உண்டாகும் சுழிகள்போன்று, இப்பரப்பில் ஆங்காங்கே சுழிகள் உண்டாயின. பின்னர் இச்சுழிகள் ஈர்ப்பு விசையால் அவற்றைச் சுற்றியுள்ள வாயுவையும், துகள்களையும் கவர்ந்து திரண்டு வெவ்வேறு கிரகங்களாயின. இவற்றுள் ஒன்று நமது பூமி. இப்பெரும் பரப்பின் மத்தியில் சூரியன் அமைந்து சுழன்று கொண்டிருக்கிறது."

உலகம் உண்டான விதம்பற்றிய புறநானூறு கூறுகின்ற கருத்தோடு, சில மதங்கள்கூறுகின்ற கருத்துக்களையும், ஏனைய அறிஞர்கள் கூறுகின்றகருத்துக்களையும்தொகுத்துப்பார்த்தோம்.

இந்தப் புறநானூற்றுப் பாடலைப் பாடிய ஆசிரியரின் உள்ளத்தில் நிறைந்துள்ள உணர்ச்சியை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

"உலகம் இன்பமும் துன்பமும் நிறைந்தது. அம்முறையில் இறைவன் படைத்து விட்டான். நல்ல செயல்களையே எல்லாரும் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்து மோட்சம் அடைய வேண்டும்" என்ற ஓர் ஆழமான

உணர்வை, அழுத்தமான முறையில் வெளிப் படுத்துகிறார்.

ஆழமான அளவுக்கு உணருகின்றவரே ஆழ மான உணர்ச்சிகளை வெளியிடமுடியும்.

இங்கே இப்புலவருடைய பாடலில் ஆற்றல் வாய்ந்த உணர்ச்சியை [The vividnes‹ and power of the emotion] நாம் காண்கிறோம்.

பாடலைப் படித்து உணர்ந்த பிறகும் அந்த உணர்வு தொடர்ந்த உணர்ச்சியாக [The continuity of steadiness of the emotion] நமது மனதில் பதிந்திருப்பதை உணர்கிறோம்.

திருமண மேளம் முழங்க, திருமணம் ஆன பெண் தன் கணவனோடு கூடிஇருக்கிறாள் ஒரு வீட்டில்.

இன்னொரு வீட்டில் சாவுப்பறை ஒலிக்க, கண வனை இழந்த பெண் கண்ணீர் வடிக்கிறாள் என இரண்டு வேறுபட்ட நிலையினை இன்ப துன்பத் துக்கு எடுத்துக்காட்டாகப் புறநானூற்றுப் புலவர் கூறுகிறார். இதைப் படிக்கும்போது இன்னொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

தேவாரம் பாடிய அடியார்களுள் ஒருவர் சுந்தரமூர்த்தி நாயனார். அப்பெரியார் அவினாசி வழியே செல்லுகிறார். தெருவில் ஓர் இல்லத் தில் மங்கல இசை முழங்குகிறது. இன்னொரு இல்லத்தில் துன்பத்திற்குரியஓசை கேட்கிறது; விசாரிக்கிறார். துன்பத்திற்கு உள்ளான இல் லத்தில் வளர்ந்த பையன் குளத்தில் உள்ள முதலையால் விழுங்கப்பட்டு இறந்து போனான். அறிந்த சுந்தரர் வருந்துகிறார். பெற்றோர் களின் துன்பத்தைப் போக்க எண்ணுகிறார். சிவபிரான் அருளால் முதலை உண்ட பாலகனை உயிரோடு எழுப்பி, அவ்வில்லத்தினரின் துய ரத்தைத் துடைக்கின்றார்.

பழைய நூலான புறநானூற்றில், இன்ப துன்பம் நிறைந்ததுதான் உலகம்; நல்லன செய் யுங்கள் என்று மட்டும் சொல்லிவிட்டுச் சென் றார் புலவர்.

இங்கே அடியார் சுந்தரர், அற்புதச் செயல் ஒன்று செய்து, நல்லது செய்து துன்பத்தையும் இன்பமாக மாற்றுகிறார்.

இறைவன் மீதும், சமயத்தின் மீதும் மக்க ளுக்கு நம்பிக்கையும், பற்றுதலும் ஏற்படச் செய்ய வேண்டிய கடமையை மேற்கொண்டிருந் தவர்கள் அடியார்கள். எனவே, மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வண்ணம் அற்புத நிகழ்ச் சியை நிகழ்த்திக்காட்ட வேண்டிய சூழ்நிலை, பக்தி மார்க்கம் வளர்ந்து வந்த தொடக்க காலத் தில் இருந்து வந்தது.

"மக்களுக்கு இடையே நம்பிக்கையை உண்டு பண்ணவும், அந்த நம்பிக்கையை வளர்க்கவும் சில செயல்கள் அவசியம் ஆகின்றன" என மறுபிறப்பு பற்றி சுவாமி விவேகானந்தர் எழுதிய கட்டுரையில் சொல்லப்பட்டது இங்கே நினைக்கத் தக்கது.

மேற்குறித்த புறநானூற்றுப் பாடலின் இறுதி அடி, "இனிய காண்கு இதன் இயல்பு உணர்ந் தோரே" என்பது.

இதன் இயல்பு உணர்ந்தோர்—இந்த உலகத் தின் இயற்கை நியதியை நன்கு உணர்ந்தவர் கள்; இனிய காண்கு-வீட்டு இன்பத்தைத் தரும் நல்ல செய்கைகளை அறிந்து செய்க.

"இனிய" என்ற சொல்லுக்கு வீட்டு இன் பத்தை நல்கும் நல்ல செய்கைகளை எனப் பழைய உரையாசிரியர் விளக்கம் தருகிறார்.

"வீட்டு இன்பத்தைத் தரும் நல்ல செயல் களைச் செய்யாமல் போனால், கிடந்து வருந்தக் கூடிய நரகத் துன்பம் கிடைக்கும். இல்லாவிட் டால், மீண்டும் உலகத்தில் வந்து பிறக்கக் கூடிய மறுபிறவி வாய்க்கும்."

இந்தக் கருத்துக்களையும் அந்தக் கடைசி அடி நமக்குப் புலப்படுத்துகிறது.

இந்தியாவில் தோன்றிய எல்லா மதங்களும் மறுபிறவி உண்மையை ஏற்றுக்கொள்கின்றன.

"நினைவுக்கு எட்டாத மிகவும் பழங்காலத் தில் இருந்தே ஓர் ஆத்மா ஒருமுறையோ பல முறையோ மறுபிறவி எடுக்கிறது. உறவுமுறை, அரசனாயிருந்த முறை, தொண்டு முறை இவ் வாறு ஏதாவது ஒருமுறையில் எல்லா ஆத்மாக் களுடன் ஒருவித உறவு நிலையை அந்த ஆத்மா பெற்று விளங்குகிறது."

—[From times eternal a soul has taken incarnation more than once or endlessly often in any kind of beings and moreover has been related by kinship, soverignty or servitude with all souls more than once" — Doctrine of the Jainas.]—என்னும் சமண சமயக் கருத்து மறுபிறவி உண்மையை வலியுறுத்துகிறது.

குறிப்புகள்

பாதயாத்திரை - 7

கோடை விடுமுறையைப் பயனுடையதாகக் கழிக்க ஏற்படுத்திய பாதயாத்திரைத் திட்டம் ஏழாவது முறையாக இவ்வாண்டு சிறப்பாக நடந்தது. இவ்வாண்டு பாதயாத்திரை கன்னியா குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் துவங்கி, புதுக்கடை என்னும் ஊரில் அந்தர்யோகத் துடன் முடிவுபெற்றது. இவ்வாண்டு பாதயாத் திரையில் சுமார் அறுபத்தைந்து பேர் கலந்து கொண்டனர். வழக்கம்போன்று ஆசிரியர் களும், மாணவர்களும், விவசாயப் பெரு மக்களும், வியாபாரத்துறையிலிருப்பவர்களும் இவ்வாண்டிலும் பங்குகொண்டனர்.

பாதயாத்திரை ஆரம்பிப்பதற்கு முன்பு 5-5-79 அன்று கன்னியாகுமரிக்கு அருகில் அஞ்சு கிராமத்தில் விஸ்வ ஹிந்து பரிஷித்தின ரால் அங்குள்ள பொதுமக்களுக்குச் சொற் பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சமயத்தைப் பற்றிய உண்மைகளையும், வினய கர் தத்துவத்தையும், அவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு எடுத்துச் சொல்லப்பட்டன. அஞ்சு கிராமத்திற்குப் பக்கத்தில் உள்ள மேட் டுக்குடி மக்கள் உற்சாகத்துடன் வரவேற்பு அளித்தனர். பாத யாத்திரைக்கு வந்தவர் களுக்கு அன்புடன் அவர்கள் அமுது படைத் தனர். பாத யாத்திரைக்கு வந்தவர்கள் அங் கிருந்து கன்னியாகுமரி சென்று விவேகானந்த பாறையில் உள்ள தியான மண்டபத்தில் தியா னம் செய்தனர். சுவாமி விவேகானந்தர் வாழ்க் கையில் அப்பாறை முக்கியத்துவம் பெறுகிறது. ஆங்குச்சுவாமி விவேகானந்தர் தியானம்செய்து உலக முன்னேற்றத்திற்குத் தாம் யாது செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானித்தார். உலக நாடுகளுக்கு இந்தியா தரவேண்டியது ஆத் மீகம் என்பதைத் தெளிவாக உணர்ந்தார். ஆத் மீகச் செல்வத்தை உலக நாடுகளுக்கு நாம் எடுத்துத் தந்தாகவேண்டும் என்பதையும், அப் படித் தருவதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வேண்டிய லௌகீகச் செல்வத் தைப் பெறலாம் என்பதையும் அவர் தியானத் தின் மூலம் தெளிவுபெற்றார். ஆங்கு அன்று விவே கானந்தர் பாறைக்கு வந்திருந்த பார்வையாளர் களுக்கு இவ்விஷயம் எடுத்து விளக்கப்பட்டது. கன்னியாகுமரி ஆலயத்திற்குச் சென்று பாத யாத்திரைக்காக வந்திருந்தவர்கள் கன்னியா குமரி தேவியை வழிபட்டனர். அங்கிருந்து சுசீந்திரம் சென்று தாணுமாலயன் சுவாமி வழி பாடு செய்துவிட்டு இரவு 7-30 மணிக்குப் பாத யாத்ரிகர்கள் அனைவரும் நாகர்கோவிலில் வட சேரி மடத்தம்மாள் சமாதியில் ஒன்று கூடினர். இரவு உணவு ஆங்கு எடுத்துக்கொண்டு அங் கேயே அனைவரும் தங்கினர்.

மே மாதம் 6ஆம் தேதி அதிகாலை 3-30 மணிக்குப் பாதயாத்ரிகர்கள் அனைவரும் எழுந் தனர். ஆங்குள்ள குளத்தில் ஸ்நானம் முடித்து விட்டு ஆங்குள்ள ஸ்ரீ வரதேசுவரர் ஆலயத் தின் முன் அனைவரும் அமர்ந்து பள்ளி எழுச்சி, சிவபுராணம், காயத்ரீ மந்திரம் முதலியன ஓதி காலை வழிபாட்டை முடித்தனர். அதிகாலை சரியாக 5-00 மணிக்குப் பாதயாத்திரை துவங் கியது.

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே"

என்னும் நாம ஜபத்துடன் பாதயாத்ரிகர்கள் நடக்க ஆரம்பித்தனர். பாதயாத்திரை முழுவ தும் நாம ஜபம் நிகழ்ந்துகொண்டே இருந்தது. நான்கு நாட்கள் இவ்வாண்டு பாத யாத்திரை நிகழ்ந்தது. நான்கு நாட்களும் பாத யாத்ரிகர் கள் நடப்பதன் மூலம் காயத்தையும், நாமம் சொல்லுவதன் மூலம் வாக்கையும், தெய்வ சிந் தனை செய்வதன் மூலம் மனதையும் தூய்மைப் படுத்திக்கொண்டனர். பாத யாத்திரையில் மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங் களும் தூய்மை அடைவதற்கு வாய்ப்பு இருக் கின்றது. அவ்வாய்ப்பைப் பாதயாத்ரிகர்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டனர்.

நாகர்கோவில் வடசேரி மடத்தம்மாள் சமாதி யில் இருந்து பொட்டல் என்னும் கிராமம் சுமார் ஆறு மைல் தொலைவில் உள்ளது. காலை 5-மணிக்குப் புறப்பட்ட பாதயாத்ரிகர்கள் நாம ஜபத்துடன் காலை 7-05 மணிக்குப் பொட்டல் கிராமத்தை அடைந்தனர். பொட்டலில் ஒரு விஷ்ணு பக்தர் பாதயாத்ரிகர்களைப் பக்தியோடு

வரவேற்றார். அடியார்களுக்கு அமுது படைப்பது பெரும்பாக்கியமெனக் கருதிய அவ்வன்பர் ஸ்ரீமந் நாராயணனே பாதயாத்ரிகர்கள் வடிவில் தம் இல்லத்திற்கு எழுந்தருளியுள்ளார் என்ற பாவனையோடு பாதயாத்ரிகர்களுக்குக் காலை அமுது படைத்தார். அவர் வீட்டில் விஷ்ணு ஆலயம் சிறப்பாக அமைந்திருக்கிறது. பாத யாத்ரிகர்கள் நாமஜபத்துடன் அவர் இல்லத்திற்குள் நுழைந்தனர். பகவான், பக்தர், பாகவதம் ஆகிய திரிவேணி சங்கமம் ஏற்பட்டதுபோல் அன்று அவருடைய இல்லம் திகழ்ந்தது. பக்தர்களுக்கு அவர்களை அறியாது பகவான் எத்தனையோ நன்மைகள் செய்து வைக்கின்றார். அது அவருடைய திருவருளின் செயலாகும். பகவானுடைய அருளால் பாத யாத்ரிகர்கள் மூலம் அப்பக்தருடைய இல்லம் அன்று புனிதமாயிற்று. அங்கிருந்து காலை எட்டு மணிக்குப் புறப்பட்டு நாமஜபத்துடன் பாதயாத்ரிகர்கள் தங்கள் புனித பயணத்தை மேலும் தொடங்கினர். காலை ஒன்பது மணிக்குச் சுண்டபற்றி விளை என்னும் ஊரைஅடைந்தனர். அவ்வூர் அன்பர்பாதயாத்ரிகர்களை அகமலர்ச்சியோடும், முகமலர்ச்சியோடும் வரவேற்றார். குளிர்தருவும், மெல்லிய பூங்காற்றும், தீஞ்சுவை நிறைந்த பழச்சாறும் ஆங்குப் பாதயாத்ரிகர்களுக்கு வேண்டியவாறு கிடைத்தன. "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே" என்ற முதல் அடியுடன் அமைந்துள்ளவள்ளலாரின் பாடலுக்குஅனுபவரீதியில் பாதயாத்ரிகர்களுக்கு ஆங்கு விளக்கம் கிடைத்தது. குளிர்ந்த மரங்களும், அம்மரங்கள் தந்த நிழல்களும், அவ்வன்பர் வீட்டில் அமர்ந்திருந்த போது வீசியகாற்றும், அக்காற்றில் விளைந்த சுகமும், அவ்வன்பர் தந்த தீஞ்சுவைப் பழரசமும் இறை இன்பத்திற்கு நிகராக இருந்தன. ஆங்கு இத்தகைய குற்றமற்ற சுகத்தில் பாத யாத்ரிகர்கள் இன்புற்று இருந்துவிட்டுப் பாத யாத்திரையை மேற்கொண்டு துவங்கினர். காலை 9-45 மணிக்கு ஈத்தாமொழி என்னும் ஊரை அடைந்தனர். அப்பூதி அடிகள் அப்பர் சுவாமிகளையும், அவருடைய திருக் கூட்டத்தையும் பக்தியோடு வரவேற்றது போன்று ஈத்தாமொழி அன்பர் பாத யாத்ரிகர்களை மாலையிட்டு வரவேற்றார். பாத யாத்ரிகர்கள் அனைவரையும் அவர் இல்லத்திற்கு அழைத்துச் சென்று இனிய இருக்கை தந்து இன்மொழி பேசி கனியும், கனிரசமும் தந்து தம் உள்ளத்தில் உள்ள உவகையை வெளிப் படுத்தினர். சற்று ஓய்வுக்குப் பின் கோம்பை சுவாமி என்னும் மகான் சமாதி அடைந்துள்ள கோம்பை சுவாமி கோயிலுக்கு அழைத்துச் சென்றார். காலை 11-30 மணியிலிருந்து 12-30 மணி வரையில் கோம்பை சுவாமிகள் சன்னிதியில் பாதயாத்ரிகர்களும் அவ்வூர் மக்களும் சேர்ந்து ஐக்கிய வழிபாடு செய்தனர். பக்தி பரவசத்தோடு ஐக்கிய வழிபாடு அமைந்தது. அங்குள்ள ஏழைமக்கள் சிலருக்கு வேட்டிகளும், புடவைகளும் தரப்பட்டன. பாதயாத்ரிகர்களோடு அவ்வூர் மக்கள் சுமார் நூறு பேருக்கு மேல் அன்று மதியம் கோம்பை சுவாமிகளின் சமாதியில் திருவமுது எடுத்துக் கொண்டனர். அன்று ஆங்கு நடந்த நிகழ்ச்சிகள் யாவும் கோம்பை சுவாமிகள் திருவருளின்படி நடந்தன என்பது எங்களுக்குப் பின்னர் தெரிந்தது. நாங்கள் புறப்படும்பொழுது கோம்பை சுவாமிகளின் தவநிலையையும், அவர் அடைந்திருந்த பெருநிலையையும் அவ்வூர் அன்பர் விளக்கமாக எடுத்துச் சொன்னர். அப்பொழுதுதான் பாதயாத்திரை என்னும் புனித யாத்திரையில் புனித ஸ்தலம் ஒன்றுக்கு வந்திருக்கிறோம் என்ற உணர்ச்சி உண்டாயிற்று. நண்பகல் உணவுக்குப் பின் கடற்கரை ஓரத்தில் கற்பதருவாக விளங்கும் தென்னந்தோப்பின் நிழலில் பாதயாத்ரிகர்கள் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்ட காட்சி இயற்கைத்தாயின் அணைப்பில் பாதயாத்ரிகர்கள் இன்புற்று இருப்பது போன்று இருந்தது.

மாலை 4-15மணிக்குக் கோம்பை சுவாமிகள் மடத்திலிருந்து பாதயாத்ரிகர்கள் நாமஜபத்துடன் புறப்பட்டனர். வழியில் மக்கள் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு மாலை 4-45 மணிக்கு ராஜாக்கமங்களம் என்னும் ஊரைப் பாதயாத்ரிகர்கள் அடைந்தனர். ஆங்கு இளநீரோடு இன்பமான வரவேற்பு பாதயாத்ரிகர்களுக்குக் கிடைத்தது. அவ்வூரில் உள்ள அம்மன் அருள்நிறைந்த அம்மனைக் காட்சி அளித்தாள். பக்தர்களுக்கு அருள்பாலிப்பது போன்று அவ்விக்ரகத்தின் அமைப்பு அமைந்

திருந்தது. அம்பாளை அணுகுவதற்கு உபாயங்கள் பல உள்ளன என்று கூறப்பட்டது. உபாயங்களுள் அம்பிகையைத் தாயாகவும், நம்மை அம்பிகையின் குழந்தைகளாகவும் பாவனை செய்யும் வாத்சல்ய பாவனையே சிறந்தது என்று அன்பர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. அவ்வூர் அன்பர் பாதயாத்திரை முழுவதும் உடனிருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்ததோடு அன்று மாலை தம் உள்ளம் குளிரப் பெரிய விருந்து வைத்துப் பாதயாத்ரிகர்களுக்கு ஆராஅமுது படைத்தார் அங்கிருந்து சிறுவர்கள் சிறுமிகள் இரண்டு வரிசைகளில் கொடிகளைப் பிடித்துக்கொண்டு உற்சாகத்துடன் "இந்துசமயமக்களெல்லாம் ஒன்றுசேருவோம்" என்ற கோஷத்துடன் பாத யாதரிகர்களைச் சிவாலயத்திற்கு அழைத்துச்சென்றனர். அங்குள்ள ஸ்ரீ பூதநாதசுவாமிகளை வழிபட்டபின் அங்குள்ள மக்களுக்கு ஒற்றுமையின் அவசியம் விளக்கிக் கூறப்பட்டது. அங்கிருந்து சிறுவர் சிறுமியர்கள் வழிநெடுக மலர் தூவி பாதயாத்ரிகர்களை அவ்வூர் சேரிக்கு அழைத்துச் சென்றனர். ஆங்கு அழகான அம்மன்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. சிறுவர் சிறுமிகள் உற்சாகத்துடன் பங்குகொண்டனர். அக்குழந்தைகளுக்குக் கதைகள் கூறித் தெய்வ நம்பிக்கை ஊட்டப்பட்டது. அங்குள்ள வசதியற்ற மக்கள் சிலருக்கு வேட்டிகளும், புடவைகளும், சிறுவர் சிறுமியர்களுக்குத் துண்டுகளும், பனியன்களும், ஜட்டிகளும் தரப்பட்டன உடல்தேவை, உள்ளத் தேவை அனைத்தும் ஆங்கு வாழும் சிலருக்குப் பூர்த்தி செய்யப்பட்டன. பாதயாத்திரையைச் சேர்ந்த அன்பர் ஒருவர் கொண்டு வந்திருந்த கற்கண்டைச் சிறுவர், சிறுமியர்களுக்குப் பிரசாதமாகக் கொடுத்தோம். அங்கிருந்து இரவு எட்டு மணிக்கு நாம ஜபத்துடன் பாதயாத்திரை மேலும் துவங்கியது. இரவு 9-10க்குப் பேயோடு என்னும் கிராமத்தைப் பாதயாத்ரிகர்கள் அடைந்தனர். ஆங்கு அன்று அம்மன்விழா உற்சவம் நடந்துகொண்டு இருந்தது. அன்று சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் கோயிலில் கூடினர். அம்பாளின் பெருமையையும், இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி சொரூபமாக அம்பிகை இருக்கிறாள் என்பதையும் பக்திபூர்வமாக விழாவை எப்படி ஒற்றுமையாகக் கொண்டாட வேண்டும் என்பதையும் ஆங்குக் கூடியிருந்த மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டன. அவ்வூரன்பர் பாதயாத்ரிகர்களுக்காக இரவு உணவும், தங்க வசதியும் செய்திருந்தார். அவ்வன்பர் மனம் குளிரப் பாதயாத்ரிகர்கள் அங்கு உணவு எடுத்துக்கொண்டு அன்றிரவு அவர் இல்லத்தில் தங்கினர்.

7-5-79 அதிகாலை நான்கு மணிக்கு எழுந்திருந்து பள்ளியெழுச்சி பாடிப் பிரார்த்தனை செய்து4-30 மணிக்கு மேற்கொண்டு பாதயாத்திரைதுவங்கப்பட்டது. அன்று முழுவதும் பாதயாத்திரையில் "சிவாய நம ஓம் சிவாய நம: சிவாய நம ஓம் நம சிவாய" என்ற நாமத்தைப் பாதயாத்ரிகர்கள் ஜபித்தனர். வெள்ளிமலையை நோக்கி நாம ஜபத்துடன் பாதயாத்ரிகர்கள் வீரமாக நடந்தனர். வழியில் சேதூர் என்னும் கிராமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண இந்து இளைஞர் சங்கத்தினர் வரவேற்பளித்துப் பாதயாத்ரிகர்களை அவ்வூர் அம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். பிராம்ம முகூர்த்தத்தில் அம்பிகையின் திருவருளும், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவருளும் ஆங்குப் பூரணமாக இருந்ததைப் பாதயாத்ரிகர்கள் பார்த்துப்பரவசமடைந்தனர். அந்தச் சுபவேளையில் ஸ்ரீ ராமகிருஷ்ண இந்து இளைஞர் சங்கம் ஒன்றைப் பாதயாத்ரிகர்கள் திருவருள் துணைகொண்டு ஆரம்பித்து வைத்தனர். அவ்விளைஞர் சங்கம் நாட்டுக்கு நற்பணி செய்யும் சங்கமாகச் சிறந்து விளங்க வேண்டுமென்று அம்பிகையையும், ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் பிரார்த்தித்துக் கொண்டனர். கல்வி கற்ற தூய மனமும், தியாக உள்ளமும் கொண்ட இளைஞர்கள் சங்கம் இன்றைக்கு நாட்டில் ஏராளமாக உருவாகி, நம் நாட்டின் ஆத்மிகச் செல்வத்தை உலகுக்கு வழங்க முன்வரவேண்டும். அதற்கு முன்மாதிரியாக இவ் இளைஞர் சங்கம் துவங்கப்பட்டது. பாதயாத்ரிகர்கள் அந்த நல்ல காரியத்தை முழு மனதோடு ஆரம்பித்து வைத்துவிட்டுக் காலை 5-45 மணிக்கு அங்கிருந்து நாம ஜபத்துடன் புறப்பட்டனர். காலை 6-30 மணிக்கு வெள்ளிமலையை அடைந்தனர். ஆங்கு 1940-ஆம் ஆண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பரம்பரையில் வந்த ஸ்ரீமத் அம்பானந்த சுவாமிகளால் ஸ்தா

பிக்கப்பட்ட ஸ்ரீ விவேகானந்த மந்திரம் பாத யாத்ரிகர்களைப் பேரன்புடன் வரவேற்றது. ஸ்ரீ விவேகானந்த மந்திரத்தில் இப்பொழுது ஸ்ரீமத் அம்பானந்த சுவாமிகளின் நேர் சிஷ்யர்களான ஸ்ரீமத் மதுரானந்த சுவாமிகளும், ஸ்ரீமத் சத்தியானந்த சுவாமிகளும் இருந்து அந்த ஸ்தாபனத்தை நடாத்தி வருகிறார்கள். சுவாமிகள் இருவரும் எங்கள் பாத யாத்திரையிலும் கலந்துகொண்டனர். பாத யாத்ரிகர்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பிரசாதமாகக் காலைச் சிற்றுண்டி கொடுத்து ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவருளுக்குப் பாத்திரமாக்கினார்கள். அங்குள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கோயிலின் முன் அமர்ந்து பாதயாத்ரிகர்கள் பிரார்த்தனை செய்தனர். வெள்ளிமலை என்பது ஒரு சிறு குன்று. அதன் மத்தியில் ஸ்ரீ விவேகானந்த மந்திரம் அமைந்துள்ளது. அதன் உச்சியில் ஸ்ரீ முருகன் ஆலயம் அமைந்துள்ளது. உலக விவகாரங்களை ஒதுக்கி விட்டுத் தெய்வீக உணர்வில் உள்ளம் தோய்ந்திருப்பதற்கு ஸ்ரீ விவேகானந்த மந்திரமும், உச்சியிலுள்ள முருகன் ஆலயமும் உகந்த இடங்களாகின்றன. பரத்தை நோக்கிச் செல்லும் பயணத்துக்கு அவ்விரு இடங்களும் தங்கும் இடங்கள் ஆகின்றன. அப்புனித இடங்கள் பாதயாத்ரிகர்களாகிய எங்களுக்குத்தங்கும் இடங்களாக அமைந்து எங்கள் உள்ளங்களைப் பரத்தின்பால் எடுத்துச் சென்றன. அவ்வூர் மக்கள் நாள்தோறும் இருவேளைகளிலும் குன்றின் மீதுள்ள குமரன் கோவிலுக்குச் சென்று குமரனை வழிபட்டுக் குன்றின் மீது இருந்து பரந்த காட்சியைப்பார்த்து மனதை விரிவடையச் செய்யலாம். விவேகானந்த மந்திரத்துக்கு வந்து ஆங்குள்ள சாதுக்களோடு பழகி சத்விஷயங்களைக் கேட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயத்தின் முன் அமர்ந்து தியானம் செய்துவிட்டுப் போகலாம். அப்படி அவர்கள் செய்வார்களானால் உடற்பிணி ஒழிந்து, உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்கி தேக ஆரோக்கியத்துடனும், மன மகிழ்ச்சியுடனும் வாழ்நாளைக் கழிக்கலாம். எத்தனைபேர் இன்றைக்கு இம் மகிமையை உணர்ந்து பயன் பெறுகிறார்கள் என்பது கேள்விக்குரியவிஷயம். விவேகானந்த மந்திரத்துக்குப் பிரார்த்தனை மண்டபம் ஒன்று கட்ட சுவாமிகள் திட்டம் போட்டிருக்கிறார்கள். அத்திட்டத்துக்கு அருள் நாட்டமுடைய பெரு மக்கள் பொருளுதவி செய்து அப்பிரார்த்தனை மண்டபத்தைப் பஜனைக்கும்,ஜபத்திற்கும், தியானத்திற்கும் பயன்படுத்தி நற்பேறு பெறலாம். ஆங்குள்ள சுவாமிகள் இத்தகைய உயர்ந்த நோக்கத்தோடுதான் இம்மண்டபம் கட்ட முனைந்துள்ளார்கள். ஸ்ரீ விவேகானந்த மந்திரத்தையும், குன்றிலுள்ள குமரன் ஆலயத்தையும் பயன்படுத்தி உயர்வடைகிற மக்கள் கூட்டம் பெருகவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் பாதயாத்ரிகர்கள் குமரனைத்தரிசித்துவிட்டு ஆங்கிருந்து காலை 8-30 மணிக்குப் புறப்பட்டனர். பாதயாத்ரிகர்கள் இடையில் ஆங்காங்கு தந்த வரவேற்புகளை ஏற்றுக்கொண்டு காலை 11-15 மணிக்கு மணவாளக் குறிச்சியை அடைந்தனர். ஆங்கு இளைஞர்கள் அன்போடு தந்த பானகம் பருகிவிட்டு ஆங்குள்ள சேரிக்குச் சென்றனர். சேரிவாழ் மக்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். சேரித்துப்புரவு செய்தல் என்பது பாதயாத்திரைத் திட்டத்தில் ஓர் அம்சமாக இருந்தது. அத்திட்டத்தைப் பாதயாத்ரிகர்கள் அங்கு கொண்டு செலுத்த வாய்ப்பில்லை. அச்சேரிவாழ் மக்கள் அவர்களுடைய இடங்களைத் துப்புரவாக வைத்திருந்தது பாதயாத்ரிகர்களுக்கு வியப்பைத் தந்தது. நாடு நலிந்து போய்க் கொண்டிருப்பதற்கு இடையில் முன்னேற்றத்திற்கான அறிகுறிகளும் இருக்கின்றன என்பதற்கு அச்சேரிவாழ் மக்கள் உதாரணமாக இருந்தார்கள். அம்மக்களுக்கு வேண்டிய அறவுரைகளைக் கூறிவிட்டு மணவாளக்குறிச்சி பாபுஜி உயர்நிலைப்பள்ளியினர் அளித்த வரவேற்பைஏற்றுக்கொண்டு அங்கு பாதயாத்ரிகர்கள் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டனர். நண்பகல் உணவு பாதயாத்ரிகர்களுக்கு ஆங்குச் சிறந்த முறையில் அளிக்கப்பட்டது. பிற்பகல் 3-30 மணிக்கு ஆங்குப் பொதுமக்களுக்கு அறவுரை வழங்கப்பட்டது. பிறகு வசதியற்ற சில மக்களுக்கு உடைகள் வழங்கப்பட்டன. சமயத்துறையில் ஆர்வமுடைய மக்களுக்குப் புஸ்தகங்களும் வழங்கப்பட்டன. அங்கிருந்து மாலை 4-30 மணிக்குப் புறப்பட்டு நாமஜபத்துடன் பாதயாத்ரிகர்கள் நடந்தனர். வழியில் அவ்வூர் ராமகிருஷ்ண பக்தர் ஒருவர் பாதயாத்ரிகர்களை

வரவேற்றுத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். தம் இல்லத்தில் அருள்நிலை ஓங்குவதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவருடைய படங்களைப் பாதயாத்ரிகர்களைக்கொண்டு திறப்புவிழாச் செய்தார். அவருடைய உள்ளம் தூய உள்ளம் ஆகும் பொருட்டுப் பாதயாத்ரிகர்கள் அனைவருக்கும் பால் வழங்கினர்.

நாமஜபத்துடன் பாதயாத்ரிகர்கள் காட்டு மங்கலம் என்னும் ஊரை அடைந்தனர். ஆங்கு ஓர் அன்பர் பூரண கும்பம்கொண்டு பாதயாத்ரிகர்களை வரவேற்றார். வெளியில் பாதயாத்ரிகர்கள் சிவ நாமத்தை முழங்கினர்கள். அவ்வன்பருடைய வீட்டுக்குள் பூஜை அறையில் ஹரேராம பஜனை முழங்கிக்கொண்டு இருந்தது. அவ்வீட்டின் தலைவர் துறவுகோலத்தில் இருந்துகொண்டு இவ்வெல்லா ஓசைகளையும் எடுத்து விழுங்கும்படியாகக் கம்பீரமான தொனியில் ஹரிஓம் ராமகிருஷ்ண என்று பாதயாத்ரிகர்களை வரவேற்றார். சிறிது நேரம் அவ்விடத்தில் தெய்விக அலைகள் மோதிக் கொண்டிருந்தன. பாதயாத்திரை அன்பர்களுக்கு அவ்வன்பர் சிற்றுண்டியும், உள்ளத்துக்குச் சிறந்த படிப்பினையும் தந்தார். பண்டைக் காலத்தில் ரிஷிகள் இல்லறத்தோடு இருந்து ஆச்ரம வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள் என்று நூல்களில் படித்திருக்கிறோம். பாதயாத்ரிகர்களுக்கு அன்று ரிஷிகள் எப்படிக் கிரஹஸ்த வாழ்வு வாழ்ந்தார்கள் என்று அக்குடும்பத்தினர் விளக்கிக் காட்டினர். குடும்பத்தில் எப்படி ஆச்ரம வாழ்க்கை வாழவேண்டும் என்பதைப் பாதத்யாரிகர்கள் அன்றைக்கு நேரிடையாகப் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள். கிரஹஸ்த வாழ்க்கை என்றால் என்ன என்பது அன்றைக்கு அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. பாதயாத்ரிகர்கள் அன்று கற்றுக்கொண்டபாடத்தைத் தங்கள் வாழ்க்கையில் அனுஷ்டிப்பார்களானால் பாதயாத்திரையின் முழுப்பயனையும் அடைந்தவர்களாகிறார்கள்.

பாதயாத்ரிகர்கள் அங்கிருந்து புறப்பட்டு மாலை 6-30 மணிக்கு மண்டைக்காடு வந்து சேர்ந்தனர். மண்டைக்காட்டு அம்மன் கோவிலில் பாதயாத்ரிகர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மண்டைக்காட்டு அம்மன் பிரசித்தி பெற்ற அம்மன் ஆவாள். ஆங்கு வழிபாட்டை முடித்துக்கொண்டு ஒன்றரை மணி நேரம் பாதயாத்ரிகர்கள் ஐக்கிய வணக்கம் செய்தார்கள். யாத்ரிகர்களுக்காக இரவு உணவும், தங்க இடமும் அன்பர் ஒருவர் அங்கு ஏற்பாடு செய்திருந்தார்.

8—5—79 காலை 4-30 மணிக்கு எழுந்திருந்து ஸ்நானம் செய்து விட்டு மண்டைக்காட்டு அம்மன் சந்நிதிமுன் பாதயாத்ரிகர்கள் பிரார்த்தனை செய்தனர். 5-45 மணிக்கு “ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம், ஆதி சக்தி மஹா சக்தி பராசக்தி ஓம்” என்ற நாமஜபத்துடன் அன்றைய பாதயாத்திரை துவங்கியது.காலை 6-45 மணிக்குக் குளச்சல் என்னும் ஊரைப் பாதயாத்ரிகர்கள் அடைந்தனர். ஆங்கு தேசுவிநாயகர் கோயிலில் வரவேற்பு அளித்தார்கள். பாதயாத்ரிகர்களுக்கு அங்கேயே சிற்றுண்டியும் அன்புடன் வழங்கினர்கள். அங்கு வழிபாடும், பொதுமக்களுக்கு அறவுரையும் செய்துவிட்டு 8-45 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டனர். வழியில் ஓர் அன்பர் அன்புடன் ஏற்பாடு செய்திருந்த குளிர்ந்த பானத்தை ஏற்றுக்கொண்டு காலை 10-30மணி சுமாருக்குப் பாலப்பள்ளம் என்னும் ஊரைப் பாதயாத்ரிகர்கள் அடைந்தனர்.ஆங்குச் சிறுவர்களும், சிறுமிகளும் மலர்தூவிப் பாதயாத்ரிகர்களைவரவேற்றனர். பாலப்பள்ளம் இயற்கை அழகு பொருந்தி இருக்கிறது. உள்ளத்தின் உயர்வுக்கு ஏற்ப அந்த இடத்தின் மகிமையை உணரலாம். நிலநூல் ஆசிரியருக்கு அல்லது வரலாற்று ஆசிரியருக்கு வேண்டிய பாடம் அங்கிருக்கிறது. விஞ்ஞான அறிவுடையோருக்கு வேண்டிய விஷயம் அங்கிருக்கிறது. கவிஞர்கள் அவ்விடத்துக்குப் போனால் அவர்கள் உள்ளத்தில் இருந்து கவிதைகள் பொங்கிவரும். இமயமலையைப் பற்றிச் சிறப்பாகப் பாடிய பாரதியார் பாலப்பள்ளம் போயிருந்தால் அதைப் பற்றியும் கவிதை பாடியிருப்பார். யோகிகள் அவ்விடத்திற்குப் போனால் அவர்களுடைய உள்ளம் பரத்தைப் பற்றிய தியானத்தில் மூழ்கிவிடும். இத்தகைய சிறப்புப் பொருந்திய பாலப்பள்ளம் பாதயாத்ரிகர்களுடைய உள்ளத்தைக்கவர்ந்தது வியப்பன்று. சூரியனுடைய வருகையால் இருள் இருந்த இடம் தெரியாது மறைவது போன்று

பாலப்பள்ளம் சேர்ந்ததும் வழிநடையில் ஏற்பட்ட சிரமம் உடலைவிட்டு மறைந்தது. அவ்விடத்தை அடைந்ததும் உள்ளம் பேருணர்வுக்கு உள்ளாகியது. இறைவனோடு இணக்கம் வைத்து இருப்பது போன்ற உணர்வு உள்ளத்தில் உண்டாயிற்று. ஆங்குப் பாத யாத்ரிகர்களை வரவேற்றவர்கள் இளநீரும், பானகமும் கொடுத்து அவர்கள் அன்பை வெளிப்படுத்தினர். தாய்மார்களும் குழந்தைகளும் கள்ளம் கபடமற்ற உள்ளத்துடன் வழிபாட்டில் கலந்துகொண்டனர். ஆங்கு அன்பர் ஒருவர் பாதயாத்ரிகர்களுக்கு அன்புடன் நண்பகல் உணவு கொடுத்தார். மாலை 4-00 மணிவரையில் பஜனையும், சொற்பொழிவும் சிறப்பாக நடைபெற்றன. மாலை 4-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுப் பாதயாத்ரிகர்கள் 5-15 மணிக்குக் கருங்கல் என்னும் ஊரை அடைந்தனர். விஸ்வஹிந்துபரிஷத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வரவேற்புக்கும், சொற்பொழிவுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். பாதயாத்ரிகர்களுக்குச் சிற்றுண்டியும் மால்டும் வழங்கினர்கள். அங்கிருந்து 6-15 மணிக்குப் புறப்பட்டு இரவு 7 மணிக்குப் பூட்டேற்றியை அடைந்தனர். அங்குள்ள மக்கள் சிறப்பான வரவேற்பு தந்தனர். அவர்களோடு சிறிது நேரம் அளவளாவி பாதயாத்ரிகர்கள் இருந்தனர். ராமன் குகனோடு சேர்ந்து ஐவர் ஆனோம் என்று பகர்ந்தது போன்று அவ்வூர் சேரி மக்களோடு பாதயாத்ரிகர்களும் சேர்ந்து அவர்களையும் தங்கள் மயமாக்கிக் கொண்டார்கள். அன்பு எத்தகைய இணக்கத்தை மக்களுக்கிடையில் உண்டுபண்ணுகிறது என்பதை ஆங்கு அனுபவ பூர்வமாக அறிய முடிந்தது. அம்மக்கள் ஏற்பாடு செய்திருந்த சிற்றுண்டிகளைப் பாதயாத்ரிகர்கள் அன்புடன் ஏற்றுக் கொண்டனர். அங்கிருந்து புறப்பட்டுக் கல்லடை நோக்கிப் பாதயாத்ரிகர்கள் சென்றனர். வழியில் அன்பர்கள் மலையாளத்தில் இனிமையாகப் பேசி பாதயாத்ரிகர்களுக்கு எலுமிச்சம் பழச்சர்பத் தந்தார்கள். அங்கிருந்து பாத யாத்ரிகர்கள் ஒற்றையடிப்பாதை வழியாக நாமஜபத்துடன் கல்லடை நோக்கி நடந்தனர். பாதயாத்திரையில் அடைந்த வழிநடைச் சிரமம் ஆங்கு உச்சநிலையில் இருப்பதைப் பாதயாத்ரிகர்கள் உணர்ந்தனர். அப்பாதையில் போகும் போது அமரநாத் யாத்திரை ஞாபகம் வந்து விட்டது. அமரநாத் யாத்திரையில் அமைந்திருப்பது போன்று ஆங்குப் பாதை அமைந்திருக்கிறது. இரவு 9-00 மணிக்குக் கல்லடை என்னும் ஊரை அடைந்தனர். அவ்வூரில் ஒரு சிறு குன்றின்மேல் கிருஷ்ணன் கோயில் சிறிய அளவில் அமைந்திருக்கிறது. அக்கோயிலுக்கு முன் பாதயாத்ரிகர்கள் தங்குவதற்கென்றே அன்பர்கள் பந்தல் அமைத்திருந்தார்கள். தாய்மார்கள் அப்பந்தலில் அமர்ந்திருந்து திருவிளக்குப் பூஜை செய்தனர். அப்பூஜையில் பாதயாத்ரிகர்கள் பங்குகொண்டனர். பூஜைக்குப் பிறகு அவ்வூர் மக்களுக்கு அறவுரை வழங்கப்பட்டது. இரவு உணவு எடுத்துக்கொண்டு அப்பந்தலில் பாதயாத்ரிகர்கள் ஓய்வெடுத்துக் கொண்டனர். அன்று சிறு தூறல் இருந்தது. கோடைகாலமாக இருந்தபொழுதிலும் குளிர்ந்தகாற்று வீசியது. ஆனந்தமாக இருந்தது.

9—5—79 காலை 4-15 மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்துவிட்டுக் கண்ணன் கோவில் முன்பு காலை வழிபாட்டை பாதயாத்ரிகர்கள் முடித்தனர்.

"ஸ்ரீ நாராயண, ஹரிநாராயண, ஸ்ரீஹரிநாராயண நாராயண"

என்ற நாம ஜபத்துடன் 5-00 மணிக்கு அன்றைய பாதயாத்திரையைத் தொடங்கினர். 7-45 மணிக்கு அம்சி என்னும் ஊரை அடைந்தனர். ஆங்கு இந்து சமய மன்றத்தின் சார்பில் நூல் நிலையம் ஒன்றைப் பாத யாத்ரிகர்கள் துவக்கிவைத்தனர். இந்துசமய மன்றத்தினர் அன்போடு ஏற்பாடு செய்திருந்த சிற்றுண்டியை எடுத்துக்கொண்டு காலை 9-15 மணி சுமாருக்குப் புதுக்கடை என்னும் ஊரை அடைந்தனர். ஆங்கு ஒருநாள் அந்தர்யோகம் நடாத்தப்பெற்றது. பாதயாத்ரிகர்களும் ஊர்ப் பொதுமக்களும் அவ் அந்தர் யோகத்தில் கலந்துகொண்டு பயன் அடைந்தனர். அன்று நண்பகல் சேரி மக்கள் சிலருக்கும் பாதயாத்ரிகர்களுக்கும் சேர்த்து ஓர் அன்பர் உணவு ஏற்பாடு செய்திருந்தார். அவ்வன்பரின் மனம் குளிரப் பாதயாத்ரிகர்களும், சேரி மக்களும் ஒன்ருக அமர்ந்து சமபந்தி போஜனம் செய்தனர். பாதயாத்ரிகர்கள் அன்போடு

சேரிமக்களுக்கு உணவு பரிமாறி ஆனந்தம் அடைந்தனர். சேரி மக்கள் உண்ட இலையை எடுப்பதில் பாதயாத்ரிகர்கள் பரமானந்தம் அடைந்தனர். அச்சேரி மக்களுக்குப் பகவானுடைய நாமத்தைக் கூறும்படி செய்து அவர்களைப் புனிதப்படுத்தியதோடு ஒழுங்காக அமர்ந்து அமைதியாக உணவு ஏற்றுக்கொண்டு வரிசையாக எழுந்துபோகவும் பயிற்சி தரப்பட்டது. அச்சேரி மக்களுக்கு அன்று நல்லுணவும், நல்ல வாழ்க்கைப் பயிற்சியும், தெய்வபக்தியும் ஒருங்கே தரப்பட்டன. அன்று அந்தர்யோகம் முடிந்தபின் மாலையில் அப்பக்கங்களிலுள்ள வசதியற்ற மக்களுக்கு உடைகளும், ஞான வேட்கை உடையவர்களுக்கு ஞான நூல்களும், பாதயாத்திரையில் கலந்துகொண்ட அன்பர்கள் இருவரின் பொருள் உதவியால் வழங்கப் பட்டன. ஒவ்வொரு ஆண்டு பாதயாத்திரையிலும் உடலுக்கு நல்லுணவை வழங்கும் பொறுப்பை ஓர் அன்பரும், ரூபாய் ஆயிரம் மதிப்பளவில் உடைகள் வழங்கும் பொறுப்பை மற்ருேர் அன்பரும், ரூபாய் ஐந்நூறு மதிப்புள்ள ஞான நூல்களை மக்களுக்கு வழங்கும் பொறுப்பை மற்ருேர் அன்பரும் ஏற்றுக் கொண்டு இப்புனித யாத்திரையின் லட்சியத்தைப் பூர்த்தி செய்கின்றனர். 'நரசேவை நாராயண சேவை' ஆகும் என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கை அம்மூன்று அன்பர்களும் நிறைவேற்றி வைக்கிருர்கள். அந்தர்யோகம் முடிந்தபின் உடை, புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சியோடு இவ்வாண்டு பாதயாத்திரை முடிவு பெற்றது. பாதயாத்ரிகர்கள் பிறகு ஒன்றுகூடித் தங்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொண்டனர். பாதயாத்திரையில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், பாடத்தையும் மற்றவர்களோடு கலந்துகொண்டனர்.

இவ்வாண்டு பாதயாத்திரைக்குரிய ஏற்பாடு முழுவதும் விஸ்வஹிந்துபரிஷத்தினரும், இந்து சமய மன்றத்தினரும் ஆங்காங்கு பெரு முயற்சி எடுத்துச் சிறப்பாக அமைத்தனர். மக்களுக்கிடையில் சமய உணர்ச்சியை ஊட்டுவதற்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் அவர்கள் சிறந்த தொண்டாற்றி வருகிருர்கள். அவர்களுக்கு உதவும் வகையில் இப்பாதயாத்திரை அமைந்திருந்தது எனலாம். இறைவனுடைய திட்டம் என்னென்னவோ முறையில் நிகழ்ந்து மக்களிடையே இறையுணர்ச்சியை ஊட்டி வருகிறது. பாதயாத்திரை மக்களிடையே பக்தி உணர்வையும் இறை உணர்ச்சியையும் ஊட்டுவதற்கு உதவி வருகிறது. ஆலய வழிபாடும், சமூக சேவையும் இப்பாத யாத்திரையில் இடம் பெற்று இருக்கின்றன. இவ்வாண்டு பாதயாத்திரையில் சிறுவர்களும், சிறுமிகளும், ஆங்காங்கு பங்குகொண்டு உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். பாதயாத்ரிகர்கள் இளைஞர்களுடைய உள்ளத்தில் பஜனை பாடி பக்தியை வளர்த்தார்கள். பாதயாத்திரையில் பங்கு கொண்டவர்களும், பாதயாத்திரைக்கு ஏற்பாடு செய்தவர்களும் இறைவனுடைய திட்டத்தை நிறைவேற்றினவர்களாகிருர்கள். அவ் இரு கூட்டத்தினரும் அறிந்தோ அறியாமலோ கடவுள் தொண்டு செய்தவர்கள் ஆகின்ருர்கள். அறிந்து செய்தவர்கள் மனத்தூய்மையும் மனத்தெளிவும் பெற்ருர்கள். அறியாது செய்தவர்கள் உள்ளத்தில் மனத்தெளிவுக்கும் மனத் தூய்மைக்கும் வேண்டிய பதிவுகள் ஏற் பட்டன. இறைத்தொண்டு செய்தமையால் இறைவனுடைய அருளுக்கு அவர்கள் பாத்திர மானவர்களாகிருர்கள். ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்தில் பாத யாத்திரை நிகழ்ந்து வருகிறது. அடுத்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ்த்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செய்திகள்

நிகம்பவை

ஜூன் மாதம் 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி முடிய பருவ அந்தர்யோகம் குற்ருலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தில் நடைபெறும். இதர விபரங்களுக்குத் தர்ம சக்கரம் வைகாசி மாத இதழில் அட்டை இரண்டாம் பக்கத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

1978-79 ஆம் ஆண்டு அறிக்கையின் சுருக்கம்

இந்த ஸ்தாபனம் 1942ஆம் ஆண்டில் துவக்கப் பெற்றது. பாரமார்த்திகத் துறையிலும், கல்வித்துறையிலும் இது பணியாற்றி வருகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரம்பரையைச் சேர்ந்த சந்நியாசிகள் இதை நிர்வகித்து வருகிறார்கள்.

அந்தர்யோகம்

ஆத்மசாதனம் பயில விரும்புபவர்களுக்கு இந்த அந்தர்யோகம் நன்கு பயன்பட்டு வருகிறது. மூன்றுநாள் அந்தர்யோகம், இரண்டு நாள் அந்தர்யோகம், ஒருநாள் அந்தர்யோகம் ஆகியவைகள் தமிழ் நாட்டில் ஆங்காங்கு நிகழ்ந்து வருகின்றன. நூறு ஊர்களுக்குமேல் இந்த அந்தர்யோகத்தைப் பயன்படுத்திவருகின்றன. மேலும் ஆங்காங்கு உயர்நிலைப் பள்ளிகளில் அந்தர்யோகமுறையில் மாணவ மாணவிகளுக்கு அறபோதனை நிகழ்த்தப்பெற்றது.

குருகுல உயர்நிலைப்பள்ளி

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனம் என்னும் பெயர் பூண்டுள்ள இப்பாடசாலை குருகுல முறையில் திருப்பராய்த்துறையில் நடைபெற்று வருகிறது. 530 மாணவர்கள் இதில் வாழ்க்கைப் பயிற்சி பெறுகின்றனர். ஆண்டுதோறும் சுமார் 60 பேர் S. S L. C. பரீக்ஷைக்குச் சென்று பெரும்பாலும் எல்லாருமே தேர்வு பெறுகின்றனர். உடற்பயிற்சியிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் இப்பள்ளி திருச்சி ஜில்லாவில் முதன்மை பெற்றுவருகிறது.

விவேகானந்த உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி

உள்ளூர் மாணவ மாணவிகள் வசதிக்காக இவ்விரு பள்ளிகளும் உள்ளூர் கோயிலுக்கு அருகில் தனித்தனி இடங்களில் நடாத்தப்படுகின்றன. உயர்நிலைப்பள்ளியில் 598 பேரும், ஆரம்பப்பள்ளியில் 715 பேரும், நர்ஸரி ஸ்கூலில் 92 குழந்தைகளும் பயிற்சிபெற்று வருகின்றனர். 113 ஏழைக் குழந்தைகளுக்கு நண்பகல் இலவச உணவு வழங்கப்படுகின்றது.

கனரகமின்கலத் தொழிற்சாலை பள்ளிகள்

திருச்சிக்கு அருகாமையில் திருவெறும்பூரில் கனரக மின்கலத் தொழிற்சாலையாரால் இவை நன்கு நிறுவப்பெற்றுள்ளன. இவைகளின் நிர்வாகம் இத்தபோவனத்தின்கண் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1531 பேரும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 858 மாணவியரும், ஆரம்பப்பள்ளியில் 1378 சிறுர்களும், நர்ஸரியில் 458 குழந்தைகளும் ஆக 4225 பேர் பயிற்சி பெறுகிறார்கள்.

கந்தன் களிக்கூடம் — நர்ஸரி ஸ்கூல்

திருச்சி, தில்லைநகர் கேப்டன் டி. என். ராமசுவாமி அவர்களின் இல்லத்தில் 1969ஆம் ஆண்டு முதல் இக்களிக்கூடம் நடாத்தப் பெற்று வருகிறது. இரண்டரை வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களும், சிறுமிகளும் நல்ல பழக்க வழக்கங்கள் பெறுதல், குதூகலமாக ஓடியாடி விளையாடுதல், நல்ல உடல் நலன் பெறுதல் ஆகியவைகள் இதன் நோக்கமாகும். 130 பேர் இக்களிக்கூடத்தில் இருக்கிறார்கள். கரூர் பசுபதிபாளையத்தில் நடைபெறும் நர்ஸரியில் 252 சிறுர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

இளம் வயதிலேயே குழந்தைகளுக்கு நல்ல வாழ்க்கைப் பயிற்சி தருதற்கும், பக்தி மனப்பான்மையைப் புகட்டுதற்கும் ஆங்காங்கு களிக்கூடங்களை நடாத்துதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது.

விவேகானந்த கல்லூரி (குருகுல முறையில்)

மதுரை மாவட்டம் சோழவந்தானையடுத்துத் திருவேடகத்தில் விவேகானந்த கல்லூரி எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இது குருகுலமுறையில் நடைபெற்று வருவது இதன் சிறப்பியல்பு ஆகும். மாணவர்களும் ஆசிரியர்களும் கல்லூரியில் சேர்ந்து வாழ்ந்து வருகின்றனர். மாணவர்களின் வாழ்க்கை அல்லும் பகலும் ஆசிரியர்களின் கண்காணிப்பில் இருக்கிறது. சீலம் நிறைந்த வாழ்க்கைப் பயிற்சியை மாணவர்கள் இனிது பெற்று வருகின்றனர். இங்கு P. U. C. வகுப்பில் மூன்று பிரிவுகள் இருந்தன. B A. (Economics), B.Sc. (Physics), B. Sc. (Zoology), B. Com ஆகிய மூன்றுண்டு பட்ட வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. 1979-80ஆம் ஆண்டில் மேலும் சில பட்ட வகுப்புகள் துவக்கப் பெறும்.

தர்ம சக்கரம்

வாசகர்கள் இதைப்பற்றி நன்கு அறிந்திருக்கின்றனர். டிபாஸிட் சந்தா முறையில் 3617 பேரும், ஆண்டு சந்தா முறையில் 5560 பேரும் ஆக 9177 பேர் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரராக இருக்கிறார்கள். 1496 அரசாங்க வாசகசாலைகளுக்கு பத்திரிகை இனமாக அனுப்பப்படுகிறது.

தபோவனப் பிரசுராலயம் & அச்சுப்பள்ளி

சமய சம்பந்தமான நூல்களைத் தயாரிப்பதற்கு அச்சுப்பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 102 புத்தகங்கள் வெளி வந்துள்ளன.

விழாக்கள்

சிறப்பாக ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தியும், சுருக்கமாக அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஜயந்திகளும், சமயக் குரவர்கள் பலருடைய திருநாட்களும் இங்குக் கொண்டாடப்பெற்றன.

வைத்தியசாலை

குருகுல மாணவர் வசதிக்காகத் தகுதி வாய்ந்த டாக்டர் ஒருவரைக்கொண்டு இந்த வைத்தியசாலையைத் தபோவனம் நடத்தி வருகிறது. பொதுமக்களும் இதில் இலவச சிகிச்சை பெறுகின்றனர். இவ்வாண்டில் மொத்தம் 18475 பேர் 32539 தடவை சிகிச்சைபெற்றனர்.

கிருஷியும் மாட்டுப் பண்ணையும்

தபோவனம் திருப்பராய்த்துறையிலும், கிளை ஸ்தாபனங்களிலும் சொந்த பூமியில் விவசாயம் செய்கிறது. ஸ்தாபனத்துக்குத் தேவையான உணவுப்பொருளில் பெரும்பகுதி இவைகளில் உற்பத்தியாகின்றது. இந்த ஸ்தாபனம் திருப்பராய்த்துறையில் நடத்தி வருகிற மாட்டுப்பண்ணையில் 115 கால்நடைகள் உள்ளன. திருவேடகத்தில் 94 கால்நடைகள் உள்ளன.

கிளை ஸ்தாபனங்கள்

இத் தபோவனத்தின் கிளை ஸ்தாபனங்கள் திருக்குற்றாலத்திலும், கோயமுத்தூர் ஜில்லாவில் சித்திரச்சாவடியிலும், மதுரை ஜில்லாவில் திருவேடகத்திலும், சேலம் நகரத்தில் சுவர்ண புரியிலும், கரூரில் பசுபதிபாளையத்திலும் அமைந்துள்ளன.

இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் சமாதிக் கோயிலும், அதற்கு உரியதாக இருக்கும் நான்கு துண்டு நிலங்கள் சுமார் நான்கு ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் இராமநாதபுரம் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் சன்மார்க்க சங்கத்தால் சட்டபூர்வமாக தபோவனத்துக்கு இவ்வாண்டில் ஒப்படைக்கப் பெற்றிருக்கிறது. ஆங்கு இப்பொழுது சமாதிக் கோயிலைப் புதுப்பிப்பது முதலிய திருப்பணிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

பொருளாதாரம்

உதகமண்டலம் திரு. அ. சதாசிவம் பிள்ளை சத் கைங்கரியத்துக்காகப் பத்துலக்ஷ ரூபாய் இத்தபோவனத்திடம் ஒப்படைத்திருக்கிறார். இந்த நிதியைக்கொண்டு திருவேடகத்திலுள்ள விவேகானந்த கல்லூரி பயனடைந்து வருகின்றது. பாண்டிச்சேரியில் பிரஞ்சு அரசாங்கத்தில் பேராசிரியராக இருந்த திரு S. விஸ்வநாதன் ரூபாய் மூன்று லக்ஷம் நிதியாகத் தந்துள்ளார். அதன் வருவாய் கல்லூரி மாணவர்களுக்கு மான்யம் வழங்குதற்கும் தர்மசக்கர சந்தாதாரர்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. கரூர் திரு. மு. வைரப்பெருமாள் செட்டியார் பசுபதிபாளையம் விவேகானந்த கல்வி நிலையத்திற்குப் பயன் படும்படியாக டிரஸ்ட்ஏற்படுத்தி அதில்இதுவரைரூ. 1 75 000 சேர்த்துள்ளார்.

மற்றும் பல அன்பர்கள் நிதி ஏற்படுத்தி அதினின்று கிடைக்கும் வருமானத்தைக் குறிப்பிட்ட கைங்கரியங்களைச் செய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள். அவ்வாறு இவ்வாண்டில் மட்டும் ரூ. 54 520-35க்கு நிதிகள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன.

இவ்வாண்டு நன்கொடையாக ரூ. 5 62 971 வந்துள்ளது. மொத்த வரவு ரூ. 47 63 964, மொத்தச் செலவு ரூ. 47 51 411. நிகர வரவு ரூ. 12 553. இத்தொகை கடன் திருப்பித்தரப் பயன்பட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்துக்குத் தரும் நன்கொடைகளுக்கு வருமான வரி 80 G விதிப்படி வரி விலக்கு உண்டு.

சித்பவானந்த
தலைவர்

ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்கள்

அளகாபுரம், சேலம்–636004.

1978–79ஆம் ஆண்டு அறிக்கையின் சுருக்கம்

ஸ்ரீ ஸாரதா ஸமிதி

துறவறத்தை அடிப்படையாகக் கொண்டு பாரமார்த்திகப் பெருவாழ்க்கையில் ஈடுபடுகிற மகளிர்களுக்காக ஸ்ரீ ஸாரதா ஸமிதி என்ற இந்த ஸ்தாபனம் 1955 ஆம் ஆண்டு துவக்கப் பெற்றது. சேலம், சூரமங்கலம் — ஏற்காடு சாலேக்கு வட பகுதியில் இந்த ஸ்தாபனம் அமைந்துள்ளது. 1967ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி சங்கங்களின் சட்டத் தின்கீழ் இது பதிவு செய்யப்பெற்றுள்ளது. திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோ வனத்தின் தலைவர் சுவாமி சித்பவானந்தர் கண்காணிப்பில் இச்சங்கம் நடைபெற்று வரு கின்றது. திருப்பராய்த்துறை தபோவனத்தில் ஆடவர் துறவறத்துக்குப் பயிற்சி பெறுவது போன்று சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் மகளிர் துறவறத்துக்குப் பயிற்சி பெற்று வருகின்ற னர். ஏழுபேர் துறவறம் பூண்டிருக்கின்றனர். அவர்களுக்குத் தலைவியாக இருப்பவர் யதீஸ்வரி ஸாரதாப்பிரியை ஆவார். விவாகம் செய்து கொள்ளாத கன்னிகைகளும், சந்தான மில்லாத இளம் விதவைகளும் இச்சமிதியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

சேலத்திலுள்ள ஸ்ரீ ஸாரதா ஸமிதியின் அங்கத்தினர்கள் ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களை நிர்வகித்து வருகின்றனர்.

ஸ்ரீ ஸாரதா வித்யாலயம்

இது ஓர் உயர்நிலைப்பள்ளியாக விளங்கு கிறது. 1302 மாணவிகள் இதில் பயிற்சி பெறு கின்றனர். ஆண்டு தோறும் 100 பேருக்கு மேல் S. S. L. C. பரீட்சைக்குச் சென்று அனை வரும் தேர்ச்சியடைகின்றனர். மாணவியர் விடுதியும் இதனுடன் இணைக்கப்பட்டிருக் கிறது.

ஸ்ரீ ஸாரதா பாலமந்திர்

ஆரம்பப்பள்ளி, பாலர் களிக்கூடம் (நர்ஸரி ஸ்கூல்) ஆகியவை இதனோடு இணைக்கப்பட் டிருக்கின்றன. சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்து 1854 பேர் இங்கு பயின்று வருகின் றனர்.

அநாதை இல்லம்

ஆஸ்பத்திரியில் பிறந்து உற்றோர்களால் புறக் கணிக்கப்பட்ட குழந்தைகளை ஸ்ரீ ஸாரதா ஸமிதி எடுத்து வளர்த்து வருகிறது. வயது வரும்பொழுது அவரவர்க்கேற்ற கல்வியும் தரப்பெறுகிறது.

ஆதரவற்ற வயோதிக மகளிர்களுக்காக ஓர் இல்லம் அலாதியாக நடைபெற்று வருகிறது. இதில் பதினைந்து பேர் இருக்கிறார்கள்.

ஸ்ரீஸாரதா கல்லூரி

இக்கல்லூரி 1961ஆம் ஆண்டில் துவக்கப் பெற்றது. இப்பொழுது இது நிறைநிலை அடைந்திருக்கிறது. வெறும் ஏட்டுக்கல்வியைப் புகட்டுவதில் மட்டும் இக்கல்லூரி கருத்தைச் செலுத்துவதில்லை. இந்தியப் பண்பில் தூய தெய்விக வாழ்க்கை முறையை மாணவிகளுக்கு நல்குவது இக்கல்லூரியின் குறிக்கோள் ஆகி றது. P. U. C. யிலிருந்து M. A. வரையிலும் எல்லா வகுப்புகளும் இருக்கின்றன. இவ் வாண்டு இதில் 1649 பெண்கள் பயிற்சி பெறு கின்றனர். இதற்கு மாணவி விடுதியும் உண்டு. அதில் 604 பேர் இடம் பெற்றுள்ளனர். பஜனை பண்ணுவது, கடவுள் வழிபாடு செய்வது, ராமாயணம் மஹாபாரதம் போன்ற தெய்விக நூல்களை ஆராய்வது வாயிலாக மாணவிகள் பக்திமதிகளாக உருவெடுத்து வருகின்றனர்.

ஸ்ரீ ஸாரதா ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி

இக்கல்லூரி 1968–69இல் துவக்கப்பெற் றது. பாலாஜி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ராம கிருஷ்ண தபோவனக் கட்டடத்தில் இக்கல் லூரி நடைபெறுகின்றது. 95 பெண்கள் ஆசிரியைகளாவதற்கு இங்கு பயிற்சி பெறு கின்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண ஸாரதா உயர்நிலைப்பள்ளி

இது சுப்ரமணிய நகரில் இருக்கிறது. 1979 மாணவ மாணவியர்கள் இங்கு கல்வி பெறுகின்றனர். இதையொட்டிய ஆரம்பப்பள்ளி ஒன்று உண்டு. அதில் 977 சிறுர்கள் படித்து வருகிறுர்கள்.

ஆக ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 8 635, விடுதியில் இருப்போர் 859, போதிப்பவர்கள் 322, மற்றவர்கள் 284 ஆகும்.

மாட்டுப்பண்ணையும் கிருஷியும்

மாட்டுப்பண்ணையில் 62 கால்நடைகள் உள்ளன. ஆங்காங்கு காலியாக இருக்கும் இடங்களில் தோட்டப்பயிர் செய்யப்படுகின்றது. கழிவு நீர் சிறிதும் வீணாகாதபடி விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுவதால் பயிர்களுக்கு நல்ல எரு கிடைக்கின்றது; மாடுகளுக்குத் தீவனமும் கிடைக்கின்றது.

பொருளாதாரம்

முன்னாளைய ரயில்வே உபமந்திரி, பாரட்லா திரு S. V. ராமசாமி செட்டியார் அவர்களின் சொத்துக்களைக்கொண்டு 'ராம்சிதா கல்வி டிரஸ்ட்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. பதினைந்து லக்ஷம் மதிப்புள்ள இச்சொத்துக்களினின்று வரும் வருவாய் ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதர நன்கொடைகள் இதுகாறும் இக்கல்வி ஸ்தாபனங்களுக்குச் சுமார் தொன்னூறு லட்சம் சேர்ந்துள்ளது.

சேலம் ஜவஹர் மில்ஸ் மானேஜிங் டைரக்டர் திரு. M. A. பழனியப்ப செட்டியார் அவர்கள் அளித்த நன்கொடையினின்று குறைந்தபடிப் புள்ளவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

சேலம் ஜில்லா வைகுந்தவாசியாகிய திரு. E. S. ரத்தினம் அவர்கள் ரூ. 70 000–00 வட்டியில்லாக் கடனாகத் தந்தார்கள். அதைக் கொண்டு ஸ்ரீ ஸாரதா கல்லூரி விடுதிக்கு உணவு மண்டபம் கட்டப்பெற்று உபயோகத்தில் இருக்கிறது.

சேலம் திரு. தி. ப. சுந்தரம் செட்டியார் அவர்களும் திரு K. A. சஞ்சீவி செட்டியார் அவர்களும் ரூ. 70 000 முதலீட்டில் அத்வைதஆச்ரம டிரஸ்டை ஸ்ரீ ஸாரதா ஸமிதி நிர்வாகத்தில் ஒப்படைத்துள்ளனர். சுவர்ணபுரியிலுள்ள அத்வைத ஆச்ரமத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்துக்குத் தந்துள்ளனர்.

மாணவிகளுக்கு உதவிசெய்தற்பொருட்டு நிதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அன்பர்கள் தங்கள் பெயரில் நிதி அமைக்கலாம். அந்த நிதியினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருவாயைக் குறிப்பிட்ட கைங்கரியங்களுக்கு இந்த ஸ்தாபனம் டிரஸ்டியாக இருந்து செய்து வருகிறது. அன்பர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் தமக்கு வாய்க்கும் வருவாயினின்று ஒருபகுதியை இந்த நிதிக்கு ஒதுக்கி வைக்கலாம். சில ஆண்டுகளில் அதன் வடிவு பாராட்டத்தக்க பெரியது ஆகும்.

வகுப்பறைகள் கட்டுதற்காக சேர்த்து வந்த நிதியினின்று இவ்வாண்டு ரூ. 2 63 365 எடுத்து அதற்கென செலவு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது ரூ. 6 93 175 மதிப்புள்ள நிதிகள் உள்ளன.

நிதிகளினின்று இவ்வாண்டு கிடைத்துள்ள வருவாய் ரூ. 38 952 இதினின்று அநாதைக் குழந்தைகளுக்கு உணவு, உடை, புத்தகங்கள் வழங்கப்பெற்றுள்ளன; ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப் பெற்றிருக்கிறது; நன்ருகப் படிக்கிறவர்களுக்கும் விளையாட்டு வல்லுநர்களுக்கும் பரிசுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களுக்கு இவ்வாண்டு நன்கொடையாக வந்தது ரூ. 2 46 373 மொத்த வரவு ரூ. 62 88 686 மொத்த செலவு ரூ. 62 16 287 ஆக உபரி ரூ. 72 399 இத்தொகை ஏற்கனவே உள்ள கடன் பளுவைக் கொஞ்சம் குறைத்துள்ளது.

ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களுக்குத் தரும் நன்கொடைகளுக்கும், தம் பெயரால் ஸ்தாபனத்தில் நிதி அமைப்பதற்கும் வருமானவரி 80G விதிப்படி வரி விலக்கு உண்டு.

சித்பவானந்த
தலைவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம் - பிரசார விலை	ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை - பிரசார விலை	... 12-00
ஞானயோக விளக்கம்	... 8-00
ராஜயோக விளக்கம்	... 8-00
கர்மயோக விளக்கம்	... 7-00
பக்தியோக விளக்கம்	... 6-00
பரமஹம்சரின் பெருமை	... 6-00
விவேகானந்த விவரணம்	... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	... 4-00
விவேகானந்த உபநிஷதம்	... 4-00
கடவுளின் வடிவங்கள்	... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	... 3-50
தினசரி தியானம் - பிரசார விலை	... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை	... 3-00
அனுஷ்டான வேதாந்தம்	... 3-00
எதிர்கால இந்தியா	... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்	... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	... 2-00
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	... 2-00
கண்ணன் என்னும் கடவுள்	... 2-00
தாயுமானவர் இயற்றிய	
பரிபூரணானந்தம் விரிவுரை	... 3-00
சின்மயானந்த குரு ஷை	... 3-00
ஆனந்தமானபரம் ஷை	... 3-00
சுகவாரி ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம் ஷை	... 3-00
எங்குநிறைகின்றபொருள் ஷை	... 2-50
பரசிவ வணக்கம் ஷை	... 1-00
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	... 1-50
பஜனைப் பாடல்கள்	... 1-50
சந்நியாசி	... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்	... 1-00
இராவண தத்துவம்	... 1-00
சகோதரி நிவேதிதை	... 1-00
காயத்ரீ	... 1-00
வாலிமோக்ஷம் (நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்	... 1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	... 1-00
நோய்க்கு இடம் கொடேல்	... 0-80
நன்மக்களைப் பெறுதல்	... 0-80

பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்)	ரூ. 0-80
ஆத்ம சக்தி	... 0-75
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்)	... 0-75
இறைவணக்கம்	... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	... 0-75
*மனிதனது நிஜசொருபம்	... 0-70
*சக்தி தத்துவம்	... 0-70
*சிவ தத்துவம்	... 0-70
பிரஹ்லாதன் (நாடகம்)	... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	... 0-60
இந்து மதமும் கிறிஸ்துவ மதமும்	... 0-60
*ஆலய வழிபாடு	... 0-60
*சூரிய நாராயணன்	... 0-50
*முருகக் கடவுள்	... 0-50
*விஷ்ணு தத்துவம்	... 0-50
தெய்வீக மகிமைகள்	... 0-50
சைவன் யார்?	... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது	... 0-50
மார்க்கண்டேயன் (நாடகம்)	... 0-40
தபோபலன் (நாடகம்)	... 0-40
*கணபதி	... 0-40
வர்ணாச்ரம தர்மம்	... 0-30
அருள்விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	... 0-30
The Bhagavad Gita (9th Imp.)	... 15-00
The Indian National Education	... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram	... 8-00
Ramakrishna Lives Vedanta	... 8-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (DELUXE)	... 4-50
Daily Divine Digest (Ordinary)	... 2-50
Mahabharata (with plastic cover)	... 4-50
Ramayana (do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	... 4-00
Sri Vishnu Sahasranama Stotram	... 4-00
Siva Sahasranama Stotram	... 3-50
The Bhagavad Gita (Small Size)	... 3-00
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
*Introducing the Gita	... 1-50
TAT TVAM ASI (*That Thou Art*) IN Tayumana Swami	... 1-00
*Key to Higher Life	... 0-75
*The Teacher	... 0-60
*The Student	... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-25ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள். *இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 15—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ 1-00ம், மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

தர்மபுரி ஜில்லா—பாப்பாரப்பட்டியில் 15—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பழைய சுப்பிரமணிய சுவாமி கோவில்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தர்மபுரி ஜில்லா—பாலஜங்கமன ஹள்ளி 16—7—79 திங்கட்கிழமை

இடம்: அருள்மிகு பச்சையம்மன் தேவஸ்தானம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

புதுக்கோட்டை ஜில்லா

திருவரங்குளத்தில் அந்தர்யோகம்

21&22—7—79 சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களில்

திருவரங்குளம் வள்ளநாடு நகரத்தார் தவணை கட்டடத்தில், விடியற்காலை 5-30 மணி முதல் இரவு 9-30 மணி வரை வழக்கமான சாதனை முறைப்படி ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

உணவு, ஜாகை வசதிக்காக நபர் ஒன்றுக்கு ரூ. 10/- ஜூலை மாதம் 19ஆம் தேதிக்குள் திரு. S. அருணாசல முதலியார், வடகாடு ரோடு, ஆவண்குடிபோஸ்ட்-622 301, புதுக்கோட்டை மாவட்டம் என்ற விலாசத்திற்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும். பணம் அனுப்பி கலந்துகொள்ள இயலாத அன்பர்களுக்குத் தொகை திருப்பித்தர இயலாது. தாய்மார்களுக்குத் தங்க தனி இடவசதி உண்டு. 20—7—79ல் மாலை 5-30 மணிக்குள் திருவரங்குளம் வந்துசேர வேண்டும். புதுக்கோட்டையிலிருந்து ஆலங்குடி செல்லும் வழியில் 5 மைல் தொலைவில் திருவரங்குளம் உள்ளது. பன்னிரண்டு வயதிற்கு உட்பட்டவர்களும், அந்தர்யோக நடைமுறையைக் கடைப்பிடிக்க இயலாதவர்களும் அனுமதிக்கப்படமாட்டார்கள். 22—7—79 மாலை 5 மணிக்கு அந்தர்யோகம் முடிவு பெறும். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவர வேண்டும். அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக்கிடைக்கும்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம் உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.